கல்கி

KALKI 11.9.94 ரூ. 3.00



கல்யாணத்துக்குப் பின்னால்...

காதலுக்கு டாட்டா?

ஜெ.யை எதிர்த்து 'கிடுகிடு' போராட்டம்!

இடையில் கொஞ்சம் கமுக்கமாக இருந்த தமிழக காங்கிரஸ் உட்கட்சிப் பூசல், மூப்பனார் கோஷ்டியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர் செல்லக்குமாரை, தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவராக நியமித்ததன் மூலம், மீண்டும் பத்திரிகைகளுக்கு செய்தியாகி விட்டது.

"என்னைக் கலந்தாலோசிக்காமல் நியமனம் செய்து விட்டார்கள். ஆகையால் அவரை ஏற்றுக் கொள்ள மாட்டோம்" என்று சொல்கிறார் வாழப்பாடியார்.

"இவர் யார் என்னை ஏற்றுக் கொள்ள? இவரே ஒரு நியமனத் தலைவர்தான். என்னை நியமித்தவரும் பிரதமர்தான்" என்று இஞ்ஜெக்‌ஷன் போடுகிறார் டாக்டர் செல்லக்குமார்.

பேசுகையில், தெற்கத்தி வாடை வீசுகிறது. குமரி மாவட்டம் மார்த்தாண்டத்தைச் சேர்ந்தவர் செல்லக்குமார். அப்பா அருணா



• செல்லக்குமார்

சலம், சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர். பின்னர் மின் இலாகாவில் வேலைக்குச் சேர்ந்தார். அவருக்கு அடிக்கடி மாற்றல் காரணமாக செல்லக்குமாரின் பள்ளிப் படிப்பு பல்வேறு இடங்களில் தொடர்ந்தது.

"நான் குலசேகரத்தில் ஒன்பதாவது படிக்கும் போது, மாணவர் காங்கிரஸில் சேர்ந்தேன். எனக்கு இன்ஸ்பிரேஷன் காமராஜர்தான்" என்று சொல்கிறார்.

நாகர்கோயிலில் கல்லூரிப் படிப்பை முடித்து, செங்கை, பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் படிப்பை முடித்திருக்கிறார். அண்ணா நகரில் கொஞ்ச காலம் பிராக்டீஸும் செய்தது உண்டு.

"'கோமா'வில் இருந்த தமிழக மாணவர் காங்கிரஸுக்கு உணர்வு கொடுத்ததில் எனக்கும் பங்குண்டு. இரண்டு மாணவர் மாநாடுகள் நடத்தி அதற்கு குளுகோஸ் ஏற்றினேன். தடைகளைப் போட்டார் வாழப்பாடியார். ராஜீவ் காந்தி வரை சென்று நியாயத்தை எடுத்துச் சொல்லி, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்தேன்" என்கிறார்.

"சிலர், என்னை ஏற்றுக் கொள்ளாமல் தனித்தனியாக கூட்டங்கள் நடத்தி தலைவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளனர். இதெல்லாம் ஒரு ஏமாற்று வேலை.


"தமிழகம் முழுவதும், மாவட்ட அமைப்புகள் தவிர, மாநில நிர்வாக அமைப்புக்கும் நான் ஆட்களைப் போட வேண்டும்; அந்தப் பதவிகளுக்கு வந்துவிட வேண்டும் என்று நினைப்பவர்கள்தான் இது போன்று அதிருப்தியாளர் வேஷம் போடுவார்கள். ஏனென்றால், காங்கிரஸில் compromise formula படி, அதிருப்தியாளர்களுக்கும் அமைப்புகளில் இடம் கொடுப்பார்கள். ஆனால் என்னிடம் அந்தத் திட்டம் எடுபடாது" என்று உறுதியாகச் சொல்கிறார்!

"நகரப் பிரச்னைகள் மட்டுமல்ல, அரசு நில விற்பனை ஊழல்கள், பங்குகளை தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுப்பது போன்ற பல விஷயங்களையும் நான் சட்டசபையில் பேசியிருக்கிறேன். தொகுதியில் ஒவ்வொரு நாளும், வீடுகளுக்கே சென்று மக்களைச் சந்திக்கிறேன்" என்கிறார்.

"ஒரு மூன்று மாதம் டைம் கொடுங்கள். இளைஞர் காங்கிரஸ், மீண்டும் வேகமாகச் செயல்படத் துவங்கும்.

"அ.தி.மு.க. அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து, ஊழல்களை ஊரறியச் செய்ய, தெருக்களில் இறங்கி கிடு, கிடு போராட்டம் நடத்தியே தீருவோம்!" என்கிறார் செல்லக்குமார்!

— ப்ரியன்



துணுக்ஸ்

❖ கேரள போக்குவரத்து அமைச்சர் பாலகிருஷ்ண பிள்ளை. சிறிது நாள் முன்பு இவர் மின்சார இலாகா அமைச்சராக இருந்த போது, பெங்களூரில் உள்ள ஒரு கம்பெனிக்கு மின்சாரத்தை விற்று விட்டதாக அவர் மீது ஒரு வழக்கு. இந்த வழக்கு விசாரணைக்காக அமைச்சர் கோர்ட்டுக்கு வந்ததை, சில மலையாளப் பத்திரிகைகள் படம் எடுத்து செய்தி வெளியிட்டிருந்தது. இது இடது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஈ.கே. நாயனாருக்குப் பிடிக்கவில்லை.

"மின்சாரத்தை விற்று பணம் சம்பாதித்த பாலகிருஷ்ணனது செயல், ஒரு திருடன் செய்யும் செயலாகும். திருடன் படத்தை எல்லாமா பத்திரிகையில் போடுவது?" என நாயனார் பாலகிருஷ்ண பிள்ளையின் படத்தைப் போட்ட பத்திரிகைகளை எல்லாம் திருவனந்தபுரத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் வாங்கு வாங்கென வாங்கிய போது, கூட்டத்திற்கு வந்திருந்த கட்சித் தோழர்கள் நெளியத் தொடங்கி விட்டார்கள். காரணம், படம் வெளியான பத்திரிகைகளுள் ஒன்று, நாயனாரைப் பிரதான ஆசிரியராகக் கொண்ட 'தேசாபிமானி'!

- எஸ்.எஸ்.மணி.

❖ தீவிரவாத சமூக விரோத கும்பல்களிடமிருந்து கடவுள்களையே புல்லட்புருப் செய்து காப்பாற்ற வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் வந்து விட்டோம்!

அகமதாபாத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ ஜகந்நாதர், சுபத்ரா, பலராமர் தேர்கள் யாத்திரை கோலாகலமாக நடை பெறுகின்றது. அகமதாபாத் நகரம், வகுப்பு வாதக் கலவரங்களுக்குப் பெயர் போனது. எனவே இந்த ஆண்டு திருவிழாக் குழுவினர் தெய்வத் தேர்களுக்கு வன்முறைக் கும்பல்களால் எந்தவித ஆபத்தும் ஏற்படாமல் தடுக்க, புல்லட்புருப் கண்ணாடி வைத்தனர்!


'சண்டே'விலிருந்து - ஆலன்

❖ நாய், பூனை போன்ற பிராணிகளின் வயிற்றில் உணவு செரிக்காவிட்டால் அவை அருகம்புல்லைத் தேடித் தின்கின்றன. அதன் அரிப்பால் ஜீரணமாகாத உணவு வாந்தியாக வெளியேறி விடுகிறது. சிம்பன்சி குரங்குகள் அஸ்பீலியா இலைகளையும், பாபூன்கள் சிலவகை பழங்களையும், மார்க்கிகள் சில தளிர்களையும் உட்கொண்டு வெவ்வேறு வகை நோய்களிலிருந்து நிவாரணம் பெறுகின்றன. இதை விட அதிசயம், காஸ்டரிகாவின் ஹௌளர் குரங்கு, ஒரு குறிப்பிட்ட மூலிகையைத் தொடர்ந்து தின்னும் போது ஆண் குட்டியும், மற்றொரு வகை பச்சிலையையே உட்கொள்ளும் போது அதற்குப் பெண்குட்டியுமே தவறாமல் பிறப்பதுதான். முறையான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டால் இம் மூலிகைகள் மனித இனத்துக்கும் பயன்படக்கூடும்!

"ஹிந்து"விலிருந்து
- அ. ஷண்முகசுந்தரம்

❖ அமெரிக்காவில் சிறந்த படங்களுக்கு ஆஸ்கார் அவார்டு கொடுப்பது போல ஆண்டின் மிகவும் 'போர்'ஆன படங்களுக்கும் 'போராக' நடித்த நடிக நடிகைகளுக்கும் 'ரோஸ்பெர்ரி' என்ற 'போர்' விருது கொடுக்கப்படுகிறது!

- எஸ். ஆலன்



❖ WIFE — இதன் விளக்கம் என்ன தெரியுமா?

W = Worry
I = Invited
F = For
E = Ever

- மதுரை வானொலியில் கேட்டவர்:
கோவி. ஜெயநாதன்.


❖ ஒரு கிலோ காய் அல்லது கனிகளை ஒரு பாலிதின் கவரில் வைத்து, ஒரு குப்பியில் கட்ட கால்சியம் குளோரைடு (10-15 கிராம் அளவில்) வைத்துப் பின் காற்றுப் புகாத வண்ணம் பாலிதீன் பையை மூடிவிட வேண்டும். இவ்வாறு செய்தால் பழங்கள், காய்கறிகள் நிறம், தரம் மாறாமல் உலராமல் புத்தம், புதியதாய் பத்து-பதினைந்து நாட்கள் இருக்கும். இதற்கான செலவு ரூபாயில் அல்ல. பைசாக்களில் மட்டுமே. ஆம் அறு பது பைசாதான்.

- **மோகன்**

❖ அமெரிக்க சுற்றுப்புறச் சூழல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக் கழகங்கள், பயிர்களுக்குப் பூச்சி மருந்து தெளிப்பதைக் கட்டுப்படுத்துமாறு கிளின்டன் நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டுள்ளன. 1966 லிருந்து 1991 க்குள் 25 ஆண்டுகளில் அமெரிக்காவில் பூச்சி கொல்லிகள் பயன்படுத்துவது 125 சதம் அதிகரித்திருக்கிறது. ஆனால் ஸ்வீடன் அரசோ பூச்சி மருந்துகளைக் குறைத்து வர ஆணையிட்டு வெற்றி பெற்று வருகிறது. 86-90 இடைப்பட்ட நாலு ஆண்டுகளில் 47 சதம் குறைந்திருக்கிறது. இது அமெரிக்க அரசுக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதால் புற்று நோய் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்பது ஆராய்ச்சியில் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணம் ஆகியுள்ளது.

❖ பிளாஸ்டிக் பொருள்கள் மிகவும் உபயோகம் என்றாலும் அவற்றின் ஆயுள் முடிந்த பின் அவை மண்ணோடு மண்ணாகி மக்கிக் கரைவதில்லை. இது சுற்றுச் சூழல் பாதுகாப்புக்குப் பெருந்தலைவலி. இப்போது ஜப்பானிய நிறுவனம் ஒன்று ஓர் அமெரிக்க நிறுவனத்துடன் இணைந்து ஆராய்ச்சி செய்து, புதிய பிளாஸ்டிக் கண்டு பிடித்துள்ளது. சோளத்தின் 'ஸ்டார்ச்'சிலிருந்து தயாராகும் இந்த பிளாஸ்டிக்கை அதன் பயன் முடிந்ததும் மக்கவைத்தால் நீராகவும் கரியமில வாயுவாகவும் கரைந்து போகும்!

- **ஆலன்**



❖ பெங்களூர் மகாலட்சுமி புரத்தில் ஒன்றரை வயது ஆண் குழந்தை நாகப் பாம்பு கடித்து இறந்தது. சோகத்திலும் சோகம் என்னவென்றால் அக்குழந்தைக்கு விளையாட ரப்பர் பாம்பு, பிளாஸ்டிக் பாம்பு கொடுப்பார்கள் பெற்றோர். நிஜ பாம்பையும் விளையாட்டுப் பாம்பு என்று நினைத்து கையில் பிடிக்கப் போக, கடித்து விட்டது!

- **எஸ். நடராஜ்**

❖ இளஞ்சூடான வெந்நீரில், சிறிதளவு உப்பைக் கலந்து, அத்துடன் எலுமிச்சை சாறுகலந்து பருகி வர, உடற் பருமன் குறையும்.

• தொண்டையில் புண், பல்வலி தவிர்க்க சிறிது உப்பு கலந்த நீரினால் தொண்டை, வாய் கொப்பளித்தால் நல்லது.

• ஆடைகளில் படிந்த 'இங்க்' கறை, ரத்தக்கறை ஆகியவை சிறிது உப்பு கலந்த நீரில் தேய்த்து, பின் சோப்புப் போட்டால் நீங்கிவிடும்.

• பூந்தொட்டிகளில் உள்ள பூக்கள் வாடாமலிருக்க சிறிது உப்புக் கரைசலை ஊற்றலாம்.

• பச்சைக்காய்கறிகளை நறுக்கிச் சமைக்கு முன் உப்பு கலந்த நீரில் அலம்பினால் அதிலுள்ள கிருமிகள் கொல்லப்படுவதுடன் ஜீரண சக்திக்கும் நல்லது.

• அரிசி, பருப்பு இவற்றில் சிறிது உப்பு கலந்து வைத்தால் புழு, பூச்சி அண்டாது.

- **ஜெகனைவபால்ராஜ்**




❖ லல்லு பிரசாத் யாதவ் பற்றி ஒரு செய்தி : இவருக்கு நாள்தோறும் மஸாஜ் செய்பவர் முதல்வரிடம் இருந்த நெருக்கம், செல்வாக்குக் காரணமாக ரொம்பப் பிரபலமடைய, 'ஏன் நாமே மந்திரியாகக் கூடாது?' என்ற எண்ணம் தோன்றி விட்டது. லல்லுவிடம் எம்.எல்.ஏ. டிக்கெட் கேட்டார். லல்லு மறுத்துவிட, கோபித்துக் கொண்டு போய்விட்டார்! அவரிடத்தை நிரப்ப வேறு ஒருவர் நியமிக்கப்பட்டார். புதிய ஆசாமி முதன் மந்திரிக்குத் தூக்கம் வர, தினம் மூன்று மணி நேரம் மஸாஜ் செய்ய வேண்டியிருப்பதைத் தாக்குப் பிடிக்க முடியாமல் எடுத்தார் ஓட்டம்! லல்லு இப்போது வேறு ஒருவரைத் தேடுகிறார்!

- ஆலன்

❖ பூனா ரயில் நிலையம் அருகில் சமீபத்தில் 'லட்சுமன் தத்தாத்ரேய காட்டே' என்பவர் தீக்குளித்தார். கட்சிக்காகவோ, தலைவருக்காகவோ அல்ல. 'தவுண்ட் விவசாய விளை பொருள் விற்பனைக்கூட'த்தின் கூட்டுச் செயலரான இவர், அந்த நிறுவனத்தில் பலர் லஞ்சம் வாங்குவது பற்றி மேலிடத்துக்குப் பல முறை புகார் செய்தும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதால் மனம் நொந்து தீக்குளித்ததாக மரண வாக்குமூலம் தந்தார்!

ஆதாரம் : தி வீக்.

- சம்பத் குமாரி



❖ ராஜஸ்தான் - 'சஹரானுஸார்' என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் ஊருக்குச் சாலை போட வேண்டும் என்று போராடி வந்தனர்! அந்த ஊரின் ரயில்வே ஸ்டேஷனை இணைக்கும் இந்தப் பாதைக்காக - மாவட்ட கலெக்டரிடம் ஊர்வலமாகச் சென்று மகஜர் கொடுத்தனர்!

கலெக்டர் நிராகரித்து விட்டார்! காரணம், போன வருடம்தான் 4,30,000 ரூபாய் செலவில் சாலை போடப்பட்டதாக பைல்கள் கூறின!

- பார்கவி



❖ மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உலகில் டயனசார் என்ற ராட்சச மிருகங்கள் உலவி வந்தன. இவற்றில் சாக பட்சிணி, மாமிசபட்சிணி இரண்டு வகையும் உண்டு. இன்றைக்கும் அவற்றின் புதையுண்டு போன எலும்புச் சுவடுகள் கச்சிதமாகக் கிடைக்கின்றன. அவை எப்படி திடீரென்று இல்லாமல் போயின?

65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஒரு பிரும்மாண்டமான விண்கல் அல்லது வால் நட்சத்திரம் விசையுடன் இறங்கி, பூமி மீது மோதி, தாக்க, பெரிய நில அதிர்ச்சி ஏற்பட்டு, தூசி மண்டலம் எழுந்து, சூரிய ஒளியையே பல மாதங்களுக்கு இல்லாமல் செய்து விட்டிருக்க வேண்டும். அதனால் பச்சைப் பயிர்கள் முற்றிலும் அழிந்து போக, டயனசார்கள் உண்ண உணவின்றி மடிந்திருக்க வேண்டும் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு.

❖ நெருப்புக் கோழியின் மோப்ப சக்தி அதிசயமானது. தனது முட்டைகளை யாராவது தொட்டால் கூட அது தெரிந்து கொண்டுவிடும். அப்புறம் அந்த முட்டைகளை விட்டு வைக்காது. அவற்றை மிதித்து உடைத்து விடும். முட்டைகள் ஒரு லிட்டர் நீர் பிடிக்கும் அளவுக்குப் பெரியவை. இவை கூடு கட்டுவதில்லை. கூட்டங் கூட்டங்களாகத் திரியும். முட்டையிடும் சமயம் பெட்டைகள் ஒன்று சேர்ந்து, மண்ணைப் பறித்துக் குழி தோண்டி அதில் இடும். காவல் காப்பது ஆணின் வேலை. இரண்டு மனிதர்களைச் சுமந்து கொண்டு குதிரைகளை விட வேகமாக ஓடக்கூடியவை. இவற்றால் பறக்க முடியாது.

- அ. ராஜா ரஹ்மான்.

• 'கடிதம்' - தொடரில்
சாருஹாசன், மாஸ்டர் ஆனந்த்



களை கட்டுகிறது தூர்தர்ஷன்!

போட்டி அதிகமாகிவிட்டதாலோ என்னமோ தூர்தர்ஷனுக்கும் ஒரு விழிப் புணர்ச்சி ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. சமீப காலமாய் ஞாயிறு காலைகளில் வரும் ஒரு வார, இருவாரத் தொடர்களிலிருந்து இது புரிகிறது. ஜெயகாந்தன், சா. கந்தசாமி, இந்திரா பார்த்தசாரதி என்பது போன்ற பரிசுத்த இலக்கியப் பெயர்களெல்லாம் மெட்ராஸ் தூர்தர்ஷனில் வர ஆரம்பித்திருப்பதைப் புரட்சி எனலாமா? மறுமலர்ச்சி? ஏதோ ஒன்று.



• ஜேடி & ஜெர்ரி

இந்த ஒரு வார, இருவார விளம்பரதாரர் நிகழ்ச்சிகளுக்கு மக்கள் வரவேற்பும் நன்றாக இருக்கவே, தயாரிப்பாளர்களிடையே வெகு போட்டி. ஆளுக்கொரு கதையுடன் தூர்தர்ஷனை முற்றுகையிட ஆரம்பித்திருக்கிறார்கள்.

"இதில் சந்தோஷப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், கதை மட்டும் நன்றாக இருந்தால் நடராஜன், உடனே அப்ரூவல் கொடுத்து விடுறார். அவரே ஒரு எழுத்தாளர் அல்லவா?" என்கிறார் இசையமைப்பாளர் & தயாரிப்பாளர் தாயன்பன்.

• தாயன்பன்



ஓர்ன் வேஸ் சாலையில் கிருஷ்ண வேணி ஹவுஸ் என்கிற இடத்தில் (இலக்கிய சிந்தனை பரிசு பெற்ற) திலீப் குமாரின் 'கடிதம்' சிறுகதையை இருவாரத் தொடராகத் தயாரித்துக் கொண்டிருந்தவரைச் சந்தித்தோம்.

இந்தக் கதையை இயக்கி வரும் இளைஞர்களான ஜே.டி & ஜெர்ரி இருவருக்குமே இலக்கியத்தில் வெகு ஆர்வம்.

"தூர்தர்ஷனின் இப்புதிய மாற்றம் மிக ஆரோக்கியமானது. தொடர்ந்து எஸ். சங்கர நாராயணனின் சிறுகதை ஒன்றையும் - அன்றிரவு (இதுவும் இலக்கிய சிந்தனை பரிசு பெற்றது!) - படமெடுக்க அனுமதி கிடைத்துள்ளது. தூர்தர்ஷனிடம் நாங்கள் எதிர்

பார்ப்பதெல்லாம் இதுதான். இந்த ஒரு, இரு வாரத் தொடர்களில் சிறப்பாகச் செய்பவர்களுக்கு 13 வாரத் தொடர்களில் முன்னுரிமை வழங்க வேண்டும்!" என்கிறார்கள்.

"இலக்கியத் தரமான கதைகள் இன்று டி.வி.யின் அவசரத் தேவைக்காகப் படமாகும் போது கதையின் ஜீவன் கெட்டுவிடும் அபாயம் இருக்கிறதே? உதாரணமாக இந்த 'கடிதம்' சிறுகதை - ஒரு வயதானவர், தன் சொந்தக்காரருக்கு எழுதும் ஒரு கடிதமாகவே கதை முழுதும் விரிகிறது. (சாருஹாசன் நடிக்கிறார்.) Visual க்கு அதிகம் வாய்ப்பில்லாத நிலையில் இதை எப்படிப் படமாக்குவீர்கள்?"

"மேலோட்டமாகப் பார்த்தால் எடுக்க முடியாத மாதிரிதான் தோன்றும். ஆனால் கதையில் அந்தக் கிழவர், அவர் மகன், மருமகள்கள், நண்பர், சின்னப் பையன் ஒருவன் என்று பல கேரக்டர்கள் வருவார்கள். கதாசிரியர் சம்பவங்களுக்கு அதிக முக்கியத்துவம் தராமல், உணர்ச்சியைப் பிரதானப் படுத்தியிருந்தாலும் - ஒவ்வொருவர் கேரக்டரையும் மனத்தில் வாங்கிக் கொண்டு பொருத்தமான சம்பவங்களை -ஜீவன் கெடாதபடி சித்திரித்திருக்கிறோம். டி.வியில் வரும்போது பாருங்கள்"' என்கிறார்கள். (அநேகமாக அக்டோபரில் வரக்கூடும்.)

ஜோடி & ஜெர்ரி இருவரும் தொடர்வதாக, எம்.வி.வியின் காதுகள், சுந்தர ராமசாமியின் 13 சிறுகதைகள், க.நா.சுவின் கோதை சிரித்தாள் - இப்படி சமீப இலக்கியங்களை எல்லாம் தூசு தட்டி, அப்ளை பண்ணியிருக்கிறார்கள்.


"நாங்கள் மட்டுமில்லை. இன்னும் பல இளைஞர்களும் இப்படியாகத் தொலைக்காட்சிக்குப் படையெடுத்திருக்கிறார்கள்.

எங்களுக்கு ஒரே பிரச்னை - விளம்பரதாரர் மூலம் வரும் வருவாய் கைக்கும் வாய்க்கும் சரியாக இருக்கிறது. லாபம் என்பது சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை" என்கிறார்கள்.

தொ. காட்சியின் இம்முயற்சி மட்டும் வெற்றிகரமாகத் தொடருமானால் அதுவும் தானாகக் கைகூடி விடாதோ? Let them wait for that Spring!

— கிச்சா

படங்கள் : காமிரா திருஞானம்



கல்யாணத்துக்குப் பின் காத

எத்தனையோ சினிமாவில் பார்த்திருப்பீர்கள். கல்யாணத்திற்கு முந்தின ஸீன் வரை உற்சாகப் பிழம்பாய் குதித்து, நாலைந்து டூயட்பாடி, உலகத்தை மடித்து மணிபர்ஸில் போட்டுக்



கொண்டது போல் ஆடுவார்கள். கல்யாணம் ஆனதுதான் தாமதம்... எங்கிருந்தோ ஒரு புராணத் தன்மை ஓடிவந்து அவர்கள் உடம்பில் ஏறிக் கொண்டுவிடும். 'நாதா' என்று கூப்பிடாத குறை. முந்தின ஸீனில் குதித்ததெல்லாம் பொய்யாய், பழங்கதையாய்ப் போக, இன்டர்வலுக்கப்புறம் பெரும்பாலும் மூக்கு சிந்துவார்கள்...

சினிமா கொஞ்சம் மிகை வெளிப்பாடு என்றாலும் இந்த உணர்வு ரீதியிலான மாற்றம், கொஞ்சம் யோசிக்கப்பட வேண்டிய விஷயமே.

ஆண்களும் சரி, பெண்களும் சரி கி.மு. கி.பி. மாதிரி க.மு: க.பி என இரு முகங்களில்தான் எப்போதும் வலம் வருகிறார்கள்.

இந்த க.பி. (கல்யாணத்துக்குப் பின்னால்) காலகட்டத்தில் கால் வைக்கும் போதே ஆணுக்கும் சரி, பெண்ணுக்கும் ஒரு விநோதமான, புதிரான, பலவேறு உணர்ச்சிகளின் குவியலான உலகில் நுழைவது போன்ற முற்றிலும் மாறுபட்ட 'பிரமை' ஏற்படுவதால், பெரும்பாலும் மிரட்சியால் அலைக்கழிக்கப் படுகின்றனர்.

ஒரு உதாரணத்திற்கு - 28, 29 வயதில் திருமணமாகிறது என்று வைத்துக் கொள்வோம். காதோரத்தில் முளைக்கும் ஒரு சின்ன நரை அவர்களின் காதலை காணாமல் போகச் செய்து விடுகிறது என்று சொன்னால் நம்ப முடிகிறதா?

உண்மைதான்! வயதாகி விட்டதோ என்ற குழப்பம், இனி காதலெல்லாம்

லுக்கு டாட்டா?

நமக்கு அன்னியமானது என்ற உணர்வு, வாழ்க்கை பற்றிய திடீர் பயம் (அல்லது ஞானோதயம்) - இவையாவும் சொல்லி வைத்தாற் போல் வந்து சேர்ந்து விடும்!

'கடைசி வரை காதல்' என்கிற எழுச்சிக்கு முதல் வில்லன் இந்த வேண்டாத கற்பனைதான்!

காதல் மாயமாய் மறைவதற்கு அடுத்த முக்கியக் காரணம் சாப்பாடு! நம்புவது கஷ்டம் தான்! ஆனாலும் உண்மை. கல்யாணத்துக்கு முன்பு, 'நல்லா சமைப்பா' என்று ஒட்டுமொத்த சர்ட்டிஃபிகேட் தரப்பட்டு, கூட அனுப்பப்படும் பெண், சமையலில் ஒரு 'ஆவரேஜ்' ஆக இருக்கிற பட்சத்தில் அது வரை இருந்த (அல்லது வளர்த்துக் கொண்டிருந்த) காதல் உணர்வுகள், அன்பு, பாசம், நேசம் அத்தனையும் உடனே உடனே மறைந்து ஒரு வெறுமை சூழ்ந்து விடும் என்றால் நம்புங்கள்!

நம்மூர்க்காரர்கள் சாப்பாட்டு ராமர்கள்; 'வொரப்பு' ப்ரியர்கள். 'நல்லா சமைப்பா' என்பதை ஒரு சிறப்பு குவாலிஃபிகேஷனாக எடுத்துக் கொள்பவர்கள்.

பெண்களும் வேலைக்குப் போகிற இன்றைய அவசர யுகத்தில் 'நல்லா' சமைப்பது எப்படி?

இதைப் புரிந்து கொள்ளாததுதான் சிக்கலின் இரண்டாவது படி. இதற்கு இரு விதமான வெளிப்பாடுகள் உண்டு.

1. உள்ளுக்குள்ளேயே பொறுமுவது. சமயம் கிடைக்கும் போதெல்லாம் குத்திக் காட்டுவது. பேச்சுக்கு நடுவே 'காமண்ட்' அடிப்பது.

2. நேரடிச் சண்டை.

இரண்டையுமே பெண்கள் விரும்புவதில்லை! மாறாக ஆண்களின் ஒரு சின்ன பாராட்டு (எதற்காகவாவது) அவர்களை, தாங்களே தங்கள் குறையை உணரச் செய்து விடும்.

கணவன்மார்களும் சமையலில் கூட மாட உதவி பார்க்கட்டும்; அப்போது நடக்கிற கதையே வேறு. மனைவிக்கும் சமையலில் ஈடுபாடு அதிகமாகிறது. கணவனுக்கும் குறை கூறும் மனப்பான்மை குறைகிறது!

ஆண்கள், வீட்டு வேலையில் ஒத்துழைக்க வேண்டும் என்று எல்லாப் பெண்களும் விரும்புகிறார்கள். அது, மனைவியை நன்கு புரிந்து கொள்ளுதலின் வெளிப்பாடு என்று கருதுகிறார்கள்!

அடுத்த விஷயம். உண்மை நட்புக்கு ஏங்குவது. ஒவ்வொருவரும் தமக்குள், ஆதர்சக் கனவுகளோடும், அவரவர் அந்தரங்க மென்மை உணர்வுகளோடும் உலவுகின்றனர். கூடவே அவரவர் கஷ்டங்களும் சோகங்களும்.

இவைகளை வெளிப்படுத்த, பகிர்ந்து கொள்ள, வரப்போகிற வாழ்க்கைத் துணையையே பெரிதும் நம்பியிருக்கின்றனர். அவ் விஷயங்கள் என்னதான் அபத்தமாக இருக்கட்டும். ஆணோ, பெண்ணோ சொல்வதைக் கேட்டுக் கொள்வதில் ஆர்வம் காட்ட வில்லை என்றால் அந்த க்ஷணம் காதல், ஏமாற்றமடைந்து ஏக்கத்தில் வாடிவிடுகிறது!

"எனக்கு ரஜினி படம் பிடிக்கும், கோன் ஐஸ் பிடிக்கும்" இப்படி எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். அல்லது ஆபீஸ் சம்பந்தப்பட்ட பெரிய விஷயமாய் இருக்கட்டும்; 'ரிஸீவர்' அதைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டாக வேண்டும். கூடவே ஒரு ஆதரவான அரவணைப்பு... இது போதும் கடைசிவரை!

இன்றைய மனிதன், ஒரு தனிமை விரும்பி. தனக்கே உரிய படிப்பு, இசை, சிந்தனை என்று பலர் தனிமைப் பட்டுப் போயுள்ளனர். காதல் எப்போதும் நீடித்திருப்பதில் கணவனுக்கு நாட்டம் இருப்பினும், இந்தத் தனித் தன்மைகளை விட்டுக் கொடுக்கவும் அவன் தயாராயில்லை. இதைப் புரிந்து கொண்டு இல்லத்தரசியும் அதற்கு மதிப்பு அளிக்கத் தெரிந்து கொள்ள

அடுத்த இதழில்....

- **காவல் துறையின் பெயர் கெட்டது ஏன்?**
  - ஒரு பரபரப்பான அலசல்
- **தங்கக் கடத்தல் எப்படி நடக்கிறது?**

வேண்டும். இருவரும் சேர்ந்து ரசிக்கிற அம்சங்கள், இருவருமே தனித்தனியே ஈடுபாட்டுடன் அனுபவிக்கிறவை என்று இரண்டுக்குமே நேரம் ஒதுக்கிக் கொள்வது சாத்தியமே. எல்லாவற்றிலும் 'டேஸ்ட்' ஒரே மாதிரி இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதுதான் முக்கியம்.

நாற்பது வயதுக்காரர்களுக்கு, மற்றொரு பிரச்னை. 'தங்களுக்கு வயதாகி விட்டதோ' என்ற எண்ணம்! தோளைவிட உயர்ந்த பிள்ளை அருகில் இருக்கும் போது 'இன்னும் காதலெல்லாம் எதற்கு?' என்று தோன்றுவது இயற்கை. ஆனால் கவனியுங்கள், 'எதற்கு' என்று தோன்றுகிறதென்றால் 'இருக்கிறது' என்றுதானே பொருள்?

வலுக்கட்டாயமாக கணவன் - மனைவி பரஸ்பரம் அந்நியோன்யத்திலிருந்து விலகும் போது மனரீதியாக பல பிரச்னைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கணவனும் மனைவியும் ஒருவரிடம் ஒருவர் அன்பு செலுத்துவது கடமையே தவிர இதில் வெட்கப்படுவதோ, அவமானப்படுவதோ அர்த்தமற்ற செயல்.

ஐம்பதுகளின் ஆரம்பத்தில் பிறிதொரு 'மேனியா' தோன்றும். "வாழ்வில் ஒன்றுமே அனுபவிக்கவில்லை; உழைத்து, உழைத்து தேய்ந்து போனோம்" என்ற எண்ணம் வரும். டி -ஷர்ட்டும் ஜீன்ஸ"ம் அணிய ஆசை வரும்! புருவங்களைத் திருத்திக் கொள்ள மாடர்ன் ட்ரெஸ் அணிய, விளம்பரங்களில் வரும் பெண்களைப் போல் கூந்தல் பறக்க விட ஆசை வரும்! இதெல்லாம் காதல் சரியானவிதமாக வளர்ச்சி பெறாததால் தோன்றும் குழப்பங்கள்.

ஒவ்வொரு வயதுக்கும் உண்டான காதல் வளர்ந்து, பரிமளித்து, ஐம்பதில் கருணையும் கலந்து வெளிப்படுவது சிறப்பு. அப்போது மனைவியை மட்டுமின்றி, இயற்கையை, இளைஞர்களை, குழந்தைகளை, ஏன் உலகையே காதலிக்க முடியும்! மற்றவர்களை நுணுகிப் புரிந்து கொள்வதில், உணர்வுகளை மதிப்பதில் தம் அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்த முடியும்.

குறைகள், ஆண்/பெண் யாரிடமிருப் பினும் மன்னித்து, பெருந்தன்மையோடு நடந்து கொள்வதன் மூலம் பல அற்புதங்களைச் சாதிக்கலாம். ஆனால் நடப்பது என்ன? எதையும் பெரிசு படுத்தும் மனோபாவம் இன்று எங்கும் தெரிகிறது. விளைவு? எரிச்சல், கோபம். மன அழுத்தம்.

இந்த ஐம்பது வயதுக்காரர்களின் முக்கியப் பணி, எப்போதும் உடலுக்கும் சிந்தனைக்கும் தீனி போட்டுக் கொண்டிருப்பது தான். ஓய்வு, வம்புக்கு வழி வகுக்கும்!

கல்யாணத்துக்குப் பின்னால் கடைசி வரைக்கும் காதல், அன்பு போன்ற உணர்வுகள் நீடித்திருப்பது அவரவர் கைகளில்தான் உள்ளது. வாழ்க்கைத் துணையை ஆண்/பெண் இருவரும், 'கிடைத்தற்கரிய ஒரு பரிசு' என்று எண்ணத் தொடங்கி விட்டால் போதும்; பிரச்னைகள் தன்னால் ஓடி விடும்!

(20-25, 35-45, 50-70 வயது ஆண்/பெண் களிடம் பேசித் திரட்டியவை)

— துளசி

அட்டையில் : **ஆன்னி & சந்தோஷ்**

வண்ணப்படம் : **யோகா**

Kalki Shopping Page

Kalki Shopping Page

மனோதத்துவ நிபுணர்
Dr.R.M. சோமசுந்தர்
எழுதிய நூல்கள்

மருந்தில்லாத மனநல மருத்துவம் 25.00

டென்ஷன், கவலை, பயம் தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றைப் போக்கி மன அமைதியையும் நிம்மதியையும் தரும் நூல்.

டென்ஷனைப் போக்க வழிகள் 20.00

அன்றாட வாழ்வில் ஏற்படும் டென் ஷனின் பாதிப்பிலிருந்து விடுபட வழி வகுக்கும் சிறந்த நூல்.

குமரன் பதிப்பகம்
2, முத்து கிருஷ்ணன் தெரு,
(பாண்டிபஜார் அருகில்)
சென்னை - 600 017.

GEETHA GOLD COVERING

ஒரிஜினல் சிதம்பரம்
கோல்டு கவரிங்

எங்களிடம் ½ கிராம், 1 கிராம் செயின், நெக்லஸ், வளையல், கம்மல், உபயோகித்தபின் பணம் பெறும் நிபந்தனையுடன் கிடைக்கும்.

1 வருடம் முதல் 5 வருட உத்திர வாதத்துடன் கிடைக்கும்.

திருமணம் மற்றும் விசேஷ வைப வங்களுக்கு நகைகள் வாடகைக்குக் கிடைக்கும்.

கீதா கோல்ட் கவரிங்
75, ரங்கநாதன் தெரு,
(அன்பழகன் பழக்கடை)
தி. நகர், சென்னை 600 017.
போன் : 4341427

திக்குவாய்க்கு

நவீன
செயற்சிகிச்சை
அணுகவும்


P. சண்முகசுந்தரம் M.A.
(உளவியலாளர்)


C.G. ஜான்சன் M.Phil.,
(உளவியலாளர்)

நேஷனல் திக்குவாய் சிகிச்சை நிறுவனம்
மலர்விழி காம்ப்ளக்ஸ்,
428,100 அடி ரோடு, காந்திபுரம்,
கோவை - 12. Ph : (0422) 449331

BALDNESS

CAN NOW BE TREATED



ROMA

Herbal Hair Tonic

available at all Chemists & General Stores

★ Stops Hair Fall.
★ Promotes thick & long Hair growth.
★ Darkens grey hair.

MEDICALLY TESTED & CERTIFIED

Kalki Shopping Page

SIWA



Can a Clocck do more than show the time?

Contact for Trade & Complementary Enquiries :

Authorised Distributors :

SRINIVASA AGENCY

"Perry's view" D-39 Madlee Road, First Street, T.Nagar, Madras - 17. Phone : 4346454

ADYAR STUDENTS XEROX

Integrated Business Services


ADYAR	Opp.Adyar BusTerminus	Ph:411358
ANNASALAI	NearAnand Theatre	Ph:8521433
ANNANAGAR WEST	Thirumangalam Junction	Ph:6261764
PONDY BAZZAR	Next Nagesh Theatre	Ph:4346580
NUNGAMBAKKAM	NearGanpat Hotel	Ph:8278983
TEYNAMPET	Opp.Anna Arivalayam	Ph:454845
MYALAPORE	Opp.Jammi Building	Ph:4997380
GUINDY	Opp.Guindy RailwayStation	Ph:2347016
PARRYS	Opp.HighCourt	Ph:582513
TIRUPATHI	Opp.S.V.High SchoolPlayground	

ஸ்ரீ தேவி மூகாம்பிகை ஜோதிடம்

வயதாகியும் திருமணமாகவில்லையா? திருமணமாகியும் குழந்தை பிறக்க வில்லையா? கல்வி, தொழிலில் ஒரு மந்த நிலையா? வேறு தொழில் துவங்க ஒரு பயம். அயல் நாடு போகுவதற்கு வாய்ப்பு உண்டா இல்லையா?



இத்தகைய கேள்வி களுக்கு தீர்வுகாண அணு குங்கள் ஜோதிடர் பரம்பரை வழியாக வந்த இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, சிங் கப்பூர் சென்று பல இன மக் களின் பேராதரவு பெற்ற ஜோதிடர் **PROF. A.S.MANI** அவர்களை கீழ்கண்ட விலாசத்தில் சந்தியுங்கள்.




PROF. A.S.MANI

Sri Devi Mukambigai Jothidam

8/A, Shanthi Viheer complex, Madras - 4.

Ph: 840474 P.P(Near) Luz corner

தபால் மூலம் மூன்று கேள்விகள், 25/- ரூபாய் மட்டுமே.



விடுதலைப் புலிகள்
சந்திரிகா
ருத்ராட்ச மாலையா... புலிப்பல் மாலையா... கிட்டப்போய்த் தான் பார்க்கணும்...!
சமரசம்
பாக் பிரதமர்
சூனியக்காரி பொல்லாதவ
சூ! சூ! காஷ்மீரை விட்டு ஓடு...
இந்தியா
புளுட்டோனியம் கடத்துறா
இஸ்ரேல்
முன்னாள் பாக் பிரதமர்
ஜெர்மனி
அதிகப் பிரசங்கி! மரியாதை கத்துத் தாறேன்
ரஜமா ரெட்டி
என்னம்மா கரியைப் பூசிகிட்டான்... வா... வா... வா... அழகு சொட்டுதுபோ...
கட்சித் தாவல்
பிரதமர் முன்னிலையில் முதல்வர் மீது செருப்பு வீச்சு
ராஜசேகர ரெட்டி
என்.டி.ஆர்.



கல்கி



1994
செப்டம்பர் 11
பவ
ஆவணி 26
மலர் : 53
இதழ் : 6

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

69 அரசியலும் அம்பேத்காரும்!

முழுப் பக்க விளம்பரங்கள் மூலமும் மூலைக்கு மூலை முழங்குவதன் மூலமும் முதல்வரின் 69 வெற்றியைக் கொண்டாடும் பசப்புதல் பேர்வழிகளோ, அவர்களுடைய ''தெய்வத் தாயோ'', சமீபத்தில் அம்பேத்காரின் மனைவி என்ன சொல்லியிருக்கிறார் என்பதை அறிந்திருக்க மாட்டார்கள். அப்படியே அறிந்திருந்தாலும் தெரிந்தது போல் காட்டிக் கொள்ள மாட்டார்கள்!

திருமதி சவிதா அம்பேத்கார், 'உத்தரப்பிரதேச அரசின் தலைமைச் செயலரை அவர் பிராமணர் என்பதற்காகப் பதவி நீக்கம் செய்தது முற்றிலும் தவறு' என்று கூறியதுடன், 'பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர், ஜாதிப் பிரச்னையை அளவுக்கு மீறிக் கிளறுகிறார்' என்று சொல்லி, கன்ஷிராமைக் கண்டித்தும் இருக்கிறார்.

''மனு ஸ்மிருதி ஜாதிப் பிரிவுகளை வலியுறுத்துவதால் அதற்கு அம்பேத்கார் அதிருப்தி தெரிவித்தபோதிலும் அவர் திறமைக்கு முக்கியத்துவம் தந்தார்'' என்றார் சவிதா. 'இப்படிக் கூறுவதால் மற்ற ஜாதிக்காரர்கள் திறமையற்றவர்கள் என்கிறீர்களா?' என்று கேட்கப்பட்டபோது, ''திறமை என்பது யாருக்கும் ஏகபோக உரிமை கிடையாது என்பதைத்தான் வலியுறுத்துகிறேன்'' என்றார் சவிதா.

''கன்ஷிராம் இந்தியாவைப் பிரிக்கிறார்'' என்றார் சவிதா. ''அம்பேத்கார் இந்தியாவின் ஒருமைப்பாடுக்காகப் பாடுபட்டார். இருவரது நோக்கிலும் மலைக்கும் மடுவுக்கும் இடையில் உள்ள வேற்றுமை உண்டு.''

தொடர்ந்து, ''கன்ஷிராமை நான் எதிர்க்கவில்லை; எனது ஆசையெல்லாம் முன்னிலும் நன்றாகக் கல்வி அறிவு பெற்றுப் பரவலாக உள்ள தலித்துகள் ஒன்றுபட வேண்டும் என்பதுதான். அம்பேத்கார் ஆட்சேபித்த மனு ஸ்மிருதிக்கும் கன்ஷிராம் பேசும் பிராமண ஆதிக்கத்துக்கும் பெரிய அளவில் வித்தியாசம் உண்டு. இரண்டும் சமமாகி விடாது'' என்று விளக்கினார்: ''அம்பேத்காருக்கு ஜாதிகளற்ற சமூகம் உருவாக வேண்டும் என்பதுதான் நோக்கம்; கன்ஷிராம் ஒட்டுமொத்தமாகப் பிராமணர்களை எதிர்ப்பது தவறு; பிராமணர்கள் எல்லோருமே ஜாதி வெறியர்கள் அல்ல.''


இட ஒதுக்கீடு பற்றிப் பேசுகையில் சவிதா சொன்னார் : ''ஒதுக்கீடு அடிப்படையில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் பிள்ளைகளும் பெண்களும் கூடச் சலுகை பெறுவதைப் பார்க்கிறேன். பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில், வசதி படைத்தவர்கள் இட ஒதுக்கீடு சட்டம் மூலம் சலுகை பெறுவதைத் தவிர்க்க வேண்டும். ஒதுக்கீடு என்பது பொருளாதாரம், கல்வி ஆகிய அம்சங்களில் பின்தங்கியவர்களுக்கே பயன்பட வேண்டும். ஜாதி, மதம் ஆகியவை மட்டுமே அளவுகோலாகி விடக் கூடாது.''

தாம் ஓர் அரசியல்வாதி அல்ல என்றும் தமக்கு அத்தகைய ஆசைகள் ஏதும் கிடையாது என்றும் தெரிவித்த சவிதா, அம்பேத்கார் ஆரம்பித்த குடியரசுக் கட்சியில் கூடத் தாம் தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்.

சவிதாவுக்கு டாக்டர் அம்பேத்கார் திறந்தவெளிப் பல்கலைக் கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிய போதுதான் அவர் தமது கணவரின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் இவ்வாறு விவரித்துப் பேசினார். அவர் கன்ஷிராம் பற்றிச் சொன்னது உ.பி. அரசியலுக்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டுக்கும் மிகவும் பொருந்தும். ஒதுக்கீடு அரசியல் நடத்தும் பிற மாநிலங்களுக்கும் பொருந்தும்.

இட ஒதுக்கீடு தொடர்பாக அரசியல் சாசனத்தையே மாற்ற வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்பவர்கள், அந்த அரசியல் சாசனத்தை உருவாக்கியதும் அம்பேத்கார்தான் என்பதை அப்போது எண்ணிப் பார்ப்பதில்லை. எதைச் செய்தாலும் அரசியல் நோக்கும், சுயநலப் பார்வையும், வோட்டுக்கு வலை வீசும் போக்கும் நம் தலைவர்களின் கண்களை மறைக்கின்றன.

சமத்துவம் என்பது பணத்தால் வராது; சலுகைகளால் கிட்டாது; அது உள்ளத்தில் உருவாக வேண்டும். Education is the greatest equaliser என்பார் அறிஞர். தேசபக்தியையும், சகோதரத்துவத்தையும் வலியுறுத்தி, சுயசார்பினை வளர்க்கின்ற சிறந்த கல்வியை, நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் பதினைந்து வயது வரை திட்டமிட்டு அளிக்கின்ற நாட்டில்தான் சமத்துவ உணர்வு உருவாக முடியும். வேறு மார்க்கங்கள், பிரிவினையையே வளர்க்கும்; ஒருமைப்பாட்டை அல்ல.



மோட்டார் சைக்கிள் பரிசுத் திட்டம்!

பெரிய அளவில் பரிசுப் போட்டி வைத்து ரொம்ப நாளாகி விட்டது. ஆகவே இப்போது :

இந்த இதழிலிருந்து 26 வாரங்களுக்கு கல்கியை கவனமாகப் படித்து வாருங்கள். வாரா வாரம் அந்தந்த இதழ் சம்பந்தமாக ஒரு போட்டி இருக்கும். அந்தந்த வாரக் கூப்பனில் விடை எழுதி பத்திரமாக வைத்திருங்கள். 26 வார முடிவில் உங்கள் கூப்பன்களை மொத்தமாக எங்களுக்கு அனுப்புங்கள். அதிகப் போட்டியில் கலந்து கொண்டு, அதிக வெற்றி பெற்றவருக்கு ஒரு மோட்டார் சைக்கிள் பரிசு! ஒன்றுக்கு மேற்பட்டவர் தேர்வானால் இருக்கவே இருக்கிறது குலுக்கல்! ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

இனி இந்த வாரப் போட்டி

இந்த இதழின் ஏதோ ஒரு பக்கத்தில் வேண்டுமென்றே ஒரு தவறு செய்யப்பட்டிருக்கிறது. கட்டுரைகளிலோ, கதைகளிலோ, கேள்வி - பதில் இதர பகுதிகளிலோ - ஏன், இந்தப் பக்கத்திலேயே கூட அந்தத் தவறு செய்யப் பட்டிருக்கலாம்! கண்டு பிடித்து, கூப்பனில் எழுதி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். 26 போட்டிகளுக்கான விடைகளையும் மொத்தமாக அனுப்புங்கள்! யார் கண்டது? அதிர்ஷ்டசாலி நீங்களாகவும் இருக்கலாம்!

போட்டி - 1

இந்த இதழில் வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ள தவறு:


பெயர் :..

முகவரி :..

....

....

கட்டத்துக்குள் கட்டளைகள் - போட்டி முடிவு



முதல் பரிசு ரூ. 250/- பெறும் கட்டளைகள் :

1. பிராந்திய மொழி நன்கு அறிந்தவரே இயக்குனராக நியமிக்கப்பட வேண்டும்.

2. எல்லா நிகழ்ச்சிகளும் தணிக்கைக்கு உட்பட வேண்டும்.

3. தரக்கட்டுப்பாட்டுக் குழு ஒன்று அமைத்து, அதன் உறுப்பினர்கள் வெளிநாட்டு டீ.வி. நிறுவனங்களில் ஒரு வருட காலம் பயிற்சி பெற வேண்டும்.

4. லஞ்ச ஊழல் அறவே ஒழிக்கப்பட வேண்டும்.

5. நிகழ்ச்சி தயாரிப்பாளர்களுக்கு இசை, நாடகம், நாட்டியம் ஆகிய நுண்கலைகளில் ரசனை அவசியம்.

6. இரண்டாவது சானல் முழுதும் பிராந்திய மொழிக்கு ஒதுக்க வேண்டும்.

- ஆர். ராஜாராம், 7, 3 வது டிரஸ்ட் குறுக்குத்தெரு, சென்னை - 28.

நினைவலைகள்

6

The Difference between a bad film and a good film is its story.

The difference between a good film and a great film is its Director.

இது நானே சொன்னது.

ஒரு ரோட்டரி சங்கத்தில் பேசும்போது!

ஒரு இயக்குநர் மிகச் சிறந்த இயக்குநராக உயர்வதற்கு அடிப்படையான ஒரு குணம் அவரது தன்னம்பிக்கை.

எனது 'வானமே எல்லை' திரைப்படத்தில் 'காந்திராமன்' என்கிற பாத்திரத்திலே நடித்த தொலைக்காட்சி செய்தி ஆசிரியர் H. ராமகிருஷ்ணன் தன்னம்பிக்கையின் சிகரம்.

ஒரு ஊனமுற்றவராக இருந்தும் வாழ்க்கையிலே எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறார் என்று எண்ணிப் பார்க்கும் போது மலைப்புத்தான் ஏற்படுகிறது.

ஒவ்வொருமுறை அவரை நான் சந்தித்தபோதும் என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறார். செய்தி அறிவிப்பாளராக அவரை நான் தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறேன். என்னை சந்திக்க வேண்டுமென்று விருப்பம் தெரிவித்து, எனது அலுவலகத்திற்கு ஒருநாள் வந்தார். காரிலிருந்து அவர் இறங்கி வந்த போதுதான் அவர் ஒரு ஊனமுற்றவர் என்கிற உண்மை தெரிந்து அதிர்ச்சிக்குள்ளானேன். ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால் நான் திரைப்படத்தில் நடிக்கிறேன் என்று சொன்னபோது எனக்கு இரண்டாவது முறையாக அதிர்ச்சி ஏற்பட்டது.

'வானமே எல்லை' திரைப்படத்தில் உச்சக்கட்டக் காட்சியில் அவரை நல்லமுறையிலே பயன்படுத்திக் கொண்டேன். முதல் முறையாக எனக்கேற்பட்ட அந்த அதிர்ச்சி, திரைப்படத்தைப் பார்த்த அத்தனை பேருக்கும் ஏற்பட்டது. திரைப்படம் மிகப் பெரிய வெற்றி பெற்றதற்கு இந்த உச்சக்கட்டக் காட்சியும் ஒரு காரணம்.

இன்னொரு முறை மேடையிலே ஒரு கர்நாடக இசைப் பாடகராக சந்திக்கிறேன். முழு நேர இரண்டரை மணி நேரப் பாட்டுக் கச்சேரி செய்வதைப் பார்த்து மீண்டும் அயர்ந்து போனேன்.

படப்பிடிப்பு நடக்கும் போது 'லைட்டிங்' நடக்கின்ற இடை நேரங்களில் அவரிடம் பேசிப் பார்த்த போது உலகத்தில் உள்ள அத்தனை 'சப்ஜெக்ட்'கள் பற்றியும் அற்புதமாக உரையாடுகிறார்.

From Pin to Pearl.

இவ்வளவு பெரிய Optimism எப்படி அவருக்கு வந்தது? நான் கேட்டேன் :

"கால்கள் ஊனமுற்ற ஒரு துர்பாக்கிய நிலையில் எல்லாவற்றையும் ஜெயித்துக் கொண்டு இத்தனை தன்னம்பிக்கையோடு எப்படி இருக்க முடிகிறது உங்களால்?"

அவர் சொன்னார் :


"கால்கள்தானே ஊனம்? அந்தக் குறை என் இருதயத்தை பாதிப்பதில்லை."


சர்வ சாதாரணமாகச் சொன்னார்.

Hats off to Ramakrishnan.

தன்னம்பிக்கை என்பது ஆன்மா மாதிரி. ஒருமுறை வெளியேறி விட்டால் அது மீண்டும் திரும்பி வருவதில்லை.

1967.





'வானமே எல்லை'யில்
எச். ராமகிருஷ்ணன்

எனது 'பாமாவிஜயம்' திரைப்படத்தைத் தெலுங்கு மொழியிலே இயக்கிக் கொண்டிருக்கிறேன். ஜெமினி ஸ்தாபனத்திற்காக. தமிழ்ப் படத்தில் நடித்த அதே நடிகைகள் சௌகார்ஜானகி, காஞ்சனா, ஜெயந்தி இவர்கள். சம்பந்தப்பட்ட ஒரு காட்சி ஜெமினி ஸ்டுடியோவில் ஒரு தளத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஏழெட்டு முறைகள் ஒத்திகை பார்க்கப்பட்டு 'டேக்' எடுக்கிறேன்.

முதல் 'டேக்'. சரியில்லை.

இரண்டாவது டேக். இன்னும் நன்றாக வரலாம்....

மூன்றாவது 'டேக்' காமிரா ஓடி முடிய, 'கட்' என்று சொல்லி... 'இந்த டேக் O.K.' என்று சொல்கிறேன்.

படிப்பிடிப்பு தளத்திற்குள் உட்கார்ந்து கொண்டு படப்பிடிப்பைப் பார்த்துக் கொண்டிருந்த எஸ்.எஸ். வாசன் அவர்களின் புதல்வர் 'One more take' என்று சற்று உரக்கச் சொன்னார். நான் திரும்பிப் பார்த்தேன். அந்த ஷாட்டில் நடித்த நடிகைகளும் "நன்றாகத்தானே இருந்தது.. எதற்காக இன்னொரு டேக் வேண்டுமென்று இவர் கேட்கிறார்?" என்கிற மாதிரி அவரைப் பார்த்தார்கள்.

"இன்னும் கொஞ்சம் 'பெட்டரா' இருக்கலாம்" என்றார் அவர்.

நடிகைகள், சக ஊழியர்கள், டெக்னீஷியன்கள் எனது உதவியாளர்கள் அத்தனை பேருக்கும் ஒரு சஸ்பென்ஸ்!

எல்லோரும் என்னைப் பார்க்கிறார்கள்.

அந்த இடத்திலேயே மிகப் பெரிய வாக்கு வாதம் ஒன்று எழப் போகிறதோ என்கிற எதிர்பார்ப்பில் பார்க்கிறார்கள்.

பூதாகாரமான எனது குளோசப்; சில விநாடிகள் மௌனம். பேரிரைச்சலுடன் கூடிய Sound Track முழுவதும் cut பண்ணியது போல் ஒரு நிசப்தம். அப்பொழுது நான் கண்ணாடி அணியாத காலம். இருந்திருந்தால் ஒருவேளை வலது கை நடுவிரலால் கண்ணாடியை சரி செய்து கொண்டிருப்பேன்.

"சரி! இன்னொரு டேக் எடுக்கலாம்" என்று நிதானமாகச் சொன்னேன்.

மீண்டுமொருமுறை காமிரா ஓடியது; அதே வசனங்கள்; அதே நடிப்பு; அதே movements. காமிரா, டிராலியில் சரியாக நிற்க வேண்டிய இடத்தில் வந்து நிற்கிறது...

'கட்' என்று சொல்லி அவரைப் பார்த்தேன்.

'O.K.' என்று வாசன் புதல்வர் சொன்னார்.

அடுத்த 'ஷாட்' வைப்பதற்கு முன் கைக்கடிகாரத்தில் மணி பார்த்தேன். மதியம் 12.55 ஆகியிருந்தது. அது சாப்பாட்டு நேரம். 'Pack up' என்று சொன்னேன்.

எனது உதவியாளர் நினைவுபடுத்தினார் :

"'Pack up' என்று சொல்லிவிட்டீர்களே, 'Break' என்று சொல்வதற்குப் பதிலாக....! மத்தியானமும் கண்டின்யூ பண்ணுகிறோம்" என்று நினைவுபடுத்தினார்.....

"இல்லை! சரியாகத்தான் சொன்னேன்!

Pack up என்று'' என்று சொல்லிவிட்டு படப்பிடிப்பு தளத்திற்கு வெளியே நின்ற காரில் ஏறச் சென்றேன்.

தயாரிப்பு நிர்வாகிகளும் ஏனைய எனது உதவியாளர்களும் என்னைத் தொடர்ந்து வர, எனது கார் 'விருட்'டென்று கிளம்பிச் செல்ல, காமிரா தென்னை மர உயரத்திலிருந்து படம் பிடித்தது போல், அவர்கள் ஒன்றும் புரியாமல் ஒருவரையொருவர் திகைப்புடன் பார்த்துக் கொண்டு நின்றனர்.

மதியம் 3 மணி அளவுக்கு பிரதம தயாரிப்பு நிர்வாகி எனது வீட்டிற்கு வந்தார்.

''இதுவரை ஏறத்தாழ 75 சதவிகிதம் படப்பிடிப்பை நான் முடித்து விட்டேன். மீதியுள்ளதை வேறு ஒரு நல்ல இயக்குநராக வைத்து ஜெமினி ஸ்தாபனம் முடித்துக் கொள்ளலாம். எனக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை... ஏற்கெனவே நான் செய்து முடித்த பணிகளுக்கு ஒரு பைசா கூட முன்பணமாக நான் பெறவில்லையென்பதினால், என் பெரு மதிப்பிற்குரிய ஜெமினி ஸ்தாபனத்திற்கு இது நான் செய்த தர்ம சேவையாக இருக்கட்டும்; பெரியவர் எஸ்.எஸ். வாசன் அவர்களிடம் சொல்லி விடுங்கள்'' என்று சொன்னேன்.

''இந்த விஷயம் ஏற்கெனவே 'Boss' அவர்களின் காதுகளுக்கு எட்டி விட்டது... மிகவும் வருத்தப்பட்டார். இனி எந்த விதமான குறுக்கீடும் இருக்காது என்றும் நாளையிலிருந்து மீண்டும் படப்பிடிப்பு தொடர வேண்டுமென்றும் உங்களிடம் சொல்லி விட்டு வரச் சொல்லி 'Boss' அனுப்பித்தான் நான் வந்திருக்கிறேன்'' என்று தயாரிப்பு நிர்வாகி சொன்னார்.

'Boss' என்பது எஸ்.எஸ். வாசன் அவர்களைக் குறிக்கும்.

மறு நாளிலிருந்து மீண்டும் படப்பிடிப்பு தொடங்கியது. எந்த ஒரு குறுக்கீடும் இல்லாமல்!

தமிழிலே நான் எழுதி இயக்கிய அந்த 'பாமாவிஜயம்' திரைப்படம் Midland தியேட்டரில் திரையிடப்பட்ட போது தொடர்ந்து 100 நாட்களும் House Full காட்சிகளாக நடைபெற்ற பெருமை பெற்றது. அதிலே ஒவ்வொரு ஷாட்டும் ஒவ்வொரு காட்சியும் ரசித்து, ரசித்து எடுத்தவன் நான். அத்தனை பேரையும் ஆட்டிப்படைத்து ஒவ்வொருவருக்கும் நடிப்பு சொல்லிக் கொடுத்து எடுத்த படம். சாதாரணமாகவே எல்லோரும் என்னை ஒரு 'Perfectionist' என்று குற்றம் சாட்டுவார்கள். ஒவ்வொரு 'Frame' ஐயும் ஆழ்ந்த கவனத்தோடு எடுப்பவன் நான்.

'You should think of each shot as you make it as the most important one in the film'' — Henry Blanke என்பவர் இப்படிச் சொல்லியிருக்கிறார்.



• பாமா விஜயம்
(படம் உதவி : பிலிம் நியூஸ் ஆனந்தன்)

ஆகவே நடந்து முடிந்தது Ego Clash அல்ல; 'இவர் என்ன சொல்வது? நாம் என்ன கேட்பது?' என்கிற வரட்டு கௌரவம் அல்ல!

இது தன்னம்பிக்கையினுடைய வெளிப்பாடு; தன்னிச்சையாகச் செயல்பட்டு தன் முடிவிலும், தனது தீர்மானத்திலும், தனது 'Judgement' மீதும் நம்பிக்கை வைக்கின்ற ஒரு தனி மனித உரிமை.

Ego என்பது ஒரு 'நெகட்டிவ்' குணம். தன்னம்பிக்கை ஒரு 'பாஸிடிவ்' குணம்.

ஒருவேளை தன்னம்பிக்கையோடு எடுக்கப்படுகின்ற சில முடிவுகள் சில நேரங்களில் தோல்வியைத் தழுவலாம்; என்றாலும் தன்னம்பிக்கைதான் மனித மேம்பாட்டிற்கு அடிப்படையான ஒரு குண நலன்.

கல்லானாலும் சரி; புல்லானாலும் சரி; The Director is the Boss. எந்த நிஜமான கலைப்படைப்பும் ஜனநாயக முறையில் உருப்பெறுவதில்லை.

இன்னொரு சம்பவத்தையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அது மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் சம்பந்தப்பட்ட விஷயம்.

(அடுத்த இதழில் சந்திப்போம்.)



நகரத்தின் வாசனை கூட எட்டாத அளவிற்கு மிகவும் உள்ளடங்கியிருந்தது அந்த கிராமம். அங்கு மனிதர்களின் எண்ணிக்கையை விட, பனைமரங்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருந்தது. ஓங்கி

பதனீர்பட்டி

ஈரோடு. என். சாரதாப்பிரியன்

வளர்ந்தாலும், மக்களுக்கு நிழல் தராத மரமென்று - பனைமரத்தைப் பழித்துக் கூறுவார் உண்டு.

ஆனால், பதனீர்பட்டி மக்களைப் பொறுத்தவரையில் - அவர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பதே அந்தப் பனைமரங்கள்தாம். அவைகள் தரும் பதனீரால்தான், அவ்வூர் மக்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு வாழ்க்கைப் போராட்டத்தின் தேவைகள் தீர்த்து வைக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

அங்கிருந்து நான்கு மைல்களுக்கு அப்பால் ஒரு நூல் மில் இயங்கிக் கொண்டிருந்தது. இல்லாத ஊரில் இலுப்பைப் பூதான் சர்க்கரை என்பது போல - பதனீர் பட்டிக்கு அந்த நூல் மில்தான் மணிக்கூண்டு.

காலை ஐந்து மணிக்கு ஒருமுறை சங்கு ஊதுவார்கள். சங்கு சத்தம் கேட்டதும், பதனீர் பட்டி மக்கள் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்து விடுவார்கள்.

மாயக் கருப்பன் வீடு அந்நேரம் முதலே களைகட்டத் துவங்கி விடும். காலம் காலமாக லைசென்ஸ் வாங்கி, பதனீர் இறக்கும் பல குடும்பங்களில், அவருடைய குடும்பம்தான் முதன்மையானது என்று வையுங்களேன்.

ஐந்து மணி சங்கு ஊதியதும் - பத்து வயதுச் சிறுமி முதலே அறுபது, எழுபது வயதுக் கிழவி வரை ஒவ்வொருவரும் பானைகளோடு மாயக் கருப்பன் வீட்டுக்கு வந்து குழுமி விடுவார்கள்.

பதனீரை விற்றுத் தான் அவர்களின் பசித் தீ அணைக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டு, மாயக்கருப்பன் மிகவும் நியாயமான விலைக்கு அவர்களுக்குப் பதனீரைக் கொடுப்பார். அவர்களும் தங்களுக்குத் தேவையான அளவு இரண்டு லிட்டரோ, நான்கு லிட்டரோ வாங்கிச் செல்வார்கள்.

வீட்டுக்குச் சென்றதும் அதில் தத்தம் மனசாட்சியைப் பொறுத்து தண்ணீர் கலப்பார்கள். நான்கு லிட்டர் பதனீரைக் கொண்டு இருபது லிட்டர் பானையை நிறைத்து விடுவார்கள். இனிப்புக்குத் தேவையான அளவு 'சாக்கரீன்' கலந்து விட்டால், சுவையும் மணமும் குன்றா மல் பதனீர் தித்திப்பாக இருக்கும்.

தீமையைத் தராத பொய்யும் வாய்மையைச் சேர்ந்ததே என்பது போல் - கெடுதலைத் தராத இந்தக் கலப்படம், காலம் காலமாக அவர்களின் தொழில் ரகசியமாய் இருந்து வந்தது.

அவர்கள் இப்படிச் செய்தால்தான் ஐந்தாறு மைல்களுக்கு அப்பால் உள்ள நகரத்திற்கு பானையைத் தலையில் சுமந்து செல்வதற்கான கூலியாவது கிடைக்கும்.

தெரு தெருவுக்கு 'பதனீ... பதனீ..' என்று வாய் நோகக் கூவியவாறே நடையாய் நடந்து - ஒரு தம்ளர் நாலணா என்று விற்று விட்டு, அதில் கிடைக்கும் கொஞ்ச வருமானத்தில் வீட்டுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை வாங்கி - அவற்றை அந்த காலிப் பானையிலேயே போட்டுக் கொண்டு, மீண்டும் சுமையுடனேயே வீடு திரும்புவார்கள்.

உலகில் வியர்வை மட்டும் விலை போகிற மாதிரி இருந்தால், பதனீர்பட்டியைச் சேர்ந்த

பெண்கள் ஒவ்வொருவரும் கோடீஸ்வரர்கள் தாம்.

மாயக்கருப்பன் பதனீர் விற்பனை மட்டுமல்லாமல் - தினசரி மீதமாகும் கணிசமான அளவு பதனீரைக் கொண்டு, மதியத்திற்கு மேல் பெரிய கொப்பறையில் கருப்பட்டி காய்ச்ச ஆரம்பித்து விடுவார். அந்த வேலைக்கும் பக்குவம் தெரிந்த நான்கு ஆண்களையும் இரண்டு பெண்களையும் நிரந்தரமாக அமர்த்தியிருந்தார்.

இப்படியெல்லாம் கடும் உழைப்பு உழைத்தும் கூட அவர்கள் வாழ்க்கை என்னவோ கஷ்டஜீவனம்தான். அதற்காக அவர்கள் ஒரு நாளும் கவலைப்பட்டவர்களல்ல... அரை வயிற்றுக் கஞ்சிக்காவது தினசரி வழி தேடிக் கொடுக்கும் பனைமரங்களையும், மாயக்கருப்பனையும் அவர்கள் தெய்வமாக நினைத்துப் போற்றி வந்தார்கள்.

பதனீர்பட்டி மக்களின் அடிப்படைத் தேவைகள் குறித்து அரசாங்கம் இதுவரை அக்கறை எடுத்துக் கொண்டதே இல்லை.

பஸ் வசதி இல்லாமல், பள்ளிக்கூட வசதியில்லாமல்- ஏன், மின்சார வசதி கூட இல்லாமல், எடுப்பாரில்லாத அனாதைக் குழந்தையாகவே அந்தக் கிராமம் ஏங்கிக் கிடந்தது...

தேர்தல்கள் வரும் போது மட்டும் அரசியல்வாதிகள் தேடிப் பிடித்து வந்து விடுவார்கள்... திருவோட்டை ஏந்தாக் குறையாக மக்களிடம் ஓட்டுப் பிச்சையெடுப்பார்கள்.

மாயக்கருப்பன் ஒருவர் தான் அந்தக் கிராமத்தில், எழுத்துக் கூட்டி சற்று அரையும் குறையுமாய் எழுதத் தெரிந்தவர். வேட்பாளர்கள் ஓட்டுக் கேட்க எப்படியும் வருவார்கள் எனத் தெரிந்து, ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே முத்துக் கோர்ப்பது போல் எழுத்துக்களை ஒவ்வொன்றாகக் கோர்த்து, கிராமத்தின் அடிப்படைத் தேவைகள் குறித்து மனு தயாரித்து விடுவார்.

ஒவ்வொரு தேர்தலின் போதும் இப்படி மனு தயாரித்து வேட்பாளர்களிடம் கொடுப்பது ஒரு சடங்காக இருந்து வந்ததே தவிர, கண்துடைப்பாகக் கூட ஒரு பலனும் ஏற்பட்டதில்லை.

நிலாவைப் பிடித்துத் தருகிறேன்; நட்சத்திரங்களைப் பிடித்துத் தருகிறேன் என்று கூறி குழந்தைகளை ஏமாற்றுவது போல் - காலம் காலமாய் அரசியல்வாதிகள் இந்த அப்பாவிகளை ஏமாற்றியே ஓட்டு வாங்கி வந்தார்கள்.

அப்படி சென்ற முறை வந்து ஓட்டு வாங்கி ஜெயித்தவன் மதனராஜன்... அதற்கு முன்பு அந்தத் தொகுதியில் ஜெயித்தவர்களெல்லாம் வெறும் எம்.எல்.ஏ.வாகத்தான் இருந்தார்கள்... ஆனால், மதனராஜனுக்கோ மந்திரி சபையிலே இடம் கிடைத்து விட்டது.

மதனராஜனுக்கு மந்திரிப் பதவி கிடைத்தது தம்முடைய அதிர்ஷ்டம்தான் என்று பதனீர்பட்டி மக்கள் நம்பிக் கொண்டிருந்தனர்...

மாயக்கருப்பன் வீட்டில் பதனீர் வாங்குவதற்காக கூடியிருந்த போது அதில் ஒருவன் சொன்னான் -

"இன்னமே நம்மளோட கஷ்டம் ஒவ்வொன்னா தீந்துரும்னு நெனைக்கிறேன்... மதனராஜன் மந்திரியாயிட்டாரில்லே. இதுவரைக்கும் மாயக்கருப்பன் குடுத்த மனுவுக்கெல்லாம் இனிமேதான் மரியாதை கிடைக்கப் போகுது... என்னங்கண்ணா சொல்றீங்க?"

"ஆங்... மரியாதையாவது மண்ணாங்கட்டியாவது... மதனராஜன் மந்திரியாகி ஒன்றரை வருஷமாயிப் போச்சாண்டா... நமக்கென்னமோ முந்தா நாளுதான் தெரிஞ்சிருக்குது. ஒன்ர வருஷத்துலே ஒருநாள் கூட இந்தப் பக்கம் வந்து எட்டிப் பாக்காதவனா இனிமே வந்து நம்ம கஷ்டத்த தீக்கப் போறான்? எனக்கென்னமோ சுத்தமா நம்பிக்கையில்லே...'' என்றார், மாயக்கருப்பன்.

ஒரு கிழவி கையில் வைத்திருந்த பானையைத் தரையில் நெக்கென்று வைத்து விட்டு,

''நீ என்னடா கருப்பா இப்புடிச் சொல்லிப் போட்டே... மத்த பயலுகளோட ஒன்னா நம்ம மதனராஜனையும் நெனச்சுப் போட்டியா... அவனோட அப்பன் இந்த ஊரு மண்ணுலே பொறந்தவனாக்கும்.. அப்பன் பொறந்த ஊர் மேல மவனுக்கு கொஞ்சமாச்சும் அக்கறை இருக்காதா, என்ன? நீ வேணா பாரு, கூடிய சீக்கிரத்துலே நம்மளுக்கெல்லாம் ஒரு நல்ல காலம் பொறக்குதா இல்லையான்னு...'' - என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாள்.

அவள் பேசி முடிக்கவும், "உய்ங்..." என்று ஓசை கேட்டது.

கிழவி அவசர அவசரமாகச் சொன்னாள் - "பாத்தியா, நல்ல சகுனம்... மில்லுல சங்கு ஊதிட்டாங்க..."

"சும்மா இரு பாட்டி... இந்த நேரத்துலே மில்லுலேர்ந்து எந்த சங்கு ஊதுறாங்க... வேற எதாச்சும் இருக்கும்" என்று ஒருவன் கூற

அப்போது வாசலில் சைரன் ஒலியோடு ஒரு போலீஸ் ஜீப்பும், வேனும் வந்து நின்றது. போலீசார் தபதபவென்று இறங்கி,



"உன் மனைவி சாமி படத்துக் கிட்டே மட்டும்தான் பாடுவான்னு சொல்றியே, ஏன்?"

"சாமியாலதானே எழுந்து ஓட முடியாது!"

- டி. என். பாலகிருஷ்ணன்

பரபரப்போடு நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்.

ஜனங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. மாயக்கருப்பனை நெருங்கி வந்த இன்ஸ்பெக்டர்,

"இங்க யாராச்சும் சாராயம் காய்ச்சறீங்களா?" என்றார்.

மாயக்கருப்பனுக்கும் மற்றவர்களுக்கும் திக்கென்றது.

"இல்லீங்கய்யா. அரசாங்கமே காச்சி விக்கச் சொன்னாலும், இந்த ஊர்லே யாரும் அந்தப் பாவத்தச் செய்ய மாட்டோமுங்க..."

இன்ஸ்பெக்டர் "வெரிகுட்" என்றவாறே மாயக்கருப்பனையும் மக்களையும் ஒரு சுற்று பார்வையிட்டார்.

"ஐயா... இத்தன வருஷமா இல்லாமே இப்போ திடுதிப்புனு இந்த ஊருக்குள்ளே வந்து அலாசுறீங்களே... யாராச்சும் இங்க சாராயம் காச்சுறதா சொன்னாங்களா?" - மாயக்கருப்பன் கேட்டார்.

"யாரும் சொல்லலே. இந்தத் தொகுதியிலே கள்ளச் சாராயத்த சுத்தமா ஒழிச்சுட்டதா, நம்ம மந்திரி மதனராஜனுக்கு முதலமைச்சர் பாராட்டி பரிசு குடுக்கப் போறாங்கல்லே..."

"அப்படீங்களா?" - கூட்டத்தில் ஒருவன் இடைமறித்து மகிழ்ச்சியோடு கேட்டான்.

"என்ன அப்புடீங்களா? நீங்கள்லாம் பேப்பர் படிக்கிறதே இல்லையா?"

"இல்லீங்களே.. எங்களுக்குப் படிப்பு சுத்துக் குடுக்கணும்னு எங்க அப்பா அம்மாவுக்கும் தோணலீங்க... இந்த அரசாங்கத்துக்கும் அக்கறையில்லீங்க..." - மிகவும் பரிதாபமாய்ச் சொன்னான் அவன்.

"ஜூன் ஒண்ணாந்தேதி பாராட்டு விழா... அதுக்கு இடையிலே மூலை முடுக்கில எவனாவது கள்ளச் சாராயம் காய்ச்சுனான்னு பத்திரிகைக்கு நியூஸ் போயிட்டா, மந்திரிக்கு அசிங்கமாயிருமில்லே... அதனாலதான் சுத்தமா ஒரு ஏரியா விடாமே அலசுறோம்..." என்றார் இன்ஸ்பெக்டர்.

ஊரை அலசி விட்டு போலீஸார் வியர்த்து விறுவிறுக்கத் திரும்பி வந்து "ஒண்ணுமில்லீங்க சார்" என்றனர்.

உடனே ஜீப்புக்குத் திரும்பிய இன்ஸ்பெக்டர் ஓங்கி வளர்ந்திருந்த பனை மரங்களையும், அதில் கட்டப்பட்டிருந்த பதனீர் முட்டிகளையும் பார்த்து விட்டு என்ன நினைத்தாரோ தெரியவில்லை, மனத்தில் ஏதோ நெருடல் ஏற்பட்டவராக,

"அதெல்லாம் என்ன?" என்றார்.

மாயக்கருப்பன், "பதனீங்க" என்றான்.

"பதனியா, கள்ளா?"

"சத்தியமா பதனிதாங்க."

"சரி.. எதா இருந்தா என்ன... எதிர்க்கட்சிக்காரனோ, பத்திரிகைக்காரனோ வந்து போட்டோ புடிச்சு கள்ளு இறக்குறாங்கன்னு கட்டுரை எழுதிட்டா, மந்திரிக்கு பாராட்டும் கிடைக்காது, பரிசும் கிடைக்காது. அதுக்கப்புறம் எங்க டங்குவாரு அறுந்துரும்.. யோவ்! அந்த முட்டிகளையெல்லாம் முதல்ல உடைங்க..." - இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டார்.

மாயக்கருப்பனும் மக்களும் அதிர்ந்து பரிதவித்தனர்.

"ஐயய்யோ... அதுதாங்க எங்களுக்கு சோறு போடற தெய்வம். சத்தியமா அது பதனிதாங்க. நாங்க முறையா லைசென்சு எடுத்துதாங்க செஞ்சுகிட்டு வர்றோம்..." பதறினார் மாயக்கருப்பன்.

"யோவ், அதெல்லாம் முடியாதுய்யா... மந்திரி பரிசு வாங்குற வரைக்கும் நீங்க யாரும் மரத்துல முட்டி கட்டக் கூடாது."

"ஐயா... மந்திரிக்குப் பரிசு குடுக்க இன்னும் முழுசா ஒரு மாசம் இருக்குதுங்களே... அதுவரைக்கும் மரத்துல முட்டி கட்டலீன்னா, வயித்துல பசியக் கட்றது எப்புடீங்க... அவ்வளவு நாள் தாங்க முடியாதுங்க... முட்டிகள உடைக்க வேண்டாம்னு சொல்லுங்கய்யா..."

மாயக்கருப்பனோடு மக்கள் சிலரும் சேர்ந்து கொண்டு, இன்ஸ்பெக்டரின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார்கள்.

ஆனால் பலன்?

பானைகள் உடைந்து பதனீர் ஒழுகியது. பரிதவிப்போடு பார்த்துக் கொண்டிருந்த மக்களின் கண்களில் கண்ணீர் ஒழுகியது. புழுதியைக் கிளப்பிக் கொண்டு ஜீப் புறப்பட்டுப் போனது.

வழக்கம் மாறாமல் அடுத்த நாளும் விடியத்தான் செய்தது. நூல் மில்லில் இருந்து ஐந்து மணி சங்கும் ஒலிக்கத்தான் செய்தது. ஆனால், பதனீர்பட்டி மக்கள் மட்டும் வழக்கத்திற்கு மாறாய் அழுது வடிந்த கண்களோடும் - கனத்த நெஞ்சோடும் இருண்ட வீட்டுக்குள்ளேயே அமர்ந்திருந்தார்கள்...



மரணம் மிகக் கொடுமையான விஷயம்தான். அதை முதன் முதலில் - நேருக்கு நேர் சந்தித்த அனுபவம் அதைவிடக் கொடுமையானது. இங்கே நான்கு டாக்டர்கள் முதல் மரண சந்திப்பு அனுபவத்தைச் சொல்கிறார்கள்:

டாக்டர் டி. கண்ணன் :

நான் தொழிலுக்கு வந்த புதிது. ஒரு புற்று நோயாளியை ட்ரீட் பண்ணிக் கொண்டிருந்தேன். அவர் ஒரு பெரிய பிஸ்கெட் தொழிற்சாலையின் அதிபதி. நோய், மிக முற்றிய நிலையில் - அவர் பிழைப்பது கடினம் என்பது தெரிந்து போனதும், அவரது உறவினர்கள், "இவர் இறந்து விட்டால் பல கோடி சொத்துக்கு வாரிசு யார் என்பதே தெரியாமல் போய் விடும்; நீங்கள் அவரிடம் பேசி உயில் எழுத ஏற்பாடு செய்து விடுங்கள்" என்று என்னிடம் சொன்னார்கள்.

என்னவோ மாபெரும் பொறுப்பு நமக்கு வந்து விட்டது என்கிற நினைப்பில் அன்றிரவே அவரிடம் போய், அவரது அந்திமக் காலம் நெருங்கி விட்டதை லேசாகச் சொல்லி, உயில் எழுதி வைத்து விடும்படிச் சொன்னேன். அவரும் அவ்வண்ணமே செய்து முடித்தார். அன்றிரவே அவர் உயிரும் பிரிந்தது!



• டாக்டர் கண்ணன்

'ஒரு நோயாளியிடமே அவரது கடைசி காலம் நெருங்கி விட்டதைச் சொல்லியதால் ஒருவேளை அவர் மனோரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கலாமோ? அதனால் ஒருவேளை இன்னும் சில நாட்கள் இருந்திருக்கக்கூடிய அவர், அப்போதே இறந்து விட்டாரோ?' என்கிற எண்ணம் இன்றுவரை என்னை ரொம்ப 'டிஸ்டர்ப்' பண்ணிக் கொண்டேயிருக்கிறது.

டாக்டர் வி. அலமேலு :

சேலம் அருகில் உள்ள மல்லிக்கரை கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் எனக்கு போஸ்டிங்.



• டாக்டர் அலமேலு

ஒருநாள் காலை ஆறு மணிக்கு, ஆஸ்பத்திரி அருகிலேயே ஒரு கிழவி மேல் வண்டி ஏறி, ரத்த வெள்ளத்தில் தூக்கி வந்தார்கள். O.P. ஏழு மணிக்குத்தான். இருப்பினும் வேறு வழியில்லாமல் அந்தக் கிழவிக்கு முதலுதவி செய்து, தையல்களும் போட்டு விட்டேன்.

விஷயம் கேள்விப்பட்ட தலைமை மருத்துவர், "ஆக்ஸிடெண்ட் என்றால் போலீஸ் கேஸ் இல்லையா? சம்பந்தப்பட்டவர்களிடம் கையெழுத்து வாங்கினாயா? ஏதாவது இசைகேடாக நடந்து விட்டால் நீதான் பதில் சொல்ல வேண்டும்!" என்றெல்லாம் சொல்ல, மிரண்டு விட்டேன்.

இதற்குள், அந்தக் கிழவியின் உறவினர்கள் ஓடி வந்து, "யாருங்க அட்மிட் பண்

ணது?" என்று அதிகாரமாய்க் கேட்க, 'என் பாடு அம்போதான்' என்று முடிவு செய்தவனாய் விழித்து, "போலீஸ்ல சொல்லப் போறீங்களா?" என்று பயந்து கேட்டேன்.

"போலீஸா? நீ ஏம்மா ட்ரீட்மெண்ட் குடுத்தே? இது பெரிய ரவுசு பிடிச்ச கெழவி. செத்தா நல்லதுதான்!" என்று சொல்ல, ஒரு கணம் அந்தக் கிழவிக்காக அனுதாபப்பட்டேன்.

அதே சமயம் - அவளும் என் கண் முன்னே உயிர் துறக்க... ரொம்ப நாளைக்கு என் மனத்தை விட்டு அந்தக் காட்சி நீங்கவேயில்லை. 'அவள் சாகட்டும்' என்று சுற்றத்தார் ஒட்டுமொத்தமாகச் சொல்லும் அளவுக்கு அப்படி என்ன அந்தக் கிழவி தவறு செய்திருப்பாள்? -இன்று வரை விடை கிடைக்காத கேள்வி!

டாக்டர் கே. விஜயலட்சுமி :

ஒரு பெண் விஷம் குடித்து விட்டதாகத் தூக்கி வந்தார்கள். நான் சில 'டெஸ்ட்' செய்து பார்த்ததில், அது பொய் என்று தெரிந்தது. 'ஏன் பொய் சொன்னாய்?' என்று அவளிடம் கேட்டேன்.



• டாக்டர் விஜயலட்சுமி

அவள் புருஷன் தினம் குடித்து விட்டு வந்து கொடுமைப்படுத்துவதாகவும், அவனுக்கு ஒரு 'அதிர்ச்சி வைத்தியம்' தருவதற்காகவே தான் அப்படி நடித்ததாகவும் சொல்லி, "தயவுசெய்து என்னை இரண்டு நாட்கள் வைத்திருந்து, பின் அனுப்புங்கள்' என்று கேட்டாள்.

இது தப்பு. இருப்பினும் அவள் நிலைக்காக இரங்கி, அன்று ஒரு நாள் மட்டும் மருத்துவமனையிலேயே வைத்திருந்து விட்டு, மறுநாள் அவள் கணவனைக் கூப்பிட்டு சில புத்திமதிகள் சொல்லி, கூட அனுப்பினேன்.

இரண்டு நாள் கழித்து அந்தப் பெண் நிஜமாகவே விஷம் குடித்து, இறந்து விட்டதாகச் செய்தி வந்தது. கூடவே ஒரு கடிதம்.


"டாக்டருக்கு,

நான் சொல்லிக் கேளாமல் மறுநாளே என்னை அனுப்பி விட்டீர்கள். அன்று முழுக்க என் புருஷன் குடித்து விட்டு, 'பொய்யா சொன்னாய்' என்று என்னை மிகவும் அடித்து, உதைத்து, கொன்று விட்டார். துக்கம் தாங்காமல் நானே விஷம் குடித்து விட்டேன்.

"இரண்டு நாட்கள் நீங்கள் என்னை வைத்துக் கொண்டிருந்தால் இந்த நிலை வந்திருக்காதல்லவா?" என்று எழுதியிருந்தாள்!

நல்லது செய்யப் போய் இப்படி ஆனதே என்று இன்னமும் வருத்தமாக இருக்கிறது!

டாக்டர். பி. ராமகிருஷ்ணன் :



• டாக்டர் ராம கிருஷ்ணன்

ஸ்ரீரங்கத்தில் இருந்தபோது ஒருநாள், அண்ணன் - தம்பி இருவர் என்னிடம் வந்து தம் தாய் சாகக் கிடப்பதாகச் சொல்லி அழைத்துப் போனார்கள். வழியெல்லாம் இருவரும் ஒரே அழுகை!

'இத்தனை பாசமுள்ள பிள்ளைகளா!' என்று நான் ரொம்ப ஆச்சர்யப் பட்டுப் போனேன்.

வீட்டுக்குப் போனதும் அவர்கள் தாயைப் பரிசோதித்தேன். பிழைக்க மாட்டார்கள் என்பது புரிந்து போய் விட்டது. வருத்தத்துடன் அந்த சகோதரர்களிடம் இதைத் தெரிவித்தது தான் தாமதம். ஓடிப் போய் ஒரு கட்டிங்-பிளேயர் கொண்டு வந்து, அந்தத் தாயின் கழுத்தில், கையில் இருந்த நகைகளையெல்லாம் வெட்டி எடுத்து வைத்துக் கொண்டு, மீண்டும் அழ ஆரம்பித்தார்கள்!

அந்த அம்மாவும் கொஞ்ச நேரத்தில் இறந்து விட, அவர்கள் அழுகை இன்னும் அதிகமாகியது!

எனக்கு, அந்த அம்மா இறந்த வருத்தம் ஒருபுறம், இவர்களின் நீலிக் கண்ணீர் பற்றிய இகழ்ச்சி ஒருபுறம். மன பாரத்துடன் திரும்பினேன்!

தொகுப்பு : **மாலதி சந்திரசேகரன்**

"இப்போ நம்ம கட்சி எவ்வளவோ வளர்ந்திருக்கு தலைவரே!"

"எப்படி சொல்றீங்க?"

"முன்னே இரண்டு கோஷ்டிங்க தானே இருந்துச்சு. இப்ப ஆறேழு கோஷ்டிகள் இருக்கே...!"

— கடுவைகோபால்சாமி



[illegible] வியாபாரிகள்

11

செய்தித் தாளைப் படித்து முடித்த அபூர்வா புன்னகை செய்தாள்.

அன்று ஒரே செய்தி. அச்செய்தி அவள்தான்!

ஏராளமான புகைப்படங்கள்! பக்க வாட்டத்தில், நேருக்கு நேராக; புன்னகை செய்தவாறு; சிந்திக்கும் போது... எல்லாம் கலர்ப் படங்கள்!

அபூர்வாவுக்குச் சிறிது அச்சமாக இருந்தது. இந்த அளவுக்கு அவளுக்கு விளம்பரம் கொடுக்க என்ன காரணம்? தலைவரைப் பற்றி அவள் இதுவரை அறிந்திருந்த விவரங்கள் உண்மையானால் இம் மாபெரும் விளம்பரம் அவள் மனத்தை நெருடியது. இது சாத்தியமா?

அவளை இவ்வாறு முன் நிறுத்திக் காட்ட வேண்டுமென்றால், இது நஞ்சுண்டனின் கைங்கர்யந்தான்; அவன் இதைத் தலைவரின் அனுமதி இல்லாமல் செய்திருக்க முடியாது. இந்த அளவுக்கு அவனுக்குத் தலைவரிடம் செல்வாக்கு இருக்கிறதா? இந்தச் செல்வாக்குக்கு என்ன காரணம்?

நேற்றிரவு அவளிடம் பேசியவர் யார்? ஆணா, பெண்ணா என்று குரலை நினைவுப்படுத்திப் பார்த்தாலும் அவளால் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. தலைவராக இருக்குமோ?

அக் குரலுக்குரியவர் தலைவர் என்றால், தலைவர் பெரிய ரஸிகராக இருப்பாரென்று தோன்றுகிறது. குரலில் பளிச்சிட்ட நையாண்டித்தனம் அதை உணர்த்திற்று. அரசியலை ஒரு விளையாட்டாக எடுத்துக் கொண்டு அதை ஆடி வருகிறாரென்று அவளுக்குத் தோன்றிற்று. சதுரங்க விளையாட்டு. இரண்டு பக்கத்து ஆட்டத்தையும் அவரே ஆடுகிறார். நகர்த்துப் படும் காய்களாக இருப்பதைத் தவிர வேறு தகுதி இந்த நாட்டு மக்களுக்கு இல்லையோ? இப்பொழுது அவளும் வேதபுரத்துப் பிரஜை... அப்படியென்றால்...

வாசல் மணி ஒலித்தது.

புடைவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டே வனிதா உள் பக்கத்திலிருந்து வெளியே வந்தாள்.

'இரண்டு தலைப் பாம்பு ஒன்றின் ஒரு தலை இன்னொரு தலையைப் பார்த்துக் கூறியது. 'நீ முட்டாள்!' அந்த இன்னொரு தலை சொன்னது, 'நீதான் முட்டாள்!' இரண்டு தலைகளும் சண்டையிட்டு ஒன்றையொன்று விழுங்கின'.

('வேதபுரத்து நாடோடிக் கதைகள்' - தொகுத்தவர் வீரமார்த்தாண்டன். பக் : 703)

கதவைத் திறக்க எழுந்திருந்த அபூர்வா, வனிதாவைப் பார்த்துவிட்டு உட்கார்ந்தாள்.

ஒரு சின்ன கூட்டம்.

தலைமை, கலியமூர்த்தி - தம்புசாமி. இருவர் கையிலும் ஆளுயர மாலை. அவர்களுக்குப் பின்னால் ஐந்தாறு தொண்டர்கள்.

"நாமகள் செல்வி."

"வாழ்க..." என்ற கோஷம்.

"என்ன இது?" என்று சிறிது கோபத்துடன் வினவினாள் அபூர்வா.

தம்புசாமி அவள் கழுத்தில் மாலையைப் போட முயன்ற போது அவள் தடுத்தாள்.

"எனக்கு இதெல்லாம் பிடிக்காது... தயவு செய்து."

"உங்களை எங்களுக்குத் தெரியும்னு சொல்லிக்கிறதிலே எங்களுக்குப் பெருமை.... தயவு செய்து..." என்று சொல்லிக் கொண்டே மாலையைப் போட்டுவிட்டார் தம்புசாமி.

உடனே கலியனும் செயல்பட்டார்.

அபூர்வா மாலைகளை மிகவும் கஷ்டப்பட்டு எடுக்க முயன்றாள். நல்ல கனம், வனிதா அவளுக்கு உதவினாள்.

"நேத்து ரொம்பப் பிரமாதமா கேள்விக்கெல்லாம் பதில் சொன்னீங்கன்னு பேப்பர்லே இன்னிக்குப் படிச்சோம். உங்களைப் பார்த்த அன்னைக்கே எனக்குத் தெரியும். அம்மா ரொம்ப தூரம் போவீங்கன்னு... வந்த கொஞ்ச நாளிலேயே, போயிட்டீங்க. உச்சாணிக் கொம்பு...! உங்களுக்கு சேவை செய்யவே நாங்க பொறந்திருக்கோம்.... என்னங்க கலியன்...?"

"ஆமாம், ஆமாம்... நான்தான் முதல்லே அம்மாவைப் பார்த்து வீட்டைக் கொடுத்தேன். அப்பொவே எனக்குத் தெரியும், எனக்கு அவ்வளவு புத்தி இல்லாட்டாலும்..." என்று கலியன் சொல்லி முடிப்பதற்குள் வனிதா கேட்டாள், "என்ன தெரியும்?"

கலியன் அவளைக் கோபமாகப் பார்த்தார்.


"இப்போ அந்தத் துவாரத்தை அடைச்சாச்சு, குளிக்கிறப்போ தெரியாது, பார்க்க முடியாது" என்றாள் வனிதா புன்முறுவலுடன்.

கலியனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை, இப்பொழுது ஏணியின் மேல் படிக்கு ஏறிவிட்ட அபூர்வாவுக்கு வேண்டியவன். அவரிடம் அடியும் திட்டும் வாங்கிய கழுதைக்கு இன்று மவுசு வந்து விட்டது. அவளைப் பார்த்து வேதனையுடன் புன்னகைதான் செய்ய முடியும். வேறு என்ன செய்ய?

"இப்போ அதெப்பத்தி என்ன பேச்சு?" என்றார் கலியன் பலஹீனமான குரலில்.

அபூர்வாவும் வனிதாவும் உட்கார்ந்தனர். தம்புசாமியும் கலியனும் தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை உட்காரச் சொல்லலாமா என்று ஒரு கணம் யோசித்த அபூர்வா வேதபுரத்துப் பண்பாட்டுக்கேற்ப அவர்கள் தொடர்ந்து நிற்பதுதான் உசிதமென்றுபடவே, பேசாமலிருந்து விட்டாள்.

"சரி நீங்க போகலாம்" என்று தம்புசாமி சொன்னதும் தொண்டர்கள் அந்த இடத்தை விட்டு அகன்றனர். சில விநாடிகள் அமைதி.



"ஒரு சின்ன வேண்டுகோள், உங்களுக்குச் சின்னது. எங்களைப் பொறுத்தவரையிலும் பெரிசு, நீங்க ஆணையிட்டா சொல்றேன்," என்றார் தம்புசாமி தொண்டையைச் செருமிக்கொண்டே.

"என்ன?"

"பல வருஷமா மாவட்டத் தலைவராகவே இருந்திட்டு வர்றேன். ஒரே சீரான வரும்படி. முன்னேற்றம் எதுவுமில்லே. எனக்கு அந்தச் சாமார்த்தியமுமில்லே, மத்தவங்க மாதிரி... இப்போ, எனக்கு நல்லா தெரிஞ்சவங்க நீங்க, உசந்த நிலைக்கு வந்திட்டீங்க... எனக்கு ஒரு சின்ன உபகாரம் செஞ்சா போதும்..."

"என்ன உபகாரம்?"

"தலைவருக்கு ஒரு கோயில் கட்டலாம்னு இருக்கேன். இடம் கூட தேவையில்லீங்க... என்னோட கள்ளுக்கடைகளை மூடிட்டு, அந்த இடத்திலே கோயில் கட்டலாம்னு எண்ணம். நீங்க சொல்ல வேண்டிய இடத்திலே சொல்லி அனுமதி வாங்கித் தரணும்...."

"வரும்படி கூடலேங்கிறீங்க, கோயில்னா செலவு இல்லியா?"

"ஆமாங்க.. முதல்லே செலவுதான். ஆனா அப்புறம் கோயில் திருவிழா அது இதுன்னு நல்லா பணத்தைப் பார்க்க முடியுங்க... கள்ளுக் கடைகளை நான் மூடத் தயாரா இருக்கிறப்போ... பார்த்துக்கங்களேன்."

"நான் எப்படி அனுமதி வாங்கித்தர முடியும்னு நினைக்கறீங்க?"

"நான் ஒரு கொசு மாதிரிங்க... எப்படி நீங்க வாங்குவீங்கன்னு எனக்கு எப்படிச் சொல்லத் தெரியும்?"

கலியனுக்கு இதில என்ன லாபம்?"

"ரெண்டு பேருந்தான் கட்டப்போறோம். என் வீட்டுல நீங்க குடியிருக்கீங்க.. அதுவே எனக்குப் பெருமை.... இனிமே எனக்கு நீங்க வாடகை கூடத் தர வேணாம். இந்தக் காரியத்தைப் பாத்து முடிச்சுக் கொடுத்தீங்கன்னா, ரொம்ப உபகாரமா இருக்கும்" என்றார் கலியன்.

"எனக்கு என்ன செய்வீங்க?"


"என்ன செய்யணும் சொல்லுங்க... பதினைஞ்சு..."

"ஆயிரமா, லட்சமா, கோடியா?"

"என்ன இப்படிக் கேக்கறீங்க? ஆயிரம் பிச்சைக் காசு. கோடிக்கு நாங்க எங்கே போவோம்?" என்றார் தம்புசாமி.

"என்னைப் பொறுத்தவரைக்கும் லட்சமும் பிச்சைக் காசுதான்."

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.



"இருபத்தஞ்சு வச்சுக்கங்க... இதுக்கு மேலே எங்களாலே முடியாதுங்க... நாங்க ஏதோ ஒரு பிரியமா கேக்கிறோம், தயவு செய்து பாத்துச் செய்யுங்க..."

இவ்வாறு சொல்லிக் கொண்டே தம்புசாமி கையில் வைத்திருந்த பையை அவள் காலடியில் வைத்தார்.

"என்ன இது?"

"முன் பணம். அஞ்சு இருக்கு..."

"எடுங்க பணத்தை" என்றாள் அபூர்வா சிறிது கோபத்துடன்.

"என்ன இப்படிச் சொல்றீங்க?"

"எனக்குப் பணம் வேணாம்."

"பின்னே?"

"இந்த வீட்டை வனிதா பேர்லே கலியன் எழுதிவைக்கட்டும். அது போதும்."

"அதெப்படி! இது என் வீடு... தம்புசாமிக்கு என்ன வந்தது, 'சரி'ன்னுடுவாரு..." என்றார் கலியன்.

"அதை நீங்க ரெண்டு பேரும் 'அட்ஜஸ்ட்' பண்ணிக்க வேண்டிய வேலை. எனக்கும் அதுக்கும் சம்பந்தமில்லே..." என்றாள் அபூர்வா.

"இந்த வீட்டுக்கு மதிப்பு பத்து லட்சமிருக்கும். நான் உங்களுக்குப் பாதிப் பணம் தரேன், சரிதானே?" என்றார் தம்புசாமி கலியனிடம்.

"ஊருக்கு மத்தியிலே, கடை கண்ணி இருக்கிற இடத்திலே வாகா அமைஞ்ச இந்த வீட்டோட மதிப்பு பத்து லட்சமா? யார் கிட்டே காது குத்தறீங்க?"

"நான் மாவட்டத் தலைவர், மரியாதையாப் பேசுங்க..."

"சரிதான் போய்யா... அம்மாவை நான்தான் என் வீட்டிலே கொண்டு வச்சேன். உங்களை விட எனக்குத்தான் உரிமை உண்டு. அம்மா, உங்களோட தயவிலே நான் கோயில் கட்றேன். எனக்கு அனுமதி வாங்கித் தாங்க. இந்த வீடு உங்களுக்குத்தான், பத்திரம் எழுதித் தர்றேன்" என்றார் கலியன்.

"எனக்கில்லே... வனிதாவுக்கு."

"இது அநியாயம். நான் உன்னை 'ஐடியா' சொல்லிக் கூட்டியாந்தேன். நீயே நேரே பேரம் பேசத் தொடங்கிட்டியே, உருப்படுவியா? இதோ பாருங்க, நான் என் வீட்டை எழுதித் தர்ரேன். நான் இப்போ இருக்கிற

''பக்கத்து வீட்டுப் பெரியவங்களை உங்களுக்குப் பிடிக்கலைன்னா.. அவங்க வீட்டுக் குழந்தைகளுக்கு டமாரம், பீபீ... ஊதல்... விசில்... இப்படி சப்தம் போடறதா வாங்கித் தரணுமா?''

— கார்த்திக் ராஜா

வீடு இல்லே... பெரிய தெருவிலே நாப்பது லட்சம் இன்னி மார்க்கெட் ரேட்லே... உங்க தகுதிக்கு அதுதான் லாயக்கு. இது கோமணம் மாதிரி என்னய்யா வீடு?''

''எனக்கில்லே... வனிதாவுக்கு...''

''என்னங்க, அரண்மனை மாதிரி வீடு தாரேங்கிறேன்... இவ பேரிலே எழுதித்தாங்கிறீங்களே, நல்லவாருக்கு? இவ யாரு?''

''பாத்தீங்களா, இந்த ஆளு திமிரை? உங்களுக்கு வேண்டியப்பட்டவங்க, நீங்களே பிரியப்பட்டு இவங்களுக்குச் சரி சமானமா உங்க பக்கத்திலே நேத்து உக்கார வச்சிருக்கீங்க. நான் டீவியிலே பாத்தேன். இவன் இவங்களை எப்படித் துச்சமா பேசறான்? வனிதா பேரிலே இன்னிக்கே இந்த வீட்டை சாஸனம் பண்ணித் தர்ரேன்... எனக்குக் கோயில் கட்ட அனுமதி வாங்கித் தாங்க, தராமெ இருங்க... அதைபத்திக் கவலையில்லே. உங்க பிரியம் எனக்கு வேணும், அது போதும்...'' என்றார் கலியன்.

தம்புசாமியின் கண்கள் சிகப்பேறின. தாடை இறுகியது.

''நீ பொறுக்கியா திரிஞ்சுக் கெடந்தே... உன்னை ஒரு ஆளாக்கினவன் நான். இப்போ நீ இப்படிப் பேசற அளவுக்குக் கொளுப்பு ஏறிக் கிடக்கு இல்லே?'' என்றார் தம்புசாமி.

''அட சீ! நீ என்ன சீமானுக்குப் பொறந்த மவனா? நீயுந்தான் அல்லாடிக்கிட்டுக் கிடந்தே! கட்சியினாலே எல்லாரும் வளர்ந்தோம். நம்ம நாட்டிலே யாரைப் பத்தி யார் பேசறத்துக்கு யோக்கியதை இருக்குது?''

அபூர்வா எழுந்தாள். ''சரி, ரெண்டு பேரும் சண்டை போட்டுக்கிட்டது போதும். சமாதானமா ஒரு முடிவுக்கு வந்து என்னை வந்து பாருங்க. இப்போ நீங்க போகலாம்'' என்றாள் ஓர் உறுதியான குரலில்.

இருவரும் பேசாமல் ஒருவரையொருவர் கோபத்துடன் பார்த்துக் கொண்டு நின்றனர்.

''ஏன்யா, 'போங்க'ன்னு அம்மா சொல்றாங்க, புரியலியா?'' என்றாள் வனிதா.

''வனிதா... என்னை உனக்கு... உங்களுக்கு நல்லாத் தெரியும். நீங்க கஷ்டப்படறப்போ உங்களை நான்தான் கூட்டியாந்து என் வீட்டிலே...'' என்று கலியன் சொல்வதற்குள், தம்புசாமி குறுக்கிட்டார். ''நீ தானே.. நீ..ங்..கதானேம்மா, இந்த ஆளு யோக்கியதையை எனக்கு ஃபோன் பண்ணி சொன்னீங்க? பொம்பிளைங்க குளிக்கிறப்போ திருட்டுத்தனமா எட்டிப் பாக்கிற திருவிளையாடலை? இவன் கோயில் கட்றானாம் கோயில்... அதுவும் நம்ம தலைவருக்கு! வரலாறு காணாத பெரியவருக்கு... போடா..... நீ...''

''அம்மா பாத்துக்கங்க நீங்க. மரியாதையில் லாமெ பேசறான்...''

''சரி, ரெண்டு பேரும் போகப் போறீங்களா இல்லையா? போலீஸைக் கூப்பிடவா? என்னோட வீட்டிலே சண்டை வேணாம், தெரிஞ்சுதா?'' என்றாள் அபூர்வா கோபத்துடன்.

''கரெக்ட். உங்க வீடுதான் இது. சாஸனம் பண்ணித் தர்ரேன்'' என்று கூறிய கலியன் வனிதாவைப் பார்த்துக் கொண்டே தொடர்ந்தார். ''உங்க பேரிலே, இல்லாட்டா வனிதா பேரிலே. எனக்கு உங்க கிருபை இருந்தா போதும்.''

அவர்கள் போன பிறகு வனிதா சொன்னாள்.

''என்ன இது, என் பேரிலே வீட்டை மாத்தித்தரச் சொல்றீங்க? கோயில் கட்ட உங்களால் அனுமதி வாங்கித்தர முடியுமா?''

''நீதான் ஒரு தடவை சொன்னே, இந்த நாட்டிலே பணமும், அதிகாரமுமிருந்தா செய்ய முடியாத காரியம் ஒண்ணுமில்லேன்னு. உனக்கே இப்போ ஏன் என்னாலே முடியுமான்னு சந்தேகம் வந்தது?''

''அதிகாரம் வந்திடிச்சா?''

''வரும். நம்பிக்கை இருக்கு. சரி. வாசல் கதவைச் சாத்து. அந்த ஜோக்கர்ஸ் திறந்து வச்சிட்டுப் போயிட்டாங்க.''

வனிதா வாசலை நோக்கிச் சென்றாள், கதவைச் சாத்த முயன்றவள், அதைப் பாதித் திறந்து வைத்தவாறு, வெளியே நோக்கினாள்.

''என்ன பாக்கிறே?'' என்றாள் அபூர்வா.

''யாரோ வராங்க...''

''யாரு?''

''தெரியலே...'' என்று சொல்லிக் கொண்டே வேகமாக உள்ளே போனாள் வனிதா.

அபூர்வா வாசலை நோக்கிச் சென்றாள். நஞ்சுண்டன்!

''என்னை எதிர் பார்க்கலே, இல்லையா?'' என்றான் அவன் புன்னகையுடன்.

''ஆமாம். இவ்வளவு பெரிய மனிதர் என் எளிய வீட்டுக்கு இவ்வளவு சர்வ சாதாரணமாக வருவாரென்று நான் எதிர்பார்க்கவில்லை'' என்றாள் அபூர்வா.

''நீங்கள் எவ்வளவு பெரிய ஆளாக ஆகப் போகிறீர்கள் என்று உங்களுக்கே தெரியவில்லை என்பது ஆச்சர்யந்தான்'' என்றான் நஞ்சுண்டன் சிரித்துக் கொண்டே.

(தொடரும்)





அலங்கார
பொம்மைகள்...



"கண்ணாடிச் சிறையில் எனக்கு ஆயுள் தண்டனையா?" என்று உறும முடியாது. வேறு வழியில்லை.

"போகிறவர் வருகிறவரெல்லாம் என்னைக் கண்கொட்டாமல் பார்க்கிறார்களே" என்று பதற முடியாது. தலை விதியே அதுதான்.

"வாரத்துக்கு ஒருமுறைதான் எனக்கு உடைமாற்றமா?" என்று புலம்பியோ, "ஐயையோ, ஒரு ஆண் பிள்ளை எனக்கு உடை மாற்றுவதா?" என்று பதறியோ கட்டுப்படியாகாது.

ஷோரூம் பொம்மைகளின் நிலை இதுதான்.

சென்னையைப் பொறுத்த வரை ஆளுயர ஷோரூம் பொம்மைகளை முதலில் அறிமுகப்படுத்திய

தண்டிக் கண்ணுக்

கடை என்று தி.நகரிலுள்ள ரேகா டிபார்ட்மெண்ட் ஸ்டோரைக் குறிப்பிடலாம்.

"உலகின் பல பாகங்களில் கடைப்பிடிக்கும் விற்பனை உத்தியான ஷோரூம் பொம்மைகள் ஏன் சென்னையில் அறிமுகப்படுத்தப் படவில்லை என்று ஆச்சரியப்பட்டேன். அப்போது பம்பாயில் கூட இந்த முறை பிரபலமடைந்திருந்தது. அங்கு உருவாக்கப்பட்ட பத்து பொம்மைகளோடு வந்து, இங்கு உஸ்மான் ரோடில் எங்கள் துணிக் கடையைத் தொடங்கினோம். தெருவில் சென்ற பலரும் இந்த பொம்மைகளை உற்றுப் பார்த்தனர். அவற்றிற்கு உடை அணிவிக்கப்பட்டிருந்த நேர்த்தி பலரைக் கவர, வியாபாரம் சூடுபிடித்தது!" என்கிறார் இக்கடையின் உரிமையாளர் மஹ்பத்பானி.

உள்ளவற்றில், சிறுவர் - சிறுமிகள் பொம்மைகள் அந்த வழியாகச் செல்பவர்களை நிச்சயம் நிறுத்தி கவனிக்கச் செய்கின்றன என்றால், அதற்குக் காரணம் அவை 'இயங்கும்' பொம்மைகளாக இருப்பதுதான். அதாவது மோட்டாரினால் இயங்குபவை. குத்துச் சண்டை போடுவது போல் பக்கவாட்டில் திரும்பும் பையன், கோன் ஐஸ்கிரீமை ரசித்துத் தின்னும் சிறுமி, மூக்குக் கண்ணாடியைச் சுழற்றிச் சுழற்றிப் போட்டுக் கொள்ளும் சிறுவன் இப்படிப் பல பொம்மைகள்.

"சென்னையில் ஷோரூமில் 'இயங்கும்' பொம்மைகளை முதலில் அறிமுகப்படுத்தி

• அம்மணி அசல் இல்லை சார்! ஜவுளிக் கடை பொம்மைதான்!



பாண்டிபஜாரிலுள்ள 'கிருஷ்ணா துளசி' யின் ஷோரூம் பொறுப்பாளராக இருக்கும் ரவி இதை ஒப்புக் கொள்கிறார்.

"பத்து வருடங்களாக எங்கள் ஷோரூம் இயங்குகிறது என்றாலும் மூன்று வருடங்களுக்கு முன்தான் பொம்மைகளை அறிமுகப்படுத்தினோம். அதற்குப் பிறகு வியாபாரம் கணிசமாக அதிகரித்துள்ளது. பல வாடிக்கையாளர்கள் பொம்மைக்கு அணிவித்திருப் பது போன்ற உடை வகையே வேண்டும் என்று கேட்பதும், வேறு பீஸ் இல்லாத போது பொம்மைக்கு அணிவிக் கப்பட்டிருந்த உடையைக் கழற்றி அவர்களுக்கு விற்பதும் அடிக்கடி நடக்கும் விஷயமாகி விட்டது" என்கிறார்.

இவர்கள் ஷோரூமில்

வீசம்
திளிகள்



யது நாங்கள்தான்" என்கிறார் ரவி. (இப்படி இயங்கும் பொம்மைகளெல்லாம் வந்து விட்ட பிறகு "கதா நாயகிக்கு நடிப்புத் திறனே இல்லை. ஷோகேஸ் பொம்மை போல் வந்து போகிறார்" என்று யாராவது விமரிசனம் எழுதினால் பொம்மைகள் கோபித்துக் கொள்ளலாம்!)

'நாயுடு ஹால்' என்றாலே பெண்கள் உள்ளாடை வியாபாரிகள் என்ற எண்ணம் மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது ஒரு காலத்தில். சில ஆண்டுகளுக்கு முன் உள்ளாடை மட்டுமில்லாமல், மற்ற ஆடைகளையும் நாங்கள் விற்பனை செய்யத் தொடங்கிய போது எங்கள் இமேஜை மக்களிடையே மாற்ற வேண்டியது அவசியம் என்று உணர்ந்தோம். இதற்காக நாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் முக்கியமானது எங்கள் கடை ஷோரூம்களின் வெளி மற்றும் உட்புறங்களில் நாங்கள் இடம்பெற வைத்த ஆளுயர பொம்மைகள்தாம்.

நாயுடு ஹாலில் இந்த வகை உடைகளும் கிடைக்கும்' என்பதை மக்களுக்கு உணர்த்த சரியான விளம்பர மீடியமாக இது பயன்பட்டது. நடன உடை, நீச்சல் உடை, ப்ளவுஸ் ஆகியவற்றையும் பொம்மைகளுக்கு அணிவிக்க, அவற்றின் விற்பனை கூடியது" என்கிறார் நாயுடு ஹாலின் உரிமையாளர் வேணுகோபால்.

முன்பெல்லாம் இதுபோன்ற ஆளுயர பொம்மைகள் ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸில் செய்யப்பட்டன. விலை சுமார் எண்ணூறு ரூபாய். இப்போது ஃபைபரில், ஃபாரின் டையில் செய்யப்படுகின்றன. இதன் விலை சுமார் ஆறாயிரம் ரூபாய் ஆகிறது (மோட்டாரில் இயங்கும் பொம்மையின் விலை பத்தாயிரம் ரூபாய்!). விலை இவ்வளவு அதிகமாக இருந்தாலும் இவற்றையே இப்போதெல்லாம் கடைக்காரர்கள் வாங்குகிறார்கள் என்றால் அதற்குப் பல காரணங்கள்

இயற்கையான நிறத்தில் அமைந்துள்ள உடல், குறைந்த எடை, கை கால் இடுப்பு ஆகியவற்றைப் பிரிக்க முடிவதால் அவ்வப்போது பொம்மையின் 'தோரணை'யை ஓரளவு மாற்ற முடியும் சௌகரியம், கீழே விழுந்தாலும் உடையாமல் இருக்கும் நிலை ஆகியவை. மேலும் 'மொட்டை'த் தலையோடு அவை படைக்கப்பட்டிருப்பதால் அவ்வப் போது உடைக்கேற்ப பொருத்தமான 'விக்'கு களையும் மாற்ற முடிகிறது.

சென்னையில் ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸில் ஷோகேஸ் பொம்மைகள் செய்த ஒரே பெண்மணி மீனாட்சி.

"1965ம் ஆண்டு என்று நினைக் கிறேன். தி. நகரிலுள்ள ரேகா டிபார்ட்மெண்ட் ஸ்டோர் வாயிலில் வசீகரமாக, கண்டவர் மயங்கும் பொம்மைகளையும், அவற்றின் உடலில் மின்னும் புடவை களையும் பார்த்துப் பிரமித்துப் போனேன்.

"அதே போல் நாமும் செய்து பார்த்தால் என்ன என்று தோன்றியது. களிமண்ணை எடுத்து முதலில் முகம் செய்ய வருகிறதா என்று பார்த்தேன். வெற்றி கிடைத்தது. எந்த மோல்டும் இல்லாமல் ஓரிரு பெண்களை மாடல்களாகக் கொண்டு பொம்மைகளைச் செய்யத் தொடங்கினேன். 'ருத்ரா மோல்டிங்' நிறுவனம் பிறந்தது. நல்லி ரங்கசாமி செட்டியார் எனக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஒரு பொம்மை வாங்கித் தன் கடையில் வைத்தார். பிறகு மடமட வென்று ஆர்டர்கள் வந்தன. யு.பி. ஹேண்ட்லூம், குறளகம், கோ-ஆப்டெக்ஸ், ராசி, காவேரி என்று பல ஷோ ரூம்களில் என் பொம்மைகள் இடம்பெற்றன" என்கிறார்.

தயாரிப்புடன் நின்று விடாமல் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பையும், குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அவற்றிற்கு உடைகளை மாற்றிக் கட்டும் பணியையும் கூட ஏற்றுக் கொண்டிருக்கிறார் மீனாட்சி. ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸ் பொம்மைகளின் சகாப்தம் முடிந்த பிறகு, இவர் அந்தத் துறை யிலிருந்து விலகி விட்டார். உயிரற்ற பதுமைகளைச் செய்து கொண்டிருந்த இவர், உயிருள்ள பெண்களுக்கு (குறிப்பாக

மணமகளுக்கு மேக்கப் செய்யும் லைனில் இறங்கி விட்டார்!

இந்தியாவில் ஏழெட்டு நிறுவனங்கள் தான் இதுபோன்ற பொம்மைகளை இப்போது தயாரிக்கின்றன. அவை பம்பாய், பெங்களூர், அகமதாபாத் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. பெங்களூரிலுள்ள ஜப்பான் மேனக்வின் நிறுவனம் இத்துறையில் வேகமாகப் பேர் எடுத்து வருகிறதாம்.

பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் பம்பாயில் 'அனைத்திந்திய உடைக் கண்காட்சி' நடைபெறும். அதில் இதுபோன்ற பொம்மைத் தயாரிப்பாளர்களும் பங்கேற்பார்கள். அங்குதான் பெரும்பாலும் ஆர்டர்கள் புக் செய்யப்படுகின்றன.

இப்போதைய நவீன ஷோரூம் பொம்மைகள் கருகருவென்று வில்லத்தனமான பார்வையுடன் இருப்பது ஏன்?

"அறுபதுகளின் 'லுக்' அது. அப்போதைய அமெரிக்க இளைஞர்கள் எதிர்ப்புணர்வு மிக்கவர்களாக இருந்தார்கள். அதை வெளிப்படுத்துவதே ஃபாஷனாக இருந்தது. இப்போது அந்த ஃபாஷன் திரும்பவும் வந்திருக்கிறது. அதைத்தான் கடை பொம்மைகள் பிரதிபலிக்கின்றன" என்கிறார் கடைகளின் டிஸ்பிளே பொறுப்பைத் தொழில் ரீதியாக ஏற்றுச் செய்து வரும் ஒரு தனியார் நிறுவனத்தின் இளைஞர்.

ஆண்களும் இந்த 'பொம்மை சைகாலஜி' யில் சிக்குகிறார்களா என்று கேட்டதற்கு கடைக்காரர்கள் ஒரே குரலில் கூறியது : "ஆண்களைப் பொறுத்த வரை வெறும் ஹாங்கர்களில் சட்டை, பேண்ட், துணிகளை மாட்டி ஷோரூம் வாசலில் வைத்திருந்தாலும், அவற்றை பொம்மைக்கு அணிவித்திருந்தாலும் ரியாக்ஷன் ஒரே மாதிரிதான்!"

பின் எதற்காக ஆண் பொம்மைகள்?

"நாங்கள் ஆண்களின் உடைகளையும் விற்பது மக்களுக்குப் பளிச் சென்று தெரிய வேண்டுமே, அதற்காகத்தான்."

- அருண்சரண்யா

வண்ணப்படங்கள் :

கேமரா திருஞானம்

சுகி சிவம்

நல்லதை நோக்கி

உற்சாகமாக இருக்கும் காலம் இளமைக் காலம். கையில் வைத்திருக்கும் கடைசிக் காசை எலக்ட்ரிக் ரயிலில் பறி கொடுத்தாலும் சோகம் இல்லாமல், பிளேடு போட்டவன் சாமர்த்தியத்தை வியந்து பேசும் மனசு இருபதுகளின் வயது.

காற்றைக் கிழிக்க இரண்டு இறக்கைகள் இல்லாததுதான் குறை. கண்ணிலும் இதழிலும் வாலிபம் கதையெழுதி வண்ணம் செய்யும் பருவம் அந்தப் பருவம்.

அந்தப் பருவத்தில் தீயவர், கயவர் தோளில் கை போட்டு நெருங்(க்)கி விட்டால், ஒரு பாரதப் புதல்வன் பாழாகி விடுகிறான்.

எதைத் தேடினாலும் ஒரு தீவிரத்துடன் தேடும் இளமை வேகத்தில் ஒரு ஞானியின் ஒளி ஊடுருவி விட்டால், வேகம் விவேகமாக ஒரு நரேந்திரன் விவேகானந்தராகப் பரிணாமம் பெற்று விடுகிறான்.

இந்திய நந்தவனத்தில் மலர்ந்தும் மலராத இளமை இருபதுகளே, உங்கள் மனமலர்கள் இறைவனுக்கு அர்ச்சிக்கப்படும் புனிதமானவையா, அல்லது, கொஞ்சம் தப்பிப் போய் விலைமகளின் வியர்வையால் கசங்கும் வீண் மலர்களா?

இதை முடிவு செய்ய வேண்டிய காலம் இது. கொஞ்சம் எனக்குக் காது கொடுங்கள்:

சொற்பொழிவு, உபந்நியாஸம் என்று எங்கு நிகழ்ந்தாலும், வருபவர்களில் ஒருசிலர் வாழ்க்கையை ஏறத்தாழ நடத்தி முடித்தவர்கள். கண்ணாடிக்குள் புதைக்கப்பட்ட கண்களின் ஓரத்தில் காலம் உழுது போட்ட கரிசல் கோடுகள் உடைய அறிவு ஜீவிகள்.

இன்னொரு பக்கமோ, இனி தெரிந்து கொள்ள எதுவுமில்லை என்கின்ற உண்மை உணர்ந்த உயர்ந்தோர்கள். கேட்டு ஆகப் போவது எதுவுமில்லை என்றாலும், கேட்பது மூச்சு விடுவது போல் பழக்கமாகி விட்டபடியால், வந்து அமரும் அறிவுச் சுடர்கள்.

எப்படிப் பார்த்தாலும் தமிழகத்தில் நடக்கும் தரமான சமய வாழ்க்கை விளக்கக் கூட்டங்களுக்கு வருகிறவரின் சராசரி வயது நாற்பதுக்கு மேல். கண்ணாடி இல்லாத முகங்கள் குறைவு. இருபதுகள் - முப்பதுகள் இல்லாமைக்கு யார் முதல் காரணம்? சொற்பொழிவாளர். அவர் பேச்சில் இளமை இல்லை. அரங்கிலும் இளமை இல்லை.

இரண்டாவது காரணம் - வெளி உலக ஆகர்ஷணம். இளைய மனங்களை இழுத்துப் போடும் வண்ணத் திரைகள். விதம் விதமாக விரிக்கப்பட்ட பொறிகளில் இளைய வண்டுகள்.

ஆனால் கீதையும் குறளும் சாகப் போகிறவனுக்கு எழுதப் பட்டதா? வாழ வேண்டியவனுக்கு வழங்கப்பட்டதா? நண்பர்களே, அது நமக்காக. கல்லறைக்குக் கடிதம் எழுதும் முதுமைக்கு அல்ல. உலகை விலை பேசும் நிலையில் இருக்கும் நமக்காக. நாடி நரம்புகள் முறுக்கேறி நிற்கும் இளமை உலகுக்காக. நேற்றைக்காகக் கீதை எழுதப்படவில்லை. நாளைக்காக. ஏன், இன்றைக்காக கீதை வழங்கப் பட்டது.

ஆக்கிஜன் நாசி வழியாக ஏற்றப்படும் போது ஓட்ட யோகம் படிக்க முடியுமா? ரத்தம் பாட்டில் வழியாக ஏற்றப்படும் போது, சித்தம் சிவமாக வேண்டும் என்று யாரும் சத்தம் போட வேண்டியதில்லை. அப்போது பயமும் பக்தியும் ஞானமும் தானே வரும்!

என் சொற்பொழிவுக்கு வயதான பெரியவர் ஒருவர் வந்து இரண்டு மணி நேரம் உட்கார்ந்து கேட்டார். நான் சந்தோஷப்படவில்லை. காரணம் அவர் உட்கார அரை மணி நேரம் ஆகும். உட்கார்ந்தால், எழுந்திருக்க ஒரு மணி நேரம் ஆகும். அவர் இருப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

எண்பது வயதுக் கிழவர், 'இப்போது நான் மிகவும் யோக்யனாகி விட்டேன்' என்று சொன்னால் அதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? யோக்கியமாக இருப்பதைத் தவிர வேறு என்ன வழி என்று கேட்கத் தோன்றுகிறது.

இளரத்தம் துள்ளும் இளமை வயதில் சித்தம் சிவமானால், செய்வனவெல்லாம் தவமானால் வீட்டுக்கும் நாட்டுக்கும் நன்மை.

பகவான் இராமகிருஷ்ணர் அழகான உதாரணம் ஒன்று சொன்னார் :

முன்பெல்லாம் தயிர் கடைந்து வெண்ணெய் எடுப்பார்கள். (பாலில் இருந்து வெண்ணெய் வரும் என்று நம் பிள்ளைகள் நம்பவே மாட்டார்கள்!) வெண்ணெய் கடையும் போது விடியற்காலம் சூரிய உதயத்திற்கு

முன் கடைவார்கள். அப்படிச் செய்தால் வெண்ணெய் இளகாமல் பந்து போல் திரண்டு வரும். வெயில் ஏற ஏற வெண்ணெய் இளகி இளகி ஓடும். திரண்டு வராது. "இதே போலத்தான் பக்தி. இளமையில் கடைந்து திரட்ட வேண்டியது. முதுமை வர வர உலக விவகாரத்தில் உருகி விடும்" என்கிறார் பகவான் இராமகிருஷ்ணர்.

மழைக்காகப் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தினால் குழந்தைகள் குடை எடுத்துக் கொண்டு வருவார்கள். பெரியவர்களோ பிரார்த்தனை பலித்து மழை எங்கே பெய்யப் போகிறது என்று வெறுங்கையுடன் வருவார்கள்.

குமார சம்பவத்தில் மேரு மலைச் சாரலில் அம்பிகை தவம் பண்ணப் போகிறாள். 'ஐந்து வயது. இந்த வயதில் தவமா?' என்று அம்மா அழுகிறாள். தவம் செய்தால் தேவியின் உடல் தாங்காது என்பதை, "பூவின் மேல் வண்டு உட்கார்ந்தால் தாங்கும்; பறவை அமர்ந்தால் தாங்குமா?" என்று கேட்பதாக காளிதாஸன் உவமை கூறுகிறார். ஆனால் தவம் செய்யப் பிள்ளைப் பிராயமே நல்லது என்பதை அம்பிகை நிரூபித்தாள்!

பிள்ளைப் பருவத்துப் பிடிவாதம் நல்ல விஷயங்களுக்குத் தாவினால் கொள்ளை கொள்ளையாய் வெற்றி வரும்.

நடப்போம்



"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்
எண்ணியவர் திண்ணியராகப் பெறின்"
என்பது தமிழ் மறை. இந்தப் பிடிவாதத்தை நம் இளம் பிள்ளைகளுக்கு யாராவது சொல்லியா கொடுக்க வேண்டும்? எனவே தான் இளமையில் செம்மைப்பட அழைக்கிறேன். நல்லதை நோக்கி நடப்போம் என்று நண்பர்களை வற்புறுத்துகிறேன். வாழப் பழகுவோம் என்று வாழ்த்தி வரவேற்கிறேன்.

போதையின் பாதையில் பொடி நடை போடும் இளைஞர்களை, 'கீதையின் பாதையில் கால் வையுங்கள்' என்று ஊர் ஊராகச் சென்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த அனுபவம் எவ்வளவு சுகமானது என்று வாழ்ந்து பார்த்தால் தெரியும்.

நம்மிடம் எந்தவிதமான தவறுகளும் இல்லை என்கிற போது, நம் மீது நமக்கே ஒரு மரியாதை வரும். நமக்கே நம்மை மதிக்கத் தோன்றும். மெல்ல மெல்ல வாழ்வில் மேலே உயர கீதையும் குறளும் நமக்குப் பாதை வகுத்துக் கொடுக்கும்.

கீதை - கீதை என்றதும் பயந்து விட வேண்டாம். ஆ..! அது ஒரு பெரிய நூல். தாடி மீசை வைத்தவர்கள் சொல்லி... ஓரியரிங் எய்டு வைத்துக் கொண்டவர்கள்தான் கேட்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இளமையான கண்ணனால் இளமையான அர்ஜுனனுக்குச் சொல்லப் பட்டதே கீதை. என்றும் இளமையான நூல் பகவத் கீதை. அது வாழ்க்கைக்கு நம்மைத் தயார் செய்கிறது.

அமைதியான ஆரண்யத்தில் நிசப்தமான சூழலில் - சாந்தி தவழும் சந்தர்ப்பத்தில் கீதை எழவில்லை. அல்லல் மிகுந்த அமர்க்களத்தில், குழம்பிக் கிடக்கும் இளைய இந்தியனுக்கு பரம் பரை பரம்பரையான இந்தியப் பெருஞானம் கண்ணன் வடிவத்தில் இந்தக் கீதையைச் சொன்னது.

முதல் விஷயம் : குழப்பம் அடையாதே; மனத்தைத் தளர விடாதே. குழப்பத்திலும் தளர்ச்சியிலும் செயலை விட்டு விலகுவது பேடித்தனம். அது தவறு. அதைச் செய்யாதே.

ஞானத்திலும் சாந்தத்திலும் செயலை விட்டு விலகுவது சரி. அஞ்ஞானத்திலும் குழப் பத்திலும் செயலை விட்டு விலகுவது, வெளி யேறுவது சரியல்ல.

கீதை சிந்திக்கத் தூண்டுகிறது. அது மனி தனைச் செயலில் செலுத்துகிறது. செயல் ஒழிந்த குழப்பத்தை வன்மையாகக் கண்டிக் கிறது.

கீதையின் ஒவ்வொரு அத்தியாயமும் 'யோகம்' எனப்படுகிறது. 'யோகம்' என்ற சொல் லுக்குப் பொருந்துதல் என்று பொருள். நம் மனம் ஒன்றில் பொருந்தாதபோது துயரம் அடைகிறது. அமைதியின்மை வருகிறது. ஆகவே நம்மை உலகில் பொருந்தும் பெரும் பணியே கீதையின் சாரம்.

பொருந்துக... படிப்பதில் பொருந்துக; சிந்திப்பதில் பொருந்துக. ஓய்வெடுக்கிறாயா? முழுமையாக ஓய்வெடு. சாப்பிடுகிறாயா? சாப்பாட்டில் பொருந்து. தூங்குகிறாயா? தூக் கத்தில் பொருந்து. எதைச் செய்தாலும் முழுமை யாகச் செய்! இதுதான் கீதை. சாப்பிடும் போது விளையாட்டில் மனம் இருந்தால் சாப்பாடும் ருசிக்காது; விளையாட்டும் ரசிக்காது.

தொலைக்காட்சியில் நிகழ்ச்சியைப் பார்த் துக் கொண்டே சாப்பிட்ட பிள்ளைகளைக் கேளுங்கள் - 'என்ன சாப்பிட்டாய்?' என்று. அவர் களுக்குத் தெரியாது!

எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி, தன் பிள்ளைகளுக்குப் பிடிக்காத உணவு தயாரிக்க நேர்ந்தால் பிள்ளைகள் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் லயித்திருக்கும் போது, சாப் பாட்டைக் கொடுத்து விடுவது வழக்கம். என்ன சாப்பிட்டோம் என்றே அவர்களுக்குத் தெரி யாது!

தூங்கும் போதே, 'ஐயோ தூங்குகிறோமே நிறைய வேலை இருக்கிறதே' என்று கவலைப் படுவது சிலரது வழக்கம். தூக்கத்தில் வேலை யைப் பற்றிக் கவலைப்பட்டால், வேலை பார்க் கும் போது தூக்கம் வரும். எதைச் செய்தாலும் அதை முழுமையான ஈடுபாட்டுடன் செய்வது வாழ்வில் உயரும் வழி.

செயல் செய்யும் போது அந்தச் செயலில் ஆர்வம் வேண்டும். செயலின் விளைவுகளில் ஆர்வம் காட்டினால் செயல் வீணாகி விடும். அவரவர் செய்யும் வேலைகளில் ஈடுபாடும் நிறைவும் அவசியம். செயலின் விளைவுகள் பற்றிய கற்பனையிலேயே இருந்தால் செயல் வீணாகி விடும்.

மருத்துவர் ரணசிகிச்சையின் போது, சிகிச் சையில் அக்கறை காட்ட வேண்டுமே ஒழிய, முடிந்ததும் கிடைக்கப் போகின்ற பணம் - பாராட்டு பற்றி அக்கறை காட்டினால் ரண சிகிச்சையில் கவனம் குறையும்.

இந்த தேசம் இன்றைக்கு ஸ்தம்பித்து நிற் பதற்குக் காரணமே இதுதான். பெருவாரியான வருக்குத் தாம் செய்யும் பணியில் ஆர்வம் இல்லை. வேறு வேலைக்குப் போக வேண்டும் என்ற எண்ணத்திலேயே, இந்த வேலையில் கவனம் செலுத்தாதவர்கள் பலரை நான் சந்தித் திருக்கிறேன்.

'தினம்தோறும் சமைக்க வேண்டி இருக் கிறதே' என்று அம்மா அலுத்துக் கொள்ளுகி றாள். 'தினம் தினம் இந்த ரூபாயை எண்ணி எண்ணி கூட்டிக் கழித்து... ரொம்ப போர் சார்...' என்று அலுத்து மாய்கிறார், பாங்க் காஷியர். பிள்ளைகளுக்குப் படிக்க இஷ்டம் இல்லை. யாருக்கும் அவரவர் வேலையைப் பார்க்க விருப்பம் இல்லை என்றால் தேசம் என்ன ஆகும்? 'செய்யும் வேலையை ஈடு பாட்டுடன், பொருந்திச் செய்' என்பதே கீதை யின் சாரம். இது வாழ்க்கையை உயர்த்தும் என்பது உண்மைதானே.

ரசம் வைக்கிறவர்கள் ஈடுபாட்டுடன் ரசம் வையுங்கள். ரசம் சாப்பிடுகிறவர்கள் ஈடுபாட்டு டன் சாப்பிடுங்கள். வாழ்க்கையே ரசமாக இருக்கும் என்கிறேன். இதுதான் கீதை என் கிறேன். யார் மறுக்க முடியும்?

அடுத்தது.. செயலின் விளைவுகள் பற்றிய தெளிவு. குற்றவாளியைக் காவலர் கைது செய் வதுவும், நீதிபதி தண்டிப்பதுவும் சமூகத்தை பாதுகாப்பாக வைப்பதற்கான ஏற்பாடு. கைது செய்வதால் தனக்கு ஏற்படும் பின்விளைவு களைக் காவலரும், தண்டிப்பதால் தனக்கு நேரும் விளைவு பற்றி நீதிபதியும் கவலைப் பட்டு, கடமை தவறினால் சமூகம் நாசமாகும். கடமைகளிலிருந்து விலக நமக்கு உரிமை இல்லை என்று தொழிற்படும் யாவரும் உறுதி யாக இருக்க வேண்டும்.

இன்றைக்கு இந்திய நாட்டில் இந்த நிலை இருக்கிறதா? செயலை - செயலுக்காகவே செய் யும் பக்குவம் எத்தனை பேருக்கு இருக்கிறது? அதனால் வரும் சுயலாப நஷ்டங்களைக் கணக் குப் பார்த்துச் செய்கிறார்கள். இதற்கு நமக்கு உரிமை இல்லை என்பதே கீதா போதனை.

எனவேதான் இந்த நாட்டின் பள்ளிகளி லேயே பகவத்கீதை கட்டாயமாகப் போதிக் கப்பட வேண்டும் என்கிறேன்.

கீதையைக் கெடுப்பதற்காக அல்ல இந்த யோசனை. தேசத்தை - இளையதலைமுறை யினரை மேன்மையுறச் செய்வதற்காகவே.

(தொடரும்)

பரிணாம

ஊருக்கு ஒரு சாமியார் வந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆறுமுகம், பார்க்கப் போனான். அரசமரத்தடியில் துதிக்கை இழந்த பிள்ளையாருக்குப் பக்கத்து மேடையில் உட்கார்ந்திருந்தார் அவர். 'எதைத் தின்றால் பித்தம் தெளியும்?' என்றிருந்த ஆறுமுகத்துக்கு அவரை விழுந்து கும்பிட எந்த ஆட்சேபணையும் இருக்கவில்லை. விழுந்து எழுந்தவன் முகமெல்லாம் பரவ, கையிலெடுத்த மண்ணை 'பூ...பூ'வென்று ஊதினார் சாமியார். மறுபடியும் மண்ணையே கொஞ்சம் எடுத்துத் திருநீறாகக் கொடுத்து, பூசிக் கொள்ளச் சொன்னார். அவன் மறுக்கவில்லை. எப்படியாவது அன்றைய ரிசல்டில் அவன் நம்பர் வந்தால் போதும்.

வந்து விட்டது. அரியர்ஸ் ஆறுமுகம் அரியர்ஸ் இல்லாமல் எல்லாப் பாடத்திலும் பாஸ்!

அது போதாதா? சாமியார் மகிமை வெகுவேகமாகப் பரவி விட்டது.

"சாமியார் கொடுத்த மண்ணில் சரசுக்கு மசக்கை வந்து விட்டதாம்" - சரசுக்கு எட்டு வருடமாய்ப் பிள்ளை இல்லை.

"கல்யாணிக்குக் கூட வரன் குதிர்ந்து விட்டதாம். கலெக்டர் ஆபீஸ் கிளார்க் மாப்பிள்ளையாம்!"

"சாமியார் தூக்கிப் போட்ட நோட்டுக்கு ஜாக்பாட் அடிச்சிருக்காம் ஜம்புவுக்கு."

இதைப் பற்றி எதையுமே லட்சியம் செய்யாத சாமியார் மென்மையாகப் புன்னகை புரிந்து கொண்டிருந்தார்.

"யாரோ பைத்தியம்... என்னவோ பேத்துது... முட்டாள் ஜனங்க போய் விழுது!" முணுமுணுத்தது ஒரு பகுத்தறிவு. "காக்காய் வரவும் பனம் பழம் விழுது."

"பெரிய ஞானிங்க எல்லாம்

இரவு.

சோகமான அமைதியில் அந்த கிராமத்து பங்களா அமிழ்ந்திருக்க, அம்மா அக்கம்பக்கம் பயத்துடன் பார்த்தபடி மெல்லத் திண்ணைக்கு வந்து நின்றாள்.

திண்ணையில் சுவரோரம் சுருண்டு படுத் திருந்த சிவராமனையும் அவன் மனைவியையும் கண்ணீர் மல்கப் பார்த்தாள்.



''சிவராமா! சிவராமா!'' - கிசுகிசுப்பான மெலிதான குரலில் அவனைத் தட்டி எழுப்பினாள். அவன் உறக்கம் கலைந்தவன், அம்மாவைப் பார்த்ததும் 'விருட்'டென்று எழுந்து அமர்ந்தான்.

''என்னம்மா?''

அம்மாவுக்குக் கண்களில் நீர் முட்டியது. எப்படி இருந்திருக்க வேண்டியவன்! ஒரு பெண்ணைக் காதலித்ததற்காக இப்படி சொத்து, சுகம் எல்லாம் இழந்து, சொந்த வீட்டிலேயே ஒரு பிச்சைக்காரனைப் போல் திண்ணையில் முடங்கிக் கிடக்கிறானே...

''எப்படிடா இருக்கே?'' வார்த்தையில் அழுகை தெரிந்தது.

''நல்லா இருக்கேம்மா''

ஆர்.பி. சாரதி

பைத்தியம் மாதிரிதான் இருப்பாங்க... காசு பணம் கையாலே தொடலை... அதிசய அவதாரம் இது" -பக்தர் ஒருவர் வியந்து போனார்.

"ஐயய்ய! சாப்பாட்டைக் கூட மண்ணிலே போட்டு நக்கிச் சாப்பிடுதே!" அதிசயப்பட்டது ஒரு குழந்தை.

"பார்த்திட்டே இருங்க. ஒரு நாளைக்கு ஊரையே கொள்ளை அடிச்சிட்டு ஓடப் போவுது" - மாஜி போலீஸ்காரர் ஒருவர் டிபார்ட்மென்ட் அனுபவக் கதைகளை விடக் காத்திருந்தார்.

சாமியார் எல்லாரையும் கூப்பிடுவதும் இல்லை. மண் பிரசாதம் அளிப்பதுமில்லை.

அப்படியும் அவர் புகழ் பக்கத்து ஊர்களுக்கெல்லாம் பரவியது. நாளுக்கு நாள் கூட்டம் பெருகியது. கூட்டத்தைக் கட்டுப்படுத்தி வரிசையாக அனுப்ப, தொண்டர்கள் வேறு தயாரானார்கள்.

அந்த அனுமார் வால் வரிசைக் கோடியில் இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தனர்.



ஜோதி

என்றவன், மனைவியை எழுப்பலாமா என்று ஒரு கணம் யோசித்தான். அவளை உசுப்ப முயன்றான்.

''வேணாம்ப்பா. பாவம் அவ களைச்சுப் போயிருப்பா. தூங்கட்டும்.''

சிவராமனும் விட்டு விட்டான். மறுபடி அம்மாவைப் பார்த்தவனாய்ச் சொன்னான்:

''காலைல ஊருக்குக் கிளம்பலாம்னு இருக்கோம்மா.''

''கொஞ்ச நாள் இருந்துட்டுப் போயேண்டா!''

அம்மாவின் முகத்தில் கவலை தெரிந்தது.

''இல்லேம்மா. நான் இங்க வந்தது அண்ணங்க யாருக்குமே பிடிக்கலை. என்னை அவங்க தம்பியா நினைக்க வேணாம். ஒரு மனுஷனாகவாவது மதிக்க வேணாமா? போதும்மா... நான் பட்ட அவமானமெல்லாம் போதும். எனக்காக எம்பொண்டாட்டியும் அவமானப் பட வேணாம்.''

அம்மா 'பொலபொல'வென்று கண்ணீர் வடித்தாள்.

''ஏம்மா அழறே?''

''ஏதோ இந்த மட்டும் கடைசி நேரத்துலயாவது உங்கப்பா முகத்தைப் பார்க்க வந்தியே... அது போதும்ப்பா.''

''ஆனா சாகறப்ப

கே. கந்தவேல்

"நிஜமாவே சாமி சக்திவாய்ந்தவரா?"
"பின்னே?"
"என் தம்பி மூணு வருஷம் முன்னால ஓடிப் போயிட்டான் வீட்டை விட்டு. மனநிலை சரியில்லாதவன்..."
"ட்ரீட்மென்ட்டு குடுத்தீங்களா?"
"டாக்டருங்களுக்கே, அவனுக்கு என்ன வியாதின்னு சொல்லத் தெரியலை... ஆனா, பைத்தியம் இல்லைன்னாங்க. கடைசி வரைக்கும் அவனைப் புரிஞ்சிக்கவே முடியலை!"
"பின்னே?"
"அவன் நடந்துக்கிட்டதெல்லாம் பைத்தியம் மாதிரிதான் இருந்தது. மண்ணைத் தின்னுவான். விழுந்து புரளுவான். ஒன்னு அழுவான், நினைச்சபோதெல்லாம்! கட்டி வெச்சிருந்தோம்."
"சரியாயிடும். கிடைச்சிருவாரு. சாமியைப் பார்த்துச் சொல்லுங்க. கண்டிப்பா பலன் கிடைக்கும்!"
பக்கத்திலிருந்தவர் சொன்னது சரிதான். அவர் தம்பி கிடைத்து விட்டார்.
பூட்டி வைத்த அறை திறந்திருந்த போது, தப்பி விட்ட அவர் தம்பிதான் அங்கே கோவணத்துடன் சாமியாராக மண்ணைக் கிளறித்தானே பூசிக் கொண்டும், சாப்பிட்டுக் கொண்டும் இருந்தார்!

கூட அப்பாவுக்கு எம்மேல கோபம் போகல பார்த்தியாம்மா? சொத்துல எனக்கு சல்லிக்காசு கூடக் கொடுக்கக் கூடாதுன்னுட்டு அத்தனையையும் அண்ணங்க பேர்ல எழுதி வச்சிட்டாரே. ஏம்மா? நான் இவளைக் கூட்டிக்கிட்டு ஊரை விட்டு ஓடிப் போனது வாஸ்தவம்தான். ஆனா கால் வயித்துக் கஞ்சியோ, அரை வயித்துக் கஞ்சியோ கட்டிக்கிட்டவளைக் கடைசிவரைக்கும் கண்கலங்காம வச்சுக் காப்பாத்திட்டிருக்கேன். இது தப்பாம்மா?''
''சிவராமா! நீ பண்ணது சரியா, தப்பான்னு சொல்ல எனக்குத் தெரியலை. ஆனா ஆயிரம்தான் நீ தப்பு பண்ணாலும் நீயும் எம்பிள்ளை தாண்டா. நீ கஷ்டப்படறதைப் பார்த்துட்டு என்னால கம்மாயிருக்க முடியலைடா. மூணு பிள்ளைங்க எம் பக்கத்துல இருந்தாலும் என் நினைப்பு பூரா உம்மேலதான்டா. எம்பிள்ளை என்ன கஷ்டப்படறானோன்னு எத்தனை ராத்திரி நான் தூங்காம அழுதிருக்கேன் தெரியுமா? அய்யா! இதப் பாரு. உங்கப்பா உனக்கு உயில்ல எதுவும் எழுதி வைக்கலேன்னாலும் பரவாயில்லே. நாளைக்கு நீ ஊருக்குப் போறதுக்கு முன்னே உன் அண்ணனுங்ககிட்டே தயவா, பணிவா, கெஞ்சிக் கேளு. அவங்க மனசு இரங்கி சொத்துல ஏதாவது கொஞ்சம் கொடுத்தாலும் கொடுக்கலாமில்லியா?''
''கேட்டாக் கொடுப்பாங்களாம்மா?''
''நிச்சயம் கொடுப்பாங்கப்பா!''
சிவராமன் கண்களில் கண்ணீருடன் அம்மாவையே வைத்த விழி வாங்காது பார்த்தான்.
நிஜம்தானா? கேட்டால் கொடுப்பார்களா?
பொழுது விடியக் காத்திருந்தான்.

விடிந்ததும், ஊருக்குக் கிளம்ப மனைவியையும் அழைத்துக் கொண்டு, எல்லோரிடமும் சொல்லிக் கொண்டான். மூன்று அண்ணன்களும் கோபத்துடன் அவன் முகம் பார்க்காது ஆளுக்கொரு திசையில் நின்றனர். உள்ளிருந்து அம்மா மட்டும் முகத்தில் அழுகை பொங்கி வர, ''கேளு! கேளு!'' என்று சைகை காட்டினாள்.
சிவராமன் கண்கள் தளும்பிக் கொள்ள, மீண்டும் அண்ணன்களைப் பார்த்தான்.
''அண்ணே! அப்பா விட்டுப் போன மத்த சொத்துங்கள்ல எனக்குப் பங்கு தர வேணாம். ஆனா, அம்மாவை மட்டும் எனக்குக் கொடுத்திருங்கண்ணே.'' ●

உங்கள் அன்பு கலந்த பாதுகாப்பை அவளுக்கு அளியுங்கள்!



ப்ளான் துவக்கம்
ஆகஸ்ட் 6, 1994.

இப்போது யூடிஐ வழங்குகிறது

கிருஹலக்ஷ்மி

யூனிட் ப்ளான்

18 வயதிற்கு மேலுள்ள தனிச்சிறப்பான மகளிருக்கு:
உங்கள் அன்புக்குப் பாத்திரமான உங்கள் மகள், தங்கை, மருமகள், பேத்தி அல்லது வேறெந்த மகளிராகவோ இருக்கலாம். ரூ. 1 இலட்சம் வரை தனிச்சிறப்பான கிஃப்ட் வரிச் சலுகையுடன் கூடிய மிகக் கச்சிதமான திருமணப் பரிசை நீங்கள் வழங்கலாம்.

சிறப்பம்சங்கள்

- காலவரையற்ற ப்ளான்
- குறைந்தபட்ச முதலீடு ரூ.3000 மற்றும் அதற்கு மேல் ரூ.1000த்தின் மடங்குகளில். உச்ச வரம்பு கிடையாது.
- 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மகளிருக்கான எந்த ஒரு தனிநபர் அல்லது இந்து கூட்டுக் குடும்பம் முதலீடு செய்யலாம். 18 வயதிற்கு மேற்பட்ட எந்த ஒரு இந்திய பெண்ணும் தனக்காக முதலீடு செய்யலாம்.
- முதல் வருடத்திற்கு டிவிடெண்ட் கிடையாது. வருடாந்தர டிவிடெண்ட் 2வது வருடம் முதல் ஆரம்பமாகும். உதாரணமாக, ஆகஸ்ட் 94-ல் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், டிவிடெண்ட் ஜூலை 96 முதல் முதலீட்டாளர்களுக்குக் கொடுக்கப்படும்.
- மூன்று வருடம் கழித்து எச்சமயத்திலும் என்ஏவி அடிப்படையிலான திரும்ப வாங்கும் விலையில் பணத்தைத் திரும்பப் பெறும் வசதி.
- மூலதன மதிப்புயர்வுக்கான வாய்ப்பு
- இத்திட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மேல் ரூ. 10,000 வரை பிரிவு 80எல் வரையறைக்குள் வரிச்சலுகை.
- வழக்கமான கிஃப்ட் வரிச்சலுகை ரூ.30,000 வரை மற்றும் ஒருவரை சார்ந்துள்ள மங்கையருக்கு அவருடைய திருமணத்தின்போது ரூ. 1 இலட்சம் வரை கொடுக்கப்படும் பரிசுத் தொகைக்கு வரிச்சலுகை.

அனைத்து மியூச்சுவல் ஃபண்டுகள் மற்றும் செக்யூரிடிகளில் செய்யும் முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்கிற்கு உட்பட்டவையாகும். மற்றும் செக்யூரிடிகள் மார்க்கெட்டைப் பாதிக்கும் அம்சங்கள் மற்றும் ஆட்சித்திறம் பொறுத்து திட்டங்களின் என்ஏவி ஏறிடவும், இறங்கிடவும் செய்யும். கிருஹலக்ஷ்மி என்பது திட்டத்தின் பெயர் மட்டுமே. மற்றும் திட்டத்தின் தரத்தையோ, அதன் எதிர்கால வளர்ச்சியையோ அல்லது வருமானத்தையோ எவ்விதத்திலும் சுட்டிக்காட்டுவது ஆகாது. தயவு செய்து முதலீடு செய்யுமுன் ஆஃபர் பத்திரத்தைப் படிக்கவும்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் வளமான எதிர்காலத்திற்கு

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.
கிளை அலுவலகங்கள்: • கோயம்புத்தூர். போன்: 214973 • சென்னை. போன்: 517101, 517190 • மதுரை. போன்: 38186 • திருச்சி. போன்: 27060

UTI-77/94 TA C

மணிக்கொடி

13



கூடத்திலிருந்து வந்து கொண்டிருந்த விடிவிளக்கின் மங்கிய வெளிச்சத்தில் ராஜாராமன் தம் காலடியில் விழுந்த பொருளை உற்றுப் பார்த்தார். ஏதோ சின்ன முடிச்சுப் போல் இருந்தது. அவர் அதைக் கையில் எடுத்து முடிச்சை மெதுவாக அவிழ்த்துப் பிரித்தார். உள்ளே இரண்டு காகிதங்கள் மடித்து வைக்கப்பட்டிருந்தன. கனத்துக்காக உள்ளே ஒரு சிறு கூழாங்கல்லும் இருந்தது.

விளக்கைப் போட்டு விட்டு இரண்டு காகிதங்களையும் எடுத்து நன்கு பிரித்துச் சுருக்கங்கள் நீக்கினார். 'அன்புள்ள அய்யா' என்று ஆங்கிலத்தில் அது தொடங்கப் பெற்றிருந்தது. பரபரப்புடன் கடிதத்தின் இறுதியைப் புரட்டிப் பார்த்தார். நரேந்திரநாத் பானர்ஜி என்ற கையெழுத்து காணப்பட்டது. கண்ணாடியை மாட்டிக் கொண்டு, கட்டிலில் உட்கார்ந்து கடிதத்தைப் படிக்கத் தொடங்கினார்.

'அன்புள்ள அய்யா!

நமஸ்காரம். தங்களிடம் நேரில் சொல்லிக் கொண்டு விடைபெறாமல் ஒரு திருடனைப் போல் நழுவியதற்கு முதலில் தாங்கள் என்னைத் தயவுசெய்து மன்னிப்பீராக. 'திருடனைப் போல்' என்ற வார்த்தைப் பிரயோகம் தப்பு என்று சொல்ல முடியாது. சொல்லப் போனால் திருட்டை விட அதிக பயங்கரமான குற்றத்தைப் புரிந்தவன் நான். அதாவது நான் ஒரு கொலைகாரன்!

அரசியலில் தற்காப்பு, அவசியம், வேறு வழியின்மை ஆகியவற்றுக்காகக் கொலை செய்வது எங்கள் இயக்கத்தால் நியாயப்படுத்தப் பட்டுள்ளதைத் தாங்களும் ஒப்புக் கொண்டுள்ளீர்கள் என்பதை மதன்லால் திங்ராவின் இறுதி வாக்குமூலங்களைத் தமிழில் மொழியாக்கம் செய்து விநியோகிக்கும் நோக்கத்துடன் உங்கள் மகள் அஞ்சனாதேவி ஒரு காங்கிரஸ்காரர் வீட்டுக்குப் போய் வந்ததிலிருந்தே நான் மிக நன்கு புரிந்து கொண்டேன்.

கொலை செய்து விட்டு அவ்வளவு எளிதாய்த் தப்ப முடியாது என்பதை நான் நன்கு அறிவேன். ஆயினும் எவ்வளவு காலத்துக்கு முடியுமோ அவ்வளவு காலத்துக்குத் தப்புவதற்கே நாங்கள் விரும்புகிறோம். அந்தக் கால இடைவெளியில் மேலும் சிலவற்றைச் சாதிப்பதற்குத்தான்.

தங்கள் அன்பு மனைவிக்கு என்னைப் பற்றிய உண்மைகள் தெரியவந்தால், இனி என்னை உங்கள் வீட்டுக்குள் அனுமதிக்க மாட்டார்கள். எனவே அவரிடம் இதையெல்லாம் தயவு செய்து சொல்லாதீர்கள். பூர்வஜென்மத்துச் சொந்தமோ என்னமோ உங்கள் வீட்டார் எல்லாரையும் எனக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது. உங்கள் மனைவி என் சிறு வயதில் செத்துப் போய் விட்ட என் அன்பான அம்மாவை ஞாபகப்படுத்துகிறார். குறிப்பிடும்படியாய் அவர்களுடைய அந்தக் கனிவான பார்வை என் உள்ளத்தைக் கொக்கி போட்டு இழுக்கிறது. அவர்கள் மடியில் தலைவைத்துப் படுத்து என் உள்ளத்து உணர்ச்சிகளையெல்லாம் கொட்டி விட வேண்டும் போல் ஓர் ஏக்கம் என்னுள் இக்கடிதம் எழுதும் போது கூடக் கிளர்கிறது.

அந்த இரகசியப் போலீஸ்



ஜோதிர்லதா கிரிஜா

அதிகாரிகள் இருவரும் என்னைப் பார்த்த பார்வையிலேயே நான் கண்டுகொண்டேன், எனது புகைப்படம் அவர்கள் பார்வையில் பட்டுவிட்ட உண்மையை. ஏனெனில் என்னைப் போன்ற அரசியல் கொலைகாரர்களின் புகைப்படங்கள் நாடு முழுதும் உள்ள பல்வேறு ராஜதானிப் போலீசாருக்கும் அனுப்பப்படும் உண்மையை நான் அறிவேன். அதனால் தான் தங்களிடம் நேரில் சொல்லிக் கொண்டு புறப்பட இயலாது போயிற்று.

நான் கொலை செய்த வெள்ளை அதிகாரி யார், எதற்காக அவனைக் கொலை செய்தேன் போன்ற விவரங்களை அறியத் தாங்களும் தங்கள் அன்பு மகள்களும் மிகவும் ஆவலுள்ளவர்களாக இருப்பீர்கள் என்பதை நான் அறிவேன். நான் சுட்டுக் கொன்றது டேவிட் வாட்சன் எனும் ஆங்கிலேயப் போலீஸ் அதிகாரியை. இவன் டாக்கா நகரத்தில் பணிபுரிந்து வந்தான். டெபுடி சூப்பரின்டென்டென்ட் ஆக. இவன் ஒரு நாள் டாக்காவுக்கு அருகே இருக்கும் கிராமம் ஒன்றில் வயல் ஒன்றுக்குச் சென்று அங்கே வேலை செய்து கொண்டிருந்த பெண்களில் ஒருத்தியைக் கற்பழித்து விட்டான். துப்பாக்கியைக் காட்டி வெட்டவெளியில் குண்டு வெடித்து அவன் அச்சுறுத்தியதும் உடனிருந்த ஆண்கள் ஓடி விட்டார்கள். எங்கள் புரட்சி அமைப்பான அனுசீலன் சமிதிக்கு இவ் விஷயம் தெரிய வந்ததும் அந்த வெள்ளைக்காரனைக் கொல்லத் திட்டம் தீட்டினோம். எனக்கு இன்னும் பயிற்சி முடியா விட்டாலும், பிடிவாதமாக அவனைக் கொன்று தீர்க்கும் வேலையை நானே செய்வேன் என்று உறுதி எடுத்துக் கொண்டு அவ்வாறே செய்தும் விட்டேன்.

போலீஸ் என்னைத் துரத்தியது. எப்படியோ செத்துப் பிழைத்த மகிழ்ச்சியுடன் மதறாசுக்கு வந்து சேர்ந்தேன். இனி எனது அடுத்த இலக்கு பாண்டிச்சேரியாகத்தான் இருக்கும். அங்கு போய்ச் சேர்ந்தால்தான் பிடிபடுவோம் என்ற அச்சமின்றி நிம்மதியாக வாழலாம். அங்கு வாழும் அரவிந்தர், கவிஞர் பாரதியார் போன்றோரைச் சந்தித்து அளவளாவி, எதுவும் சாதிக்க முடியாவிட்டாலும், பெரிய மனிதர்களின் கூட்டுறவில் இருக்கும் மகிழ்ச்சியையாவது கொஞ்ச நாட்களுக்குப் பெற முடியும். அதன் பிறகு என்ன செய்வேன் என்பது எனக்கே தெரியாது.

நான் கொன்றது டேவிட் வாட்சனை மட்டுமில்லை. அதற்கு முன்னால் பிரான்சிஸ் எனும் இன்னோர் வெள்ளைக்காரனையும் கைகலப்பில் அடித்துப் போட்டே கொன்றிருக்கிறேன். ஒருமுறை ரெயில் பயணம் செய்து கொண்டிருந்த போது, வழியில் ஒரு நிலையத்தில் வண்டி நின்றது. பிரான்சிஸ் பெட்டியில் ஏறினான். அதில் என்னைச் சேர்த்து ஐந்து இந்தியர்கள் பயணம் செய்து கொண்டிருந்தனர். எல்லாரும் உடனே இறங்க வேண்டுமென்றும் தான் மட்டுமே அந்தப் பெட்டியில் இருக்கப் போவதாகவும் அவன் ஆணவத்துடனும் அதிகாரமாகவும் அறிவித்தான். என்னால் பொறுக்க முடியவில்லை. 'நாங்கள் எல்லாரும் டிக்கெட் வாங்கிக் கொண்டுதான் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். நாங்கள் இருக்கும் பெட்டியில் இருக்க உனக்கு

அருள்வாக்கு



விஷ்ணுவுக்கு ஒரு பிள்ளை ப்ரம்மா. இன்னொரு பிள்ளை உண்டு. அவன்தான் மன்மதன். இரண்டு பேரும் லக்ஷ்மியின் ஸம்பந்தமில்லாமலே பிறந்தவர்கள். ப்ரம்மா விஷ்ணுவின் நாபிகமலத்தில் உண்டானார். மன்மதனை அவர் மானஸிகமாக - ஒரு பிள்ளை உண்டாகட்டும் என்று மனஸினால் நினைத்த மாத்திரத்திலேயே - ஸ்ருஷ்டித்து விட்டார். அதனால் மனஸிஜன் என்று அவனுக்குப் பெயர். ப்ரஹ்மா கமலஜர். மூன்றாவது பிள்ளையாக மஹாவிஷ்ணு மோஹினி ரூபத்தில் சிவனிடம் பெற்ற சாஸ்தா இருக்கிறார். அவருக்குப் பூஜை இருக்கிறது. பெரிசாக வ்ருத்தியாகியும் வருகிறது. ப்ரஹ்மாவுக்குப் பூஜையில்லை. மன்மதனுக்கும் இல்லை.

இதற்கு ஒரு காரணம் தோன்றுகிறது. மன்மதன், ப்ரஹ்மா இருவருமே ஒரு ஜீவன் ஜன்மா எடுப்பதற்குக் காரணமாக இருப்பவர்கள்தானே? புத்ரோத்பத்திக்குக் காரணமான வேகத்தை மன்மதன் உண்டாக்குகிறான். அப்புறம் எந்த ஜீவன் எந்தப் பிண்டத்தில் புகுந்து கொள்ள வேண்டுமென்று பார்த்து ப்ரஹ்மா ஜன்மாவைக் கொடுக்கிறார்.

அத்தனை கஷ்டமும் நாம் ஜன்மா எடுத்ததால்தானே தெரிகிறது? ஸகல ஸமயாசாரங்களும், ஸாதனைகளும் ஜன்ம நிவ்ருத்தி, ஜன்ம நிவ்ருத்தி என்ற ஒன்றுக்காகத்தானே இருக்கிறது?

இதனால்தான் ஜன்மா ஏற்படக் காரணமான ப்ரஹ்மாவுக்கு வழிபாடில்லாமலாகியிருக்கிறதென்று தோன்றுகிறது. மன்மதனுக்கும் இதே காரணம்தான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

விருப்பம் இல்லையானால், நீ வேறு பெட்டியைப் பார்த்துக் கொண்டு போ' என்றேன் கடுமையாக.

வாக்குவாதம் வலுக்க, 'இறங்கப் போகிறாயா இல்லையா?' என்று மிரட்டினான்.

இதற்குள் ரயில் புறப்பட்டு நகர ஆரம்பித்து விட்டது. அவனைக் கீழே தள்ளி அடித்து நொறுக்கினேன்.

நிறைய அடிவாங்கியபின் அவன் செயலற்றுப் போனான். நான் வேகமெடுக்க முற்பட்டிருந்த ரயிலிலிருந்து வெளியே குதித்து விட்டேன். சில சிராய்ப்புகளுடன் தப்பினேன்.

மறுநாள் நாளிதழ் பார்த்து அந்த வெள்ளைக்காரன் இறந்து போனதைத் தெரிந்து கொண்டேன். இம் முதல் கொலையைச் செய்த போது நான் குறுந்தாடியும் மீசையும் வைத்துக் கொண்டிருந்தேன். என்னை அடையாளங் கண்டு கொண்டு போலீஸ் பிடித்து விடக் கூடாது என்பதற்காக அவற்றை நான் மழித்துக் கொண்டேன். ஆனால் மழித்த முகத்துடன் நான் செய்த இரண்டாவது கொலைக்காக எனது தற்போதைய சாயலில் போலீஸ் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறது! இப்போது எனது தோற்றத்தைத் தாடி, மீசை மூலம் நான் மாற்றிக் கொண்டால், முதல் கொலைக்காகப் பிடிபடுவேன். அதனால்தான் எனது தோற்றத்தை எப்படி மாற்றிக் கொள்ளுவது என்ற திகைப்பில் இருக்கிறேன். இதையெல்லாம் நானே உங்களிடம் சொல்லுவதாகத்தான் இருந்தேன். போலீஸ் குறுக்கிட்டதால் பிரிய நேர்ந்தது.

இனி நான் மிக, மிகத் தேவையாக இருந்தாலன்றி, உங்கள் வீட்டுக்கு வர மாட்டேன். உங்களுக்குத் தொல்லை நேர்வதையும் அதனால் தங்கள் அன்பான மனைவி கண்ணீர் விடுவதையும் என்னால் சகிக்க முடியாது. 'என் அன்பு மகனே' என்று அடிக்கடி விளித்தீர்கள். சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்ட அன்பு மகனைத் தந்தை மன்னிப்பார் என்ற நம்பிக்கையுடன் நான் தற்போதைக்குத் தங்களிடமிருந்து விடை பெறுகிறேன். இக் கடிதத்தைத் தங்கள் மகள் களிடம் காட்டிய பிறகு கிழித்துப் போட்டு விடவும். இதை வைத்துக் கொண்டு மேலும் ஆபத்துக்கு ஆளாகாதீர்கள். வந்தே மாதரம்.

நரேந்திரநாத் பானர்ஜி.

ராஜாராமனுக்குக் கண்கள் கலங்கின. 'சுதந்திர வெறியில் இந்த இளைஞர்கள் தங்கள் வருங்காலம், வாழ்க்கை-ஏன், உயிரையே பணயம் வைக்கிறார்களே' என்ற நினைப்

பால் கண்கள் நிறைந்து கண்ணீர், கன்னங்கள் வழியே உருண்டது.

அப்போது அவரது அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு பாமா உள்ளே வந்தாள். கண்ணீருடனும் வெறித்த பார்வையுடனும் மடியில் சில எழுதப்பட்ட தாள்களுடனும் தான் வந்ததைக் கூட உணராது உட்கார்ந்திருந்த கணவரைப் பார்த்து அவள் துணுக்குற்றுப் போனாள்.

14

பாமா மெல்ல நடந்து போய் கணவரது தோளில் தன் கையைப் பதித்து, "எதுக்குன்னா அழறேள்? ஏன் இப்படி உக்காந்துண்டிருக்கேள்? மடியில என்ன காகிதம்? லெட்டரா?" என்றாள். கட்டிலில் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

ஏற்கெனவே சி.ஐ.டிகாரர்கள் பேச்சை ஒட்டுக் கேட்டு நரேந்திரநாத் பானர்ஜி ஒரு கொலைகாரன் என்பதாக அவள் ஊகித்து விட்டிருந்ததால், ஓரளவுக்கு அவளிடம் உண்மையைச் சொல்லி விட அவர் முடிவு செய்தார். கடிதத்தில் எழுதப்பட்டிருந்தவற்றை ஓரளவுக்குச் சொல்லி விட்டு, "அவனுக்கு அம்மா இல்லையாம். சின்ன வயசிலேயே செத்துப் போயிட்டா போலிருக்கு. உன்னைப் பார்த்ததும் அவனுக்கு அவனோட அம்மா ஞாபகம் ரொம்ப வந்துடுத்தாம். உன்னோட பார்வையில இருந்த கனிவு தன்னோட அம்மா நெனைப்பை ஏற்படுத்தினதா எழுதி இருக்கான். உன்னோட மடியில தலைவெச்சுப் படுத்துண்டு மனசில இருக்கிறதையெல்லாம் உங்கிட்ட கொட்டிடணும் போல இருந்துதாம் அவனுக்கு" என்று கூறி அவர் பெருமூச்செறிந்தார்.

பாமாவுக்குள் சொல்லி முடியாத வியப்பு பரவியது. அவளையும் மீறிக் கண்களில் நீர் வரி இட்டது.

"யாரோ யாரையோ என்னமோ பண்ணிண்டு போறான்னு இருக்க வேண்டியது தானே? இவன் போய் அவனைக் கொன்னதுனால அந்தப் பொண்ணோட போன மானம் திரும்பியா வந்துடப் போறது? போனது போனதுதானே? இப்படியா வாழ்க்கையே பாழ்பண்ணிப்பா?"

"அது மாதிரி நெனச்சு எல்லாருமே நடந்துண்டா என்ன ஆகும்? இந்த நாட்டுப் பொண்கள் கையைப் பிடிச்சு இழுத்தா ஏன்னு கேக்கறதுக்கு நாதி கிடையாதுன்னு கண்டுண்டு வெள்ளைக்காரன் இன்னும் மோசமா நடந்துப்பானா இல்லையா? சொல்லு."

இந்தக் கேள்விக்குப் பாமாவால் பதில் சொல்ல முடியவில்லை. அவள் மவுனமாக இருந்தாள்.

அப்போது வாசல் பக்கத்திலிருந்து ரோந்துப் போலீசாரின் ஊதுகுழல் ஓசை கேட்டது. அவர்கள் வீட்டு வாசற்கதவும் தட்டப்பட்டது. ராஜாராமன் திகைப்புடன் எழுந்து போனார். கூடத்தைக் கடந்து வாசலுக்குச் சென்ற போது அஞ்சனாவும் அமராவதியும் கதவு தட்டப்பட்ட ஓசையால் கண் விழித்து எழுந்து கொண்டதைக் கவனித்தார். சன்னல் வழியே எட்டிப் பார்த்து, "யாரு?" என்றார்.

"நாங்க ரோந்துப் போலீஸ், சாமி. கொஞ்ச நேரத்துக்கு முந்தி ஒரு ஆளு உங்க தோட்டத்துலேருந்து ஓடினான். நாங்க துரத்திட்டு ஓடினோம். ஆளா பிடிக்க முடியல்லே. வீட்டுக்குள்ள புகுந்து எதையாச்சும் திருடிட்டு ஓடினானா இல்லாட்டி நாங்க பார்த்துட்டதால ஓடினானான்னு தெரியல்லே. 'வெசாரிக்கலாம்னு வந்தோம்."

"தோட்டத்துப் பக்கம் காலடிச் சப்தம் கேட்டிச்சு. நான் உடனே லைட்டைப் போட்டேன். அதனால இவங்க வீட்டில எல்லாரும் முழிச்சுட்டிருக்காங்கன்னு நெனச்சு ஓடிப் போயிருப்பான். இங்க எதுவும் திருடு போகல்லே, எவனும் நுழையவும் இல்லேப்பா."

"சரிங்க, சாமி. நாங்க வர்றோம்..."

உள்ளே வந்த அவரிடம், "என்னப்பா?" என்றாள் அஞ்சனா. நடந்ததை இருவரிடமும் தெரிவித்த ராஜாராமன், அவர்களிடம் அவனது நெடிய கடிதத்தைக் கொடுத்தார். இருவரும் உறக்கம் முற்றாய்க் கலைந்தவர்களாகி ஆவலுடனும் பரபரப்புடனும் கடிதத்தைப் படிக்கலாயினர்...

படித்து முடித்ததும், "பாவம்ப்பா அவன்" என்றாள் அஞ்சனா. அமராவதியின் கண்கள் சற்றே சிவந்திருந்தன.

"போலீசுக்குப் பயந்து பயந்து இனிமே அவனோட வாழ்க்கையே ஓடி ஒளியற வாழ்க்கையாத்தான் இருக்கப் போறது. இல்லியாப்பா?" என்றாள் அமராவதி. அவள் குரல் தழுதழுத்தது. முன்பின் அறிமுகம் இல்லாத புதியவன் ஒருவனுக்காகத் தாங்கள் அனைவருமே மனமுருகியதை எண்ணி அவளுள் வியப்பு பரவியது.

கொஞ்ச நேரம் கழித்து நால்வரும் தத்தம் இடங்களில் படுத்துக் கொண்டாலும் ஒருவருக்காவது உறக்கம் வரவில்லை. எல்லாருமே தத்தம் எண்ணங்களில் ஆழ்ந்து போயினர்...

(தொடரும்)



''ராமனுக்கு இலக்குவன் போல எனக்கு சதாசிவம்'' என்று ஜி.டி. பிர்லா விடம் மனமுவந்து கூறினார் ராஜாஜி. ''ராஜாஜி-93'' சிறப்பு மலர் தயாரித்து அளித்த சதாசிவத்துக்கு நாளை விநாயக சதுர்த்தியன்று 93 வயது பூர்த்தியாகிறது. அவரைப் பற்றி அகில இந்திய ரேடியோ துணை டைரக்டர் ஜெனரலாக இருந்து ஓய்வு பெற்றவரும் ரசிகமணியின் அன்புக்குரிய கவிஞருமான ''துறைவன்'' (எஸ். கந்தசாமி) எழுதிய கவிதையை இங்கு பிரசுரித்து மகிழ்கிறோம்.

சிவனை என்றும்
 மறவாத சிந்தையன்
செந்த மிழ்த்துறை
 போற்றும் சதாசிவம்
தவநல் முனிவர்க்(கு)
 இமயம் எனத்தகும்
சங்கர குரு
 தாள்சென்னி சேர்த்தவன்
அவனி முழுதும்
 இசைக்கொடி நாட்டிய
அன்னை எம்.எஸ்.
 ஆருயிர் நற்றுணை!
இவனைப் போலும்
 நல்லறி வாளர்கள்
எங்கு தேடினும்
 காண்ப(து) அரிதரோ!

பூசு வெண்திரு
 நீறுகொள் நெற்றியான்
பொழுதெலாம் மெய்ஞ்
 ஞானமே தேடுவான்
ஆசு தோசன்;
 வெகுண்டுடன் ஆறிடும்
அனலும் ஈரமும்
 அற்புதமாய்த் தரும்
மூசுத் தங்கம்
 போலும்நல் இயல்பினன்
மூச்செலாம் தேசப்
 பற்று நிறைந்தவன்
ஏசுவாரையும்
 பொறுத்தருள்
 புண்ணியன்
ஈகையே ஒரு
 தொழிலெனக்
 கொண்டவன்

இதய ஒலியின்
 நுட்பங்கள் பாடிய
ஏந்தல் சிதம்பர
 நாதனின் அன்பிலே
உதய தாமரை
 போன்றிதழ் பூத்திடும்
உள்ளம் வாய்ந்த
 ஒண்கலைக் காதலன்!
நிதமும் காஞ்சி
 நிமலனின் திருவருள்
நிழலில் நின்று
 மகிழும் தவத்தினன்
சதம் நிறைந்தவன்
 சிறந்துமிக்(கு) ஓங்கிடச்
சங்கரப் பிரான்
 நல்லருள் சூழ்கவே

சேர சோழ
 பாண்டியர் போல்இந்
 நாள்
செந்தமிழ்க்கலை
 பேணிய ''கல்கி''யைத்
தூர நின்று
 காவல் புரிந்(து) அவன்
தொண்டினுக்குப்
 பெருந்துணை யானவன்
காரியத் திறன்
 மிக்க மதிவல்லான்
கலைஞ ராளவர்க்(கு)
 உதவும் ஒரு தனி
வாரியம் எனத்
 தக்க சதாசிவம்
வாழ்க வாழ்க
 வாழ்க நீடூழி யே!

மூதறிஞர் நம்
 ராஜாஜி போற்றிய
முதன்மைச் சீடன்
 இலக்குவன், பூமியில்
வாதனைப் படும்
 ஏழையர் மகிழ்ந்திட
வாரி வாரி
 வழங்கிடும் வண்மையன்
வேத நல்நெறி
 எங்கும் தழைத்திடல்
வேண்டுமென்று
 விழைந்திடும் அந்தணன்,
நீ(டு) அகன்று
 பூதலந்தனில்
சிறந்து வாழ்க
 நெடிது பல்லாண்டரோ!

— துறைவன்

ஆசுதோசன் - எளிதில் திருப்தி அடையக் கூடியவன்

மூசுத்தங்கம் - மூசைத் தங்கம். பத்தரை மாற்று. பொன்கட்டுப் பொன் ஆறுதல் போல என்பது பழமொழி.



இந்திக்குப் போகிறார் சரத்குமார்!

"நடிப்பு என்னுடைய தொழில் இல்லை. பொழுது போக்குக் காகத்தான் நடிக்கிறேன். என்னால் ஆக்ஷன், மசாலா படங்களில் எல்லாம் நடிக்க முடியாது. ஸாரி!" என்று அரவிந்த்சாமி தன்னை நச்சரிக்கும் தயாரிப்பாளர்களுக்கு சலிக்காமல் சொல்லி வருகிறார். அவருடைய காதல் மனைவி காயத்ரிக்கு அரவிந்த் நடிப்பதில் விருப்பமில்லை என்பதால், எந்தப் புதுப்படமும் ஒப்புக் கொள்ளாமல் இருக்கிறார். இதனால் கொஞ்ச காலத்திற்கு அவருடைய வீட்டின் முன் கதையுடனும் அட்வான்சுடனும் காத்துக் கிடக்கும் கூட்டம் காணப்படவில்லை. அவர் மணிரத்னம், சுகாசினியிடம் உதவி இயக்குனராகப் பணி யாற்றுகிறார் என்ற கிசுகிசு வெளி வந்ததிலிருந்து மறுபடி தயரிப்பாளர்கள் அவரது வீட்டை முற்று கையிடுகின்றனர். இந்தமுறை, 'ஒரு படத்தை இயக்கிக் கொடுங்கள்!' என்ற வேண்டுகோளுடன்.

அரவிந்த்சாமியை சிக்கலில் மாட்டி விடுவது சிக் ஷாம்பூ மட்டுமில்லை, இது போன்ற கிசுகிசுக்களும்தான்.

நலிந்து கொண்டிருக்கும் சினிமா தொழிற் சாலை மேலும் நஷ்டமடையாமல் இருக்க முரளி தரும் யோசனை இது :

"இந்திப் படவுலகில் செய்யப்படுவது போல, இரண்டு அல்லது மூன்று முன்னணி நட்சத்திரங் கள் இணைந்து நடித்தால், நிச்சயம் வெற்றிப் படங்களைத் தர முடியும். தமிழ் நடிகர்களும், ஈகோ, இமேஜ் என்று கவலைப் படாமல், கொஞ்சம் காம்ப்ரமைஸ் செய்து கொண்டு சேர்ந்து நடிக்க வேண்டும். அப்போது இரு வருடைய ரசிகர்களுமே படத்தைப் பார்க்க வருவார்கள்..."

மல்டி ஸ்டார் படம் செய்வது நல்ல யோசனைதான். ஆனால் தியேட்டருக்குள் இருவருடைய ரசிகர்களுமே மோதிக் கொள்வார்களே. அப்போது என்ன செய்ய?

சரத்குமார் இந்தியில் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.

'ஜென்டில்மேன்' படம் இந்தியில் மகேஷ் பட் இயக்கத்தில் தயாராவது பழைய செய்தி. அதில் சுபாஸ்ரீ ரோலில் நடித்துக் கொண்டிருக்கும் ஹீராவைப் பார்க்க சரத்குமார் காஷ¬வலாக்ப் போன போது, மகேஷ்பட், "சரண்ராஜ் ஏற்று நடித்த இன்ஸ்பெக்டர் வேடத்தில்



• சீமா பிஸ்வாஸ்

நடிக்கிறீர்களா?" என்று சரத்குமாரைக் கேட்டிருக்கிறார். ஆனால் தேதிகள் பற்றாக்குறை என்பதால், சரத் ஏற்றுக் கொள்ளவில்லை.

"என்னுடைய அடுத்த இந்திப் படத்திற்காவது தேதி கொடுங்கள்" என்று உடனே கேட்டு ஒப்பந்தம் செய்து விட்டார் மகேஷ் பட்!



• அரவிந்த் சாமி



• நாசர்

இளையராஜாவின் பெயரை யாரும் உரக்க உச்சரிப்பதில்லை. 'இசைஞானி', ராஜா சார், அண்ணன் இப்படி மரியாதை கலந்த பக்தியோடுதான் பலரும் சொல்கிறார்கள். நாசர் ஒருபடி மேலேயே போய் விட்டார். "நீங்கள் இயக்கிக் கொண்டிருக்கும் 'அவதாரம்' படத்திற்கு இசையமைப்பது யார்?" என்று நாசரைக் கேட்ட போது அவர், லேசாகத் தலையை உயர்த்தி, ராஜாவின் ரிகார்டிங் அறை இருந்த திசையை நோக்கிச் சாடை காட்டினார். ஒரு கணம் புரியாமல் விழித்த போது, கூட இருந்த ரேவதி, "என்னங்க, புரியலையா? இளையராஜா சார் தாங்க!" என்று புதிரை விடுவித்தார்! நாசரின் அபிமானத்தை மெச்சி, இளையராஜா, எல்லா பாடல்களையும் தேன்மிட்டாயாகப் போட்டுத்தருவாராக!

சமீபத்திய அக்மார்க் தகவல் ஒன்று: பிரபல இந்தி திரைப்பட இயக்குனர் சேகர் கபூர் இயக்கத்தில் 'பாண்டிட் குயின்' என்ற பெயரில் பூலான் தேவியின் கதை படமாகிறது.

சீமா பிஸ்வாஸ் என்ற கௌஹாத்தி மங்கை ஹீரோயினாக நடிக்க, 'ஆஸ்காரை' எய்ம் பண்ணி எடுக்கிறார்களாம்!

"பூலான் தேவி வாழ்க்கை, கொடூரம் வாய்ந்ததாக இருந்தது. அதைப் படமாக்கும் போது சென்ஸார் பிராப்ளம் வருமே என்று கேட்கிறார்கள். இந்தப் படத்தைப் பொறுத்த வரை, ஒரு வெட்டு விழுந்தாலும் கதையோட்டம் பாதிக்கப்படும். 'ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட்' படத்துக்கு ஒரு வெட்டு இல்லாமல் சர்ட்டிபிகேட் கொடுத்தார்களே, அங்கே? அது மாதிரிதான் இப்படத்தையும் கருத வேண்டும். ஸ்பீல்பெர்க்குக்குக் கிடைத்த 'நியாயம்' எனக்கும் கிடைக்கும் என்று நம்புகிறேன்" என்கிறார் சேகர் கபூர்! இதற்கிடையில், "என்னைக் கலந்தாலோசிக்காமல் என் கதையைப் படமாக்கியிருக்கிறார்கள். படத்தை நான் பார்ப்பேன்; பிடிக்காவிட்டால் தீக்குளிப்பேன்!" என்கிறார் பூலான்தேவி.

என்ன ஒரு மாற்றம்!

— ஹர்ஷராஜ்

சூப்பர் கிரைம் ஸ்டோரி சார்! ஒரு மாறுதலுக்காக வை.மு.கோதை நாயகி ஸ்டைல்ல எழுதியிருக்காங்க!

பத்ரிநாதனுக்கு இயற்கையிலேயே நல்ல கட்டுமத்தான சரீரமும், கம்பீரமான தோற்றமும். வசீகரம் பொருந்திய முகக்களையும், காண்போர் உள்ளத்தைக் கவரும் தன்மையும் வாய்ந்த சிறந்த வாலிபன்.

அவன் தகப்பனார் தாசில்தார் உத்யோகம் பார்த்து ஓய்வு பெற்றவர். வாழ்க்கையின் அந்திமக் காலத்தை, பகவானுக்கு அருகில் இருந்து, அவனைத் தொழுது, பகவானின் அடியார்களுக்குப் பணி செய்து விச்ராந்தியாகக் கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், இந்த மாதிரி சமுத்திரக்கரையை யொட்டி ஒரு பங்களா வாங்கி அதில் குடியும் வந்து விட்டார். பங்களாவிலிருந்து நடக்கிற தூரத்தில் ஜலத்தையொட்டி லக்ஷ்மி நாராயணன் கோயில் அமைந்திருந்தது. தாசில்தார் பக்திமானாக இருந்தது போலவே, தன் ஒரே வாரிசான பத்ரிநாதனையும் பக்திமானாக வளர்த்து விட்டார்.

"விரை ஒன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும்?" என்ற பழமொழிக்கேற்ப பத்ரிநாதனும் பெற்றோருக்கு அடங்கிய பிள்ளையாகவும், பகவானிடத்தில் பக்தி உள்ளவனாகவும் வளர்ந்து விட்டான். அவன் உத்யோகத்திற்குப் போய்த்தான் பங்களாவில் காலக்ஷேபம் நடக்க வேண்டுமென்ற நிர்க்கதியில் பகவான் அவர்களை வைத்து விடவில்லை. பத்ரிநாதனுக்கு அற்புதமான ஸௌந்தரியத்தையும், புத்திவிசாலத்தையும், சிறந்த ஒழுக்கத்தையும், கல்வித்திறத்தையும் கொடுத்திருக்கிறான். பத்ரிநாதனும் தனக்கு இத்தனை சத்விஷயங்களை அளித்த பகவானுக்கு அனுவரதமும் நன்றி கூறிக் கொண்டு, அவனைத் தொழுது வருகிறான். புத்தி விசாலமாக இருக்கிற படியால் கதை எழுதும் சாமர்த்தியம் கைவரப் பெற்றது. அவன் எழுதுகிற கதைகளை தினசரி, வார, மாதப் பத்திரிகைகள் பதிப்பிக்கின்றன. ஜனங்களும் அவன் எழுதுகின்ற கதைகளை எல்லாம், 'ஆஹாஹா' என்றும் 'ஓஹோஹோ' என்றும் ஆனந்தமாகப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். சில பத்திரிகைகள் அவனுடைய ஸௌந்தர்யமான வதனத்தையும் பதிப்பித்து, கூடவே அவனது விலாஸத்தையும் வெளியிட்டு விட்ட படியால், தினம் தினம் தபால்காரன் கட்டுக்கட்டாய்க் கடிதங்களைச் சுமந்து வருகிறான்.

பத்ரிநாதன் அனுதினமும் புத்தியைப் பிழிந்து கதை எழுதியான பின்னர்தான் ஆஹாரம் உண்பது வழக்கம். சாப்பிட்டு விட்டுச் சற்று நேரம் கண்ணயர்வான். பின் எழுந்து முகம் கழுவி, தாயார் தரும் காப்பியை சாப்பிடுவான். பின், புறப்பட்டு சமுத்திரக்கரையோரமாக காலாற நடந்து சென்று கோயிலுக்குள் நுழைவான்.

பகவத்கிருபையோடு கோயிலில் இருந்து வருங்காலம் அவன், எழுதவிருக்கும் கதை பற்றி நினைத்துக் கொண்டே வருவான். 'ரஸிக ஜனங்கள் எல்லாரும் உத்தமி! எனவும், சீலவதி! எனவும் லக்ஷ்மி கடாட்சம் அமைந்தவள்! எனவும் நினைத்துக் கொண்டிருக்கும் அந்த ராதைதான் கொலைகாரி! பழிகாரி!' என்று எப்படிச் சொல்லப் போகிறோம் என்று பலவாறாக இன்றும் நினைத்துக் கொண்டே வந்த போதுதான் எதிரில் அவனையே பார்த்துக் கொண்டு வந்த இருவரைக் கவனியாது நடந்தான்.

அவர்கள் இருவரும் வாலிபர்கள் - ஸ்ரீமான் பத்ரிநாதனின் லட்சோப லட்ச ரஸிக ஜனங்களில் இருவர். அவர்களுக்குப் பத்ரிநாதன் சாக்ஷாத் லக்ஷ்மி நாராயணனாகவே தெரிந்தான். இருவரில் அரும்பு மீசை வைத்திருந்தவன் "ஸார்! ஸார்!" என்று அழைத்தான்.

சாயங்காலசத்ரு அல்லது பத்ரிநாதனும் பரிதாபப் பதுமையும்

தன்போக்காக நடக்கும் பத்ரிநாதன் இந்தக் குரலைக் கேட்டதும் மந்திரத்தினால் கட்டுப்பட்டவன் போல் நின்று "தாங்கள் யாரோ?" என்று கேட்டான்.

"உங்கள் ரஸிக ஜன கோடிகளில் இருதுளிகள். எங்கள் பெயர் ராமநாதன், ஸத்யமூர்த்தி."

பத்ரி : ஹா! ராமனாதன். ஸத்யமூர்த்தி. திவ்யமான பெயர்கள். திவ்ய ரூபம். உங்களைக் கண்டதினால் என் மனம் சொல்லொணா

ஆனந்தத்தை அடைகிறது.

ஸத்ய : ஸ்ரீமான் பத்ரிநாதன்! எங்களுக்குத் தேஹமெல்லாம் சிலிர்க்கிறது. எங்கள் இதயராஜாவை நேரில் ப்ரத்யக்ஷமாய்ப் பார்ப்போம் என்று நாங்கள் கனவிலும் கருதியதேயில்லை. உங்களை எப்போதாவது பார்த்தால் உங்களோடு சண்டை போட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

பத்ரி : ஹா! சண்டையா! ஏன்? எதற்காக? நான் உங்களுக்கு என்ன ஹானி செய்தேன்?

ராம : பின்னே உத்தமி ராதையை நீங்கள் எப்படி வேறு விதமாக எழுதப் போயிற்று?

பத்ரி : நீங்கள் இருவரும் காலக்ஷேபத்திற்கு என்ன செய்கிறீர்கள்? எங்கே ஜாகையிருக்கிறீர்கள்?



ஸத்ய : ஸ்ரீமான் பத்ரிநாதன் சமத்காரமாகப் பேசுவதைப் பார்த்தாயா ராமனாதா? நாம் கதை பற்றிக் கேட்டால், அவர் நம் ஜாகை பற்றி விசாரிக்கிறார்.

ராம : நாங்கள் கடலோடிகள். காலக்ஷேபத்திற்கு மீன் பிடிக்கிறோம். எங்களுக்கு இந்த சமுத்திரக்கரையோரம் தான் ஜாகை. பொழுது போக்கிற்கு உங்கள் கதைகளைப் படிக்கிறோம்.

ஸத்ய : ஸார். நீங்கள் எங்களோடு சேர்ந்து ஏதாவது பலஹாரம் பண்ணிக் காப்பி சாப்பிட்டால்தான் எங்களுக்கு ஆனந்தமுண்டாகும். வருகிறீர்களா ஸார்?

பத்ரி : ஆஹா! அதற்கென்ன, சாப்பிட்டால், போயிற்று.

மணல் பிரதேசத்தில் கால்கள் புதையப் புதைய நடந்து கொண்டிருந்த போது பத்ரிநாதன் இன்னொரு காக்ஷியைக் கண்டான். சுமார் பதினெட்டு வயது மதிக்கத்தக்க ஒரு யுவதி அவர்களுக்குச் சற்று தூரத்தில் நடந்து வந்து கொண்டிருந்தாள். நீலோத்பல மலரைப் போன்ற அவளது கண்களோ அப்படியே பத்ரிநாதன் மீது ஸ்தம்பித்து நின்றன. அவள் முகத்தில் இயற்கையாகப் பகவான் கொடுத்திருக்கும் அழகு அப்படியே பிரகாசிக்கின்றதெனினும் மனத்தில் உள்ளூர வாட்டும் கவலையால் அழகே குறைந்து விட்டது போன்ற ஒரு சோகக்களை குடிகொண்டிருந்தது. அவள் அவ்வப்போது இவர்கள் பக்கம் வர பிரயத்னம் செய்வதும், பின் தயங்கிப் பின் வாங்குவதுமாக நடந்து கொண்டிருந்தாள்.

அவனுடன் வந்து கொண்டிருந்த ராமனாதனின் முகத்தில் சிடு சிடுப்பை, பத்ரிநாதன் தன் கடைக்கண்ணால் கவனித்து விட்டான். அது மட்டுமல்ல. ராமனாதன், அந்தப் பெண்ணைக் கண் ஜாடையால் தூஷணையாகப் பாவம் காட்டுவதையும் கவனித்து விட்டான். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதே போல், சமத்காரியான பத்ரிநாதனுக்கு இந்த நயன பாஷை கூட கண்களில் படாது போனால், அவன் வேறு எந்த காக்ஷியைத்தான் காணமுடியும்! கதையும், கட்டுரையும் எழுத முடியும்!

பத்ரிநாதன் அந்தப் பெண்ணின் பக்கம் திரும்பி, ''அம்மா, இங்கே வா! என்னை அசல் பட்டணத்து சோதாவென்றோ, அல்காப் பேர்வழி என்றோ எண்ணிக் கொண்டு விடாதே. நான் நாவல் எழுதுபவன்'' என்று சிரித்துக் கூறினான்.

அந்தப் பெண் அருகில் வந்தாள். அவளது கண்களில் இன்னும் பயம் குடிகொண்டிருந்தது. முகமெல்லாம் தாமரையிலையின் மேல் தண்ணீர்த்துளிகள் இருப்பது போல, வியர்த்து

சுபா

விட்டிருந்தது. கழுத்தில் ஜலதாரையாக வியர் வைப் பெருக்கு இறங்கிக் கொண்டிருந்தது.

பத்ரி : அம்மா! நீ யார்? எதற்கு நான் போகும் பாதையோடே வருகிறாய்?

பெண் : என் பெயர் அனுசூயா தேவி. நீங்கள் ஸ்ரீமான் பத்ரிநாதன் தானே?

பத்ரி : ஆம் அம்மணி! என்னை நீவிர் அறிவீரோ?

அனு : தெரியும். உங்கள் நாவல்களைப் படித்திருக்கிறேன். 'ஜென்மாந்திர திசைஷ' என்ற நாவல் எழுதி வருகிறீர்களே. அதில் அந்த ராதையை நீங்கள் இந்தப் பாடு படுத்துவது, ஸ்த்ரீயாயிருக்கிற காரணத்தினால் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவே யில்லை.

பத்ரி : அது இருக்கட்டும். நீ என்னவோ பயந்து கொண்டிருக்கிற மாதிரி தெரிகிறதே.

அனு : ஹா! நானா! பயந்து இருக்கிறேனா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லையே!

பத்ரி : உடம்பு இத்தனை வியர்த்திருக்கிறதே!

அனு : என் உடல் வாகு அப்படி! அதைப் பார்த்துப் பயந்தேன் என்பதா?

பத்ரி : ஆக நீயும் எனது ரஸிக ஜனங்களில் ஒருத்திதான். இதோ இந்த இருவரையும் தெரியுமா?

இவர் ஸ்ரீமான் ராமநாதன். இவர் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி. இவர்களுங்கூட நான் ராதையை அவ்வாறு எழுதியதற்காக என் மீது துவேஷங் கொண்டிருப்பவர்கள்தான். அம்மா, அனுசூயா தேவி. உங்கள் அபிமான ராதையின் குணத்திற்கு எந்த ஹானியும் நேராத படிக்கு நான் மாற்றி எழுதிவிடுகிறேன். இவர்கள் இருவரும் என்னைப் பலஹாரக் கடைக்கு அழைத்துப் போகிறார்கள். நீயும் வருகிறாயா?"

அனுசூயா தேவியின் கண்களில் மறுபடியும் அந்த பயம் தெரிந்தது. இவளுக்கு என்ன பயம் இருந்து விட முடியும் என்று பத்ரிநாதனுக்குத் தோன்றுகிறது. பத்ரிநாதனின் மனத்தில் இம்மாதிரியான விசாரமெலாம் இருக்கும் போதே, அனுசூயா தேவி, "நான் உங்களோடு வந்து பலஹாரக் கடையில், பலஹாரம் பண்ணினால் சந்தோஷத்திற்கு இடமாகிவிடும். இப்படி நடுவீதியில் பேசுவது நியாயமில்லை" என்று கூறி நடக்கவாரம்பித்தாள்.

"ஸாருக்கு, ஒரு பெண் ரஸிகை வந்தவுடன் நாமெல்லாம் வேண்டப்படாதவர்களாகி விட்டோம்" என்று ஸத்யமூர்த்தி ஏளனம் தொனித்த குரலில் கூறவும்தான், பத்ரிநாதனுக்கு மறுபடி பிரக்ஞை வந்தது.

"சேச்சே. நான் என்ன சோதாப்பயலா? எனக்கு எல்லோரும் ஒன்றுதான். வாருங்கள்! பலஹாரக்கடைக்குப் போவோம்" என்று பத்ரிநாதன் முன் நடந்தான். ஸத்யமூர்த்தி தக்ஷணமே நடக்கவாரம்பித்தான். ராமனாதன் தயங்கினான். அவன் தயக்கத்தைப் பத்ரிநாதன் கண்ணுற்றுவிட்டான்.

> "ஒரு பாடத்தை நடத்தி முடிச்சுட்டு... மாணவர்களிடம், இந்தப் பாடத்தில் ஏதேனும் சந்தேகம் இருக்கா கேளுங்கன்னு கேட்டது தப்பாப் போச்சு!"
>
> " ஏன் சார்?"
>
> "இது முழுப்பரிட்சையில் வருமான்னு சந்தேகம் கேட்கிறாங்க!"
>
> - செல்வக்குமார்

பத்ரி : இதென்ன! ஸ்ரீமான் ராமனாதன் முன்வைத்த காலைப் பின் வைக்கிறாற் போல் தெரிகிறதே!


ராம : ஆமாம் ஸார்! திடீரென்று வயிற்றில் சங்கடம் உண்டாகியிருக்கிறது. நீங்கள் இருவர் மட்டும் போய் பலஹாரக்கடையில் உட்கார்ந்திருங்கள். நான் பின்னாலேயே வந்து விடுகிறேன்.

சொல்லிவிட்டு, ராமனாதன் அவர்கள் மறுமொழிக்குக் கூடக் காத்திராமல், வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போலே அந்த இடத்தை விட்டகன்றான்.

பத்ரிநாதனுக்குப் பலகாரக்கடையில் இருப்புக் கொள்ளவேயில்லை. அனுசூயா தேவியின் முகம் பயதேவியின் க்ருஹமாகக் காக்ஷியளித்ததும், அவள் போனதும், கூடவே ராமனாதனும், அவனிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு போனதும், அவனுள் ஏனோ தெரியவில்லை. ஒரு விதமான மனக்கிலேசத்தைக் கொடுத்து விட்டன. பலஹாரமெல்லாம் வேண்டாம் என்று மறுத்து, வெறும் காப்பி மட்டும் சாப்பிட்டான். ஸத்யமூர்த்தியும் அவ்வாறே காப்பி மட்டும் சாப்பிட்டான். இருவரும் காப்பி க்ளப்பில் இருந்து வெளியே வந்தார்கள்.

பத்ரி : ஸத்யமூர்த்தி, அனுசூயாவை உமக்கு முன்பே பரிச்சயமோ? ஸ்ரீமான் ராமனாதன் அவளிடம் கண் ஜாடைக்காட்டி சூக்ஷ்மமாக ஏதோ சொல்லிக் கொண்டிருந்ததை நான் பார்த்து விட்டேன். ஒரு வேளை ராமனாதனுக்கு அனுசூயா தேவியைப் பரிச்சயமிருக்குமோ! ராமனாதன் உம் ஆத்ம ஸிநேகிதன் தானே?

ஸத்ய : அவனைப் பற்றிக் கேள்விப்பட்டதையெல்லாம் எனக்கு உங்களிடம் கூறத்திறமில்லை. மேலும் அது ஸிநேகிதத் துரோகமல்லவா?



பத்ரி : அப்படி, நான் என்ன வேண்டப் படாதவனா? சும்மாச் சொல்லும்! அப் படியே அது பரம ரஹஸியமான விஷய மென்றால், அது என் ஹிருதயத்தை விட்டு இம்மி கூட அசையாது என்று இப்போதே உமக்கு நான் வாக்குத் தத்தம் செய்து தரு கிறேன்.

ஸத்ய : ஹா! என்னது! நீங்கள் எவ் வளவு பெரிய நாவல் ஆசிரியர்! எம்.ஏ. படித்து சர்க்கார் உத்யோகத்தைக் கூட த்ருணமாக மதித்து உதறித்தள்ளியவர். நீங்கள் எனக்கு வாக்குத் தத்தம் செய்து கொடுப்பதா? ஹே! பகவானே! இது என்ன சோதனை?

பத்ரி : அப்படியெல்லாம் நீர் ஒன்றும் சங்கடப்பட வேண்டியதில்லை. கேள்விப் பட்டதென்னவென்று கூறும்!

ஸத்ய : வேறொன்றுமில்லை ஸார். ராம னாதனின் மனைவி ம்ருதுத்தன்மையும், மதுர கண்டமும் கொண்டு அழகு வெள்ளம் கரை புரள்வது போல் சுந்தரவதனியாய் விளங்கு கிறாள் என்று சொல்லக் கேழ்வி. அத்தகைய ரூபவதியை ராமனாதன் சந்தேகப்பட்டும், பொறாமைப் பட்டும் சித்திரவதை செய்வ தாகக் கேழ்விப்பட்டேன்.

பத்ரி : ஹா! நான் நினைத்தது சரியாகப் போய் விட்டது! ராமனாதன் அனுசூயா தேவியிடம் சூக்ஷமமாக ஜாடை காட்டிய திலே கண்களின் மூலம் ஆலகால விஷத் தைக் கக்கினான். அந்தப் பெண்தான் ஒரு வேளை அவன் மனைவியாய் இருக்கக் கூடுமோ. ஹே! நாராயணா! இது என்ன சோதனை? உன் திருவடிகளைத் தொழுது போகலாம் என்ற எண்ணத்தோடு வந்த எனக்கு இப்படி ஒரு வியாஜ்யத்தில் சிக்க வேண்டுமென்பது உன் இஷ்டமா? உமக்கு, ஸ்ரீமான் ராமனாதனின் வீடு தெரியுமல்லவா?

ஸத்ய : தெரியும்.

பத்ரி : வாரும். போவோம்.

சமுத்ரக்கரையையொட்டியே ஸத்ய மூர்த்தி, பத்ரிநாதனை அழைத்துப் போனான். அதிக நேரஞ்செல்லவில்லை. நன்மை வளருவதாயினும், தீமை வளருவதா யினும் நிமிஷக்கணக்கின் வேகமே யுகக் கணக்கில் ஆகக்கூடிய பலனைத் தேடிக் கொடுத்து தன் முழு சக்தியையும் காட்டிவிடு மல்லவா?

பத்ரிநாதனுக்கு அதே போல் தான் இருந் தது. வினாடிகளே யுகங்களாகத் தெரிந்தன. ஒருவாறாக அவர்கள் இருவரும் ராமனா தனின் வீட்டையடைந்தனர். வீட்டு வாசல் கதவு திறந்தே இருந்தது. பத்ரிநாதனின் கால் கள் அவனை அறியாமலேயே பின்னலிட்டு உதறுகின்றன. "ஸத்யா! நீரும் உள்ளே வாரும்" என்று கூறிவிட்டு கூறத்திறமற்ற சங்கடத்துடன் உள்ளே நுழைந்தான்.

அவன் வீட்டினுள் காலடி எடுத்து வைத் ததுதான் தாமதம், வீட்டினுள் இருந்து, "அடி அனுசூயா. என் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டாயே" என்று பெரியதாக ராமனாதனின் அலறல் கேட்டது.


"ஐயோ! அனுசூயா! உனக்கு என்னவா யிற்று?" என்று அந்த தீனமான அலறல் கேட்டு பத்ரிநாதன் பதைக்கப் பதைக்க உள்ளே ஓடினான்.

கூடத்தில் அவன் கண்ட காக்ஷி பத்ரி நாதனின் இதயத்தைப் பிளந்தது. அங்கே கூடத்தில் நெடுஞ்சாண் கிடையாக, பரப்ரம்ம ஸ்வரூபமாக அனுசூயா தேவி கிடந்தாள். அவள் மணிக்கழுத்தில் ஒரு தாம்புக்கயிறு சுருக்கிட்டுக் கிடந்தது. பக்கத் தில் ஒரு தேக்கு பெஞ்சு உருண்டு கிடந்தது. கூடத்தின் இன்னொரு மூலையில் அலாரம் டைம்பீஸ் ஒன்றும் உருண்டிருந்தது. அனு சூயாவின் கழுத்தில் தாம்புக்கயிறு அழுத்திய தால் உதிரம் கட்டிப் போய் கருஞ்சிவப்பாய் காக்ஷியளித்த கோரத்தைக் கூறத்திறமில்லை. ராமனாதன் அவள் அருகில் உட்கார்ந்து முகத்தில் அறைந்து அலறிக் கொண்டிருந் தான்.

ராமனாதன் : அனுசூயா, நீ இப்படித் தற்கொலை செய்து கொள்வாய் என்று எனக்கு சூக்ஷமமாகவேனும் தெரிந்திருந்தால், நான் உன் மீது சந்தேஹபாணங்களை வீசி யிருக்க மாட்டேன். ஐயோ, என் பகவானே. ஹே! அனாத ரக்ஷகா. இது என்ன கொடுமை!

பத்ரிநாதனின் இதயம் வெடித்துவிடும் போலாகி விட்டது. அவன் ஆவி துடிக்கிறது. இந்த சோதாப்பயல் மனைவியைத் தூக்கில் ஏற்றிக் கொன்று விட்டான். கீழே ஒரு பெஞ்சையுருட்டி விட்டு, அதன் மீதிருந்த கடிகாரத்தையுமுருட்டி விட்டு, இப்படி ஒரு நாடகம் நடத்துகிறான். கிராதகன்.

பத்ரி : ஹே! ராமனாதா! உன் மனை வியை சந்தேகப்பட்டு, அவள் என்னிடம்



"யோவ், எண்ணெய்கடைக்காரரே! அவர் மட்டும் பணமே கொடுக்காம எண்ணெய் வாங்கிட்டுப் போறாரே, அதெப்படி?"

"அவர் ஆயில் சந்தா கட்டியிருக்காருங்க!"

- பாஸ்

வந்து நாவல் பற்றி சம்பாஷித்தான் என்பதற்காக அவனைக் கொன்று விட்டாய். நீதான் அவன் கழுத்துக்கு சுருக்கிட்டவன். இப்போது தப்பித்துக் கொள்ளலாம் என்பதற்காக இப்படி ஒரு நாடகம் போடுகிறாயா? உன்னை போலீஸார் வசம் ஒப்படைத்து சிறைக்கு அனுப்பாவிடில் நான் நாவல் ஆசிரியன் பத்ரிநாதனே அல்லன்.

பத்ரிநாதனின் நாடி விழுந்துவிடும் போல் துடிக்கிறது. தேகமாத்யந்தமும் குபீரென்று சுடு ஆவி கிளம்பி வருத்துகிறது.

"என் குணவதியை நான் கொன்றேனா? ஸ்ரீமான் பத்ரிநாதன், இது என் அந்தரங்க விவஹாரம். இந்த வியாஜ்யத்தில் எல்லாம் நீர் தலையிடாதேயும். உடனே இங்கிருந்து போய்விடும்" என்று கர்ஜனை செய்தான்.

பத்ரிநாதன் அந்தக் காக்ஷியைக் காணக் கூடாதென எவ்வளவோ சங்கல்பம் செய்து கொண்டும், அவன் கண்கள் அந்தக் காக்ஷியையே இமை கொட்டாது பார்த்தன. உருண்டு கிடக்கும் கடிகாரம். ஹா! இதென்ன? இதற்கு என்ன அர்த்தம்? ஸ்ரீமதி அனுசூயா தேவியின் கழுத்தில் வியர்வையிருக்கிறதே! எங்காவது சடலத்திற்கு வியர்க்குமா? ஏன், ஜீவன் பிரியும் தறுவாயில் வியர்த்திருந்தால் அந்த வியர்வையும் ஜீவன் பிரிந்தவுடன் ஆவியாகிவிடுமா? ஆகாது. அப்படியானால் அனுசூயாதேவியை இந்தப் பாதகன் கொன்றே போட்டானா? என்று பலவாறாக நினைத்த பத்ரிநாதன், திடீரென்று கடகடவென்று சிரிக்கவாரம்பித்தான்.

பத்ரி : ராமனாதா. போதும் உம் நாடகம். உம் மனைவியை எழுந்திருக்கச் சொல்லும். அவளுக்கு ப்ராணாவஸ்தையாகவிருக்கப் போகிறது.

ராம : நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ஸ்ரீமான் பத்ரிநாதன்?

பத்ரி : உம் மனைவியை முதலில் சந்தித்த போதே வியர்வையோடு இருந்தாள். ஸ்ரீமதி அனுசூயா அது அவளுடைய உடல் இயற்கை என்று சொன்னாள். இப்போதும் அவள் கழுத்தைச் சுற்றி ஜலதாரை! சடலத்திற்கு வியர்த்து விடாதா என்று என் மீது கேள்வி பாணந்தொடுப்பாய். சடலத்தின் மீது வியர்வை ஜலம் தெரியக்கூடும். ஆனால் நீ அவள் கழுத்தில் பூசியிருக்கும் செஞ்சாந்துக் குழம்பு கரைந்திருப்பதைப் பார். ரத்தம் கட்டிப் போயிருந்தால் இப்படிக் கரைந்து போகுமா? மேலும், கீழே உருண்டிருக்கும் கடிகாரத்தைப் பார். அது உருண்டால் ஓடாது. நிற்க வேண்டும் என்று நீ மதியூகஞ் செய்து விட்டாய். ஆனால், நான் இந்த வீட்டில் நுழையுந் தறுவாயில் அதை ஓடாது நிறுத்தியிருக்கிறாய். அதையும் என் கண்கள் கவனித்து விட்டன. ஸ்ரீமதி அனுசூயாதேவி, எழுந்திரும்மா.

பத்ரிநாதன் சரக்கென்று தன் வேட்டி நுனியைக் கிழித்தான். அதை மிகத்திடமாகச் சுருட்டி அதன் முனையை அனுசூயாதேவியின் மூக்கில் நுழைத்து மிருதுவாக அசக்கினான்.

அங்கே ஓர் அற்புதம் நிகழ்ந்தது. செத்த அனுசூயா தேவி 'ஹாச்' என்ற தும்மலுடன் எழுந்து உட்கார்ந்தாள். இதுகாறும் ஒரு பர புருஷன் முன் படுத்துக் கிடந்ததற்காக வெட்கப்பட்டு, அவளை அந்நிலைக்கு ஆளாக்கிய ராமனாதனின் காதைப் பிடித்துத் திருகினாள்.

அனுசூயா : எல்லாம் உங்களால் தான் வந்தது. ஸ்ரீமான் பத்ரிநாதனை பரீக்ஷித்துப் பார்க்க வேண்டும் என்று என்னை நச்சரித்து உயிர் எடுத்தீர்களே. பரீக்ஷித்து விட்டீர்களல்லவா?

ராம : ஆஹா! ஸத்யமூர்த்தியும் தான் சமத்காரமாகப் பேசி ஸ்ரீமான் பத்ரிநாதனை இங்கே அழைத்துக் கொண்டு வந்து விட்டானே. சமுத்ரக் கரையோரம் ஜாகையெடுத்துக் கொண்டு, அவர் தினமும் இந்தப் பக்கமாக சாந்த ஸ்வரூபியாக நடக்கப் பார்த்துத் தானே, அவருடைய ரஸிக ஜனங்களாகிய நமக்கு இந்தத் திட்டம் தோன்றியது. ஆஹா! அவர் சமத்காரமே, சமத்காரம்.

பத்ரிநாதன் பெருமூச்சு ஒன்று விடுகிறான். எல்லாம் சுபமாக முடிந்ததற்காக லக்ஷ்மி நாராயணன் இருக்கும் திசை நோக்கிக் கைதூக்கித் தொழுதான். கோயிலின் கண்டாமணி 'டிங்டாங்' என்று கம்பீரமாக ஒலித்தது.

மற்றபேர் எல்லோரும் மனம் விட்டு ஒரு துள்ளு துள்ளிக் குதூகலமாகச் சிரித்தார்கள். பத்ரிநாதனும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டான்.

மங்களம்



யாரோ ஒரு மறத்தமிழன் பற்றிய வீர தீர பராக்கிரமப் படமோ என்று டைட்டி

செந்தமிழ்ச் செல்வன்

லைப் பார்த்தவுடன் நினைத்தவர்களுக்கு முன்னெச்சரிக்கை : குண்டூசி சைஸுக்குக் கூட இதில் வீரமில்லை, தீரமில்லை.

கதை என்ற வஸ்துவில் முக்கியப்பட்டவர்களே டபாய்க்கும் போது, நமக்கெதுக்கு அதெல்லாம்? சும்மனாங்காச்சுக்கும் ஒரு எட்டு பாட்டு, கொஞ்சம் சண்டை, சென்டிமென்ட். போறாது?

பிரசாந்த் - மதுபாலா ஹீரோ(யின்). சென்ஸாரின் கைவண்ணம் சில பாடல் காட்சிகளில் பளிச்சிடுகிறது. சம்பந்தப்பட்டவர்களுக்கு நமஸ்காரம். ஆனால் சிவரஞ்சனி நடிக்கும் சில காட்சிகள் தப்பியது எப்படி? எப்படி?

ராசாவும் எம்.எஸ்.வியும் சேர்ந்து இசை பொழிந்திருக்கிறார்கள். பழைய டியூன்களுக்கெல்லாம் மறு வாழ்வு.

இரண்டு விஷயங்களைக் குறிப்பிட வேண்டும். நல்ல ஒரு காமிராமேனை அறிமுகப்படுத்தியிருப்பதோடு, நல்ல லொகேஷனும் பிடித்திருக்கிறார்கள். அதற்கேற்ப கலை இயக்குநரையும் 'பெண்டெ'டுத்திருக்கிறார்கள். இவ்விரு விஷயங்களைத் தவிர சொல்லிக் கொள்ளும்படி படத்தில் வேறொன்றுமில்லை. அவரவர் அனுதாபங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் இயக்குநருக்கு அனுப்பி வைப்பீர்களாக.

- துளசி



"காலம் ரொம்ப முன்னேறிடிச்சு சார்!"

"எதை வெச்சு சொல்றீங்க?"

"லஞ்சத் தொகைக்கு முழு பாதுகாப்பு, எங்கள் கம்பெனியின் வைப்பு நிதி முதலீடு'ன்னு பத்திரிகையில முழுப் பக்க விளம்பரம் வந்திருக்கே!"

- சீர்காழி. வி. ரேவதி



''உன் மீது கோபம் வந்தா, உன் கணவர் உதை, உதையின்னு உதைப்பாரா...? ரொம்ப வலிக்குமே, பாவம்!''

''பாவம்தான், ஆனா அவர் ஸ்கூட்டருக்கு எவ்வளவு உதைச்சாலும் வலி தெரியாது!''

- சோம. முத்துக்குமார்

சிக்கல் இல்லாத வாழ்க்கை...

மூலைக்கு மூலை விளம்பரங்கள் - 'ஆபரேஷன் இல்லாமலே குணப்படுத்தலாம்! மூலிகை மருந்துகளால் மாயமாய் மறையும்!' - இப்படி பைல்ஸை அனாயாசமாகக் குணப்படுத்துவதாக அலறும் விளம்பரங்கள்! இவற்றை எவ்வளவு தூரம் நம்பலாம் என்ற கேள்விக்குப் பதில் தேடும் முன், பைல்ஸ் மற்றும் ஃபிஷர் (ஆசனவாய்ப் பகுதியில் வெடிப்பு) ஏற்படுவதற்கு முக்கியக் காரணமான மலச்சிக்கல் பற்றித் தெரிஞ்சுக்கறது நல்லது.

தினமும் காலையில் (அல்லது குறிப்பிட்ட ஒரு நேரத்தில்) நம் உடலிலிருந்து திட கழிவுப் பொருளை வெளியேற்றுகிறோம். சராசரியாக 200 கிராம் கழிவுப் பொருள் வெளியேறணும். சிலர் இதை ஒரே முறையாகவும் வேறு சிலர் இரண்டு அல்லது மூன்று முறைகளிலும் வெளியேற்றுகிறார்கள்.

இந்தக் கழிவுப் பொருளை வெளியேற்றத் தவறினால் அது பெருகுடலின் கடைசிப் பகுதியில் தேங்கிக் கொள்கிறது.

பெருகுடலின் முக்கியப் பணியே உறிஞ்சுதல்தான். உணவில் உள்ள நீரையும் சத்துக்களையும் அது உறிஞ்சிக் கொள்ளும். ஆனால், கழிவுப் பொருள் தேங்கியிருந்தால், அதிலிருக்கும் ஈரப் பசையையும் சேர்த்து உறிஞ்சிக் கொள்கிறது பெருகுடல். விளைவு... ஒருநாள் முழுவதும் தேங்கியிருக்கும் கழிவிலிருந்து பெருவாரியாக நீர் உறிஞ்சப்பட்டு விட, அது கடினப்பட்டுப் போகிறது. அதனை வெளியேற்றுவது கஷ்டமாகிறது.

உடலிலிருந்து கழிவு வெளியேறும் வரை, தலைவலி, மந்தத்தன்மை, பசியின்மை, வயிற்று உப்புசம், வாயுத் தொல்லை என்று பலமுனைப் படுத்தல்கள் ஆட்டி வைக்கின்றன.

குறிப்பாக, வயதானவர்களுக்கு இந்தப் பிரச்னை வந்து விட்டால் கூடுதலாகச் சிரமப்படுகிறார்கள். கழிவை வெளியேற்ற கஷ்டப்பட்டு முயற்சி செய்யும் அளவுக்கு அவர்கள் உடம்பில் தெம்பு இருப்பதில்லை.

இது ஏன் ஏற்படுகிறது என்று பார்த்தால், பெரும்பாலும் நாமாக உருவாக்கிக் கொள்ளும் காரணங்களால்தான்!

- சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக குறிப்பிட்ட நேரத்தில் பாத்ரூமுக்குப் போக முடியாமல் இருப்பது.
- போதுமான அளவு தண்ணீர் அருந்தாமல் இருப்பது.
- குறைச்சலாக உண்பது, போதுமான அளவு காய், பழ வகைகள் சாப்பிடாமல் இருப்பது.

வேறு ட்ரீட்மெண்ட்களுக்காக எடுத்துக் கொள்ளும் மருந்துகளால் மலச்சிக்கல் உண்டாகலாம். தயிராயிடு சுரப்பு கூடுதலாகவோ குறைவாகவோ இருப்பது, mental depression என்னும் மனநோய், சர்க்கரை வியாதி போன்றவற்றாலும் மலச்சிக்கல் விளையும். மருத்துவ உதவி பெற்று பிரச்னையைத் தீர்க்கலாம்.

அபூர்வமாக ஒருசிலருக்கு Mega Colon என்ற பரம்பரை வியாதி இருக்கும். இவர்களுடைய பெருகுடலில் உள்ள நரம்புகள் சரியாகச் செயல்படாததால் மலத்தை வெளியேற்றுவதற்குத் தேவையான தூண்டுதல் சமிக்ஞைகள் மூளைக்கு அனுப்பப்படுவதே இல்லை. அதனால் மலம் வெளியேறுவதில்லை! இவர்களுக்கு ஆபரேஷன் மூலம் மட்டுமே உதவ முடியும்.

வேறு சிக்கல்கள் இல்லாதபோது மலச்சிக்கலை சுலபமாக நாமே போக்கிக் கொண்டு விடலாம். நேரம் தவறாமல் காலைக் கடன்களை முடிக்க வேண்டும். மனிதன் பழக்கத்துக்கு அடிமை. உட்கார்ந்து பழகினால் சில தினங்களில் குறித்த நேரத்தில் தன்னால் உந்துதல் ஏற்படும்.

தினமும் எட்டு - பத்து டம்ளர் தண்ணீர் குடிக்கணும். நார் சத்து உள்ள உணவுகளை நிறைய சாப்பிடணும். குறிப்பாக சைவ உணவுப் பழக்கம் உள்ளவங்க அசைவ உணவுக்காரங்களை விட அதிகமாக சாப்பிடணும். நார் சத்து உள்ள உணவு

சிக்கல் இல்லாத வாழ்க்கை...

என்பது வாழைத் தண்டு, பேரிச்சம் பழம், அவரை, பீன்ஸ் போன்ற பச்சைக் காய்கறி, கீரை போன்றவை...

'கீரை சேர்த்துக்கோ, பழங்கள் சேர்த்துக்கோ' என்று பெருக்கு பேர் அட்வைஸ் செய்வார்கள். ஆனால் அளவு எவ்வளவு என்று சொல்ல மாட்டார்கள். வழக்கமாக நம் வீடுகளில் அரிசிச் சோறு நிறைய வைத்துக் கொண்டு ஒரு ஸ்பூன் கீரைக் குழம்பு அல்லது பீன்ஸ் பொறியலுடன் சாப்பிடுவோம். இதுக்கு நேர்மாறாக ஒரு கிண்ணம் நிறைய கீரை அல்லது பொறியல் வைத்துக் கொண்டு கொஞ்சமாக சாதம் சாப்பிட வேண்டும். இது ரொம்ப முக்கியம்.

அமெரிக்காவில் இப்போது 'high fibre diet' ரொம்ப பிரபலமாகி வருகிறது. குடல் புற்று நோயைத் தவிர்க்கவும் நார் சத்து உதவுகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் நிரூபிச்சிருக்காங்க.



மலச் சிக்கலைப் போக்கறதுக்கு மருந்துகள் இருக்கு. ஆனால் அவை எல்லாமே habit forming - அதாவது அதைச் சாப்பிட்டுப் பழகிட்டா, அப்புறம் அது இல்லாம முடியாதுங்கற நிலை வந்துடும். இந்த மாதிரி நிலைக்கு ஆளாகறதை விட சரியான உணவுப் பழக்கம், நல்ல தேகப் பயிற்சி, நிறைய தண்ணீர் அப்படின்னு கலபமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிச்சா மலச்சிக்கல் வராமல் பார்த்துக்கலாம்.

முக்கியமா டென்ஷன் இல்லாமல் இருக்கிறது அவசியம். 'ஐயோ, இப்படி மலச்சிக்கல் வருதே' என்கிற விசாரத்துனாலேயே பிரச்னை இன்னும் தீவிரமாகிற வாய்ப்பு இருக்கு.

மனசு படுத்தற பாட்டுக்கு ஒரு உதாரணம் சொல்றேன் :



என்னுடைய பேஷண்ட் ஒருத்தருக்கு ஒரு கட்டி வந்ததுன்னு டெர்ராமைஸின் இஞ்செக்ஷன் போட்டேன். வழக்கமா மலச்சிக்கலால் அவஸ்தைப்படற அவர் அன்னிக்கு என்ன காரணத்துனாலோ அந்தப் பிரச்னையிலிருந்து விடுபட்டார். ஆனா பாருங்க, தன் பிரச்னையைத் தீர்த்தது டெர்ராமைஸின் இஞ்செக்ஷன்தான்ங்கற நம்பிக்கை அவர் மனசுல விழுந்து போச்சு!

அப்புறம் எப்ப மலச்சிக்கல்னாலும் தானே டெர்ராமைசின் இஞ்செக்ஷன் வாங்கி யாராவது டாக்டரைப் பிடிச்சுக் குத்தி விடச் சொன்னார். அது அவருக்கு உதவியாவும் இருந்தது. ரொம்ப நாள் கழிச்சுத்தான் எனக்கு இது தெரியவந்தது! டெர்ராமைசினுக்கு மலச்சிக்கலைப் போக்கற குணம் கிடையாதுன்னு நான் சத்தியம் பண்ணாத குறையா அவருக்குச் சொல்லி நம்ப வைக்கிறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடுச்சு.


மனமே மருந்துங்கறதுக்கு இதைவிட வேற என்ன உதாரணம் சொல்ல முடியுங்கறீங்க!

- டாக்டர் பி.ஆர். சுப்ரமண்யம்


சிக்கல் இல்லாத வாழ்க்கை...



• பிரஜைக்குப் மதிப்பு



• அரசியல் பணிக்கு விருது








• 'பண்பின் சிகரம்'



• 'ஹம்பக்!'



• செருப்பு துடைப்பவர்!

இந்தியாவைச் சுற்றி மூன்று நாடுகளில் பெண் பிரதமர்கள் இருப்பது பற்றி?

● ஸ்ரீவஹிதாமேரி, மணக்காடு.

? 'முதல்வரின் ஆட்சியில் தமிழகம் வன்முறையிலிருந்தும், வறுமையிலிருந்தும் மீட்கப்பட்டு விட்டது' என்று அமைச்சர் கண்ணப்பன் கூறியிருப்பது பற்றி?

! ஹம்பக்! அமைச்சரின் கூற்று உண்மை என்றால் முதல்வருக்கு எதற்காக இத்தனை பாதுகாப்பு? கோடிக்கணக்கான ரூபாய்க்கு நலத் திட்டங்கள் துவக்க விழா எதற்கு?

● க. சந்தானம், பவித்திரமாணிக்கம்.

? ஆவின் நெய் கிலோவுக்கு ரூ.15 திடீர் விலை உயர்வு...?

! மத்திய அரசின் மெத்தனத்தால் காப்பியை மறந்தோம்; சர்க்கரையைக் குறைத்தோம்; இப்போது நெய்க்கு விடைகொடுப்போம்! உடம்புக்கு நல்லதைத்தான் மத்திய, மாநில அரசுகள் செய்கின்றன என்று மனம் மகிழக் கற்றுக் கொள்வோம்! வேறென்ன செய்ய?

● எம். ஜெயலக்ஷ்மி, சென்னை - 44.

? 'ஒரு நாட்டின் கல்வித் துறையில் நல்ல முன்னேற்றங்களைக் கொண்டு வர விரும்பினால் முதலில் வறுமைப் பேயை முழுதுமாக நாட்டை விட்டு அகற்ற வேண்டும்' என்கிறார்களே?

! இது சுயநல அரசியல்வாதிகளின் உல்டா வேலை. நம்பாதீங்க! உண்மை இதற்கு நேர் மாறானது. அனைவருக்கும் சிறந்த கல்வி என்பதுதான் நாட்டின் துரிதமான பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவும்.

● ஏ. குமார், காட்டுக்காளூர்.

? டைம்ஸ் ஆஃப் இந்தியா இதழ் விலை குறைப்பு இங்கும் எதிரொலிக்குமா?

! விலை குறைக்கும் அளவுக்கு இடு பொருள்களின் விலை ஏதும் குறையவில்லை. டைம்ஸ் ஆஃப் இந்தியா விலை குறைப்பு, போட்டா போட்டியின் விளைவு. ஒரு வேளை, "ஏதோ இது ஒன்றாவது விலை குறைந்ததே" என்று மன்மோகன்சிங் மகிழலாம்!

● ஆர். சங்கர், நெய்தவாசல்.

? "போயஸ் கார்டனில் உள்ள தொண்டர்களின் செருப்பைத் துடைப்பேன்" என்று காளிமுத்து கூறியுள்ளாரே?

! செருப்புக்கள் தூய்மைப்படலாம்; உள்ளத் தூய்மை கிட்டாது. போயஸ் கார்டன் பொற்கோயில் அல்ல.

● புளியரை கணேசன், சென்னை.

? "நெடுஞ்செழியன் ஜனாதிபதியாக வரும் வாய்ப்பு பெற வேண்டும்" என்று ஆர்.வி. கூறியிருக்கிறாரே?

! நிச்சயமாக அந்த வாய்ப்பு அவருக்குக் கிட்டாது என்ற தைரியத்தில் வாழ்த்தியிருப்பார்!

● பொன்குமார், சேலம்.

? அரசியல் பணிக்காக 'ஜெ'க்கு விருது வழங்கப்படுகிறதாமே?

! சில விருதுகளைப் பெறுவதால் பெறுபவர் மதிப்பு உயர்கிறது; சில விருதுகளின் தரம் அதனைப் பெறுபவர்களால் நிர்ணயிக்கப்படுகிறது.

● என். அன்பன் சக்தி, காளையார்கோயில்.

? இந்தியாவைச் சுற்றியுள்ள மூன்று நாடுகளில் பெண்கள் பிரதமராக இருப்பது பற்றி?

! மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான் என்றாலும் வாரிசு அரசியல் வலிமையும் வளமும் பெறுவது உறுத்தல்.

● ஆர். கார்த்திகேயன், மதுரை.

? இப்போது வெளிவரும் எந்த திரைப்படமும் நூறு நாள் ஓடுவது அபூர்வமாக உள்ளதே? இது மக்களின் மனமாற்றத்தைக் குறிக்கிறதா?

! மக்களின் மனமாற்றம், திரைப்படங்களின் தரமாற்றம் இரண்டையும்தான்!

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? கிணற்றடியில் குளிப்பது; பாத்ரூமில் குளிப்பது எது இதமானது?

! இளநீரை அப்படியே குடிப்பது; ஸ்ட்ரா போட்டு குடிப்பது எது சுகமானது? அவரவருக்கு எது சௌகரியமோ அதுவே இதம்.

● எஸ். கே. ராமசாமி, சென்னம்பட்டி.

? நாளுக்கு நாள் மனித நேயம் மறைந்து கொண்டு வருகிறதே?

! அப்படி மறைய விடக் கூடாது என்று சிலர் சிந்திக்க ஆரம்பித்திருப்பதே மகிழ்ச்சி தருகிறது. உதாரணமாகப் புதுவையில் "காப்பியக் கழகம்" சார்பில் நடந்த விழாவில் முதல்வர் வைத்தியலிங்கம், ஏ.வி.எம். சரவணனுக்கு "பண்பின் சிகரம்" என்று ஒரு பட்டம் வழங்கியிருக்கிறார். இன்றைய காலகட்டத்துக்குத் தேவைப்படும் ஒரு சிந்தனை. மிகப் பொருத்தமான ஒரு நபருக்கு வழங்கப்பட்ட விருது.

● கே. ஏ. சரவணன், மதுரை. ❑

? இந்திய ஸ்கர்ட்டுகள் இறக்குமதிக்கு அமெரிக்கா தடைவிதித்துள்ளதாமே?

! தங்கள் நாட்டுப் பிரஜைகள் எளிதில் தீப்பற்றக்கூடிய உடை அணியக் கூடாது என்று ஓர் அரசு கவலைப்படுவதில் தவறில்லை. ஆனால் இந்திய ஆடை மட்டுமே அப்படி தீப்பற்றும் என்று நிரூபிக்க முயற்சி செய்வதுதான் இடிக்கிறது. செயற்கை நூலிழை ஆடைகள் பலவும் எளிதில் தீப்பற்றக்கூடியவை என்னும் போது, இந்திய வர்த்தக வெற்றிக்கு இடையூறு செய்ய, பிற நாட்டு ஏற்றுமதியாளர்களால் உருவாக்கப்பட்ட சதித் திட்டம் என்று கருத இடமிருக்கிறது.

● மு. ரவிசந்திரன், சேலம்.

? ராம்தாஸ் நாயக்கின் படுகொலை எதைக் காட்டுகிறது?

! முதலாவது, போலீஸ் முக்கியமென்றாலும் அதை விடவும் போலீஸின் உளவுத் துறை அதிமுக்கியமானது; அதை பலப்படுத்த வேண்டும் என்பதை. இதன் மூலம்தான் வருமுன் காப்பது சாத்தியமாகும். இரண்டாவது, நமது அரசியலில் வன்முறையைத் தூண்டும் வெறுப்புக் கலாசாரம் அதிகரித்து விட்டது; இதை மாற்றி காந்திய நெறியில் அன்புக் கலாசாரத்தை ஊக்குவித்து, அதன் மூலம் மனமாற்றங்களை ஏற்படுத்த எல்லா அரசியல் தலைவர்களும் உடன்பாடு கொள்வது அத்தியாவசியம்.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஏ. சரவணன்,
10, ஏ. ஏ. ரோடு,
ரத்தினபுரம்,
மதுரை - 625 011.

● கோ. குப்புசாமி, கோரணம்பட்டி.

? 'சமூக விரோதிகளுடன் சரத்பவாருக்குத் தொடர்பு உண்டு' என்று மராட்டிய மாநில டி.ஐ.ஜி.யே குற்றம்சாட்டியுள்ளாரே?

! பதவியில் உள்ள ஒரு உயர் போலீஸ் அதிகாரி இவ்வாறு குற்றம்சாட்டியதில் பவாரின் பிரபைக்கு பலத்த பாதிப்பு என்பதை மறுக்க முடியாது. எனினும், தம் மீதான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை தொடர்பான வழக்கில்தான் நீதிமன்றத்தில் உல்லாஸ் ஜோஷி இப்படி குற்றம்சாட்டியுள்ளார் என்பதைக் கவனிக்க வேண்டும். முன்னாள் முதல்வர் நாயக்கையும் இதில் இழுத்திருக்கிறார். ஆழ்ந்து நோக்கினால் அதிகார வர்க்கத்தையும் அரசியல்வாதிகள் ஆட்டிப் படைக்க ஆரம்பித்து விட்டது புரியும். பவாருக்கு அரசியல் விரோதிகள் ஏராளம்.

"எழுதுவது எப்படி?" நூலின் முதல் தொகுப்பு 1969ல் வெளியாவதற்கு, 1966ல் நடைபெற்ற கல்கி பத்திரிகையின் வெள்ளி விழாதான் காரணம்.

தொகுப்புக்கு நல்ல வரவேற்பு இருந்ததால், "முதல் தொகுப்பையே மறுபடி வெளியிடுவதை விட, முதல் தொகுப்பில் இடம்பெறாத பிரபல எழுத்தாளர்களிடம் கட்டுரைகள் கோரி 'எழுதுவது எப்படி?' இரண்டாம் தொகுப்பையே கொண்டு வந்து விடலாமே" என்றார் பழனியப்ப செட்டியார். இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக நாலு தொகுப்புக்களை பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

நாலாவது தொகுதியில் "நாடகம் எழுதுவது எப்படி?" என்பது பற்றி எழுதியுள்ள கோவை அனுராதா, தம் கட்டுரையில், "1969ல் நான் ஆரம்ப எழுத்தாளனாக இருந்தேன். கோவை ராஜ வீதியிலுள்ள, 'பழனியப்பா பிரதர்ஸ்' புத்தகக் கடையில் எழுதுவது எப்படி நூலைக் காசு கொடுத்து வாங்கிப் படித்தேன். இந்த நூலின் அடுத்து வரும் தொகுப்புகளில் ஒன்றில் நானே நாடகம் எழுதுவது எப்படி என்ற தலைப்பில் எழுதுவேன் என்று அன்று நினைக்கவில்லை" என்று எழுதியிருக்கிறார்!

முதல் மூன்று தொகுதிகளிலும் எழுதச் சௌகரியப்படாமல் இருந்த ஜெயகாந்தன், இந்த நான்காவது தொகுப்பில் சிறுகதை பற்றி எழுதியுள்ளார். அதிலிருந்து சில மணித் துளிகள் :

● என்னைப் பொறுத்தவரை சிறுகதை எழுதுவது எப்படி என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுவதை விட, ஒரு சிறுகதை எழுதி விடுவதே சுலபமாயிருக்கும். சிறுகதை எழுதி எழுதி, சிறுகதை எழுதுவது எப்படி என்று கற்றுக் கொண்டவன் நான். எந்த ஒரு கலை வடிவமும் அதில் ஒருவனுக்குள்ள ஈடுபாட்டினால்தான் கைவரப் பெறுகிறது.

● "நாவல் என்பது ஒரு பெரிய மாளிகை மாதிரி. சிறுகதை என்பது ஒரு சாளரம்" என்று புதுமைப்பித்தன் சொல்லுவார். இதன் பொருள் சிறுகதை என்பது மாளிகையின் ஒரு பகுதியான சாளரம் என்பது அல்ல. ஒரு சாளரத்தின் வழியே எண்ணற்ற மாளிகைகளைக் காணலாம்; மலைத் தொடர்களையும் வான வெளியையும் காணலாம். சாளரம் என்பது கண்களுக்கு இணையானது. சின்னஞ்சிறிய கண்கள் எண்ணற்ற, விரிந்து, பரந்த விசாலமான பிரபஞ்சத்தையே விழுங்கி விடும் தன்மை பெற்றவை. அது காரணம் பற்றியே புதுமைப்பித்தன் சிறுகதையை இலக்கியத்தின் சாளரம் என்று சொன்னார்.

● சிறுகதைக்கு அடிப்படையும் கருவும் வித்தும் ஒரு கருத்தே ஆகும். அந்தக் கருத்து, எழுதுபவன் மனத்தில் எவ்வளவு ஆழமாகக் கூர்மையாகப் பதிந்து, பாதித்து, அவனை அலைக்கழிக்கிறதோ, அந்த அளவு அந்தச் சிறுகதையும் ஆழமானதாய்க் கூர்மையானதாய் படிப்பவர் நெஞ்சத்தில் - எப்படி எழுதுபவன் நெஞ்சத்தில் - எழுந்து அலைக்கழித்ததோ, அதனினும் ஆயிரம் மடங்கு அதிகமான அலைகளையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தி அந்த மூலக் கருத்தை முழுமையாகப் பதியவைத்து விடும்.

● 'பொழுதுபோக்குக்காக இலக்கியம்' என்கிற வாதம் மிகவும் பொல்லாதது. பொழுதுபோக்குக்காகக் காதல் என்ற பெயரில் ஆண்-பெண் உறவு கொள்ளுகிற போக்கு எப்படி ஒருவனை அல்லது ஒருத்தியை ஒழுக்க வீழ்ச்சியில் கொண்டு போய் விடுமோ, அதே போன்ற வீழ்ச்சியில் இந்தப் 'பொழுதுபோக்குக்காக இலக்கியம்' என்கிற வாதம் கொண்டு போய் விட்டு விடும்.

● மொழி, நடை, வருணனை இவை மட்டும் ஒரு சிறந்த சிறுகதையை உருவாக்கிட முடியாது. மேற்சொன்ன இவற்றில் பல குறைபாடுகள் இருந்தாலுங் கூட, ஒரு நேரிய கருத்து, ஒரு சீரிய சிந்தனை உலகத் தரத்திற்கு ஒரு சிறுகதையை எந்த மொழியிலும் உருவாக்கி விடும்.

(எழுதுவது எப்படி? - தொகுப்பாசிரியர் : "மகரம்" கே. ஆர். கல்யாணராமன்; பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 600 014; விலை ரூ. 85.)

உலகத் தரத்துக்கு ஒரு சிறுகதை



கமிஷனருக்கொரு கடுதாசி!

அன்புள்ள கார்ப்பரேஷன் கமிஷனருக்கு,

தெருக்களில் திரியும் மாடுகளைப் பிடித்து பவுண்ட்டில் அடைக்கப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள். என்னைவிட, டிராஃபிக் போலீஸ்காரர்கள்தாம் மிகவும் சந்தோஷப்படுவார்கள். அதிலும் வி.ஐ.பிக்கள் செல்லும் பாதையில் ட்யூட்டியில் இருக்கும் போலீஸ்காரர்கள் உங்களுக்குக் கோயிலே கட்டிக் கும்பிடுவார்கள்.

கமிஷனர் சார், கூடவே ஒரு விண்ணப்பம் :

தெருக்களில் அலையும், சமயா சமயம் தெரியாமல் ஊளையிடும், நாய்களைப் பிடித்துக் கொண்டு போகவும் ஏதாவது ஏற்பாடு செய்தீர்களானால், உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டாகும்.

குறைந்தபட்சம் இரண்டு மாடுகளைப் பிடித்தால் ஒரு நாயாவது பிடிக்க வேண்டும் என்றாவது உத்தரவு போடுங்கள். எங்கள் ஃப்ளாட் கட்டட காம்பவுண்டுக்குள்ளேயே நாலு நாய்கள் சதா வாசம் செய்கின்றன. (ஒன்றுக்கு ஒன்று சொந்தமா என்று தெரியவில்லை.)

அதிகாலையில் மாமியாரைக் கோவை எக்ஸ்பிரஸில் ஏற்றிவிடக் கீழே வந்தால், உர்உர் என்று நாய் உறுமியதில், மாமியார் பயந்துபோய் மறுபடி உள்ளே போய்விடப் பார்த்தார். மூணு மாசம் இருந்து கண் ஆபரேஷன், காது ஆபரேஷன் எல்லாமாக ஏராளமாகச் செலவு வைத்த மாமியார், பெரிய மனசு பண்ணி ஊருக்குப் புறப்படும் சமயத்தில், நாயைச் சாக்காக வைத்துக் கொண்டு மறுபடி மூணு மாசம் டேரா போட்டுவிட்டால்?

தெரு விளக்கு வேறு அணைந்திருந்ததா, எது மாமியார், எது நாய் என்று தெரியாமல் "சீ... சும்மா இரு!" என்று சொல்லிவிட்டேன். மாமியார் தன்னிடம் தான் சொன்னதாக நினைத்து உர்ரென்று (நாய் மாதிரியே) முறைத்துப் பார்த்தார். (ஆனால் குரைக்கவில்லை.)

அப்புறம் எப்படியோ மாமியாரைக் கோவை எக்ஸ்பிரஸில் ஏற்றிவிட்டேன் என்று வையுங்கள்.

இன்னொரு காரணமும் இருக்கிறது, கமிஷனர் சார். எங்கள் கட்டடத்தில் பல் வேறு ஃப்ளாட்டுகளுக்கு வருகிறவர்கள் திரும்பக் கீழே போக முடிவதில்லை. அன்றைக்கு ஒரு நடுத்தர வயசுக்காரர் ஓடி வந்து, "கீழே நாய் போக விடாமல் படுத்துகிறது. கொஞ்சம் வந்து சொல்லுங்கள்!" என்றார். நாயிடம் நான் என்ன சொல்லுவது? எனக்கு நாய்மொழி எப்படித் தெரியும்?



ஒரு மாதிரி சமாளித்து, கீழே அவரை கேட் வரை கொண்டு போய் விட்டுவிட்டு, "நீங்கள் எங்கே வேலை பார்க்கிறீர்கள்?" என்று சும்மா கேட்டு வைத்தேன்.

"சினிமாவுக்கு நாய்களை ட்ரெயின் பண்ணுகிறேன்!" என்றார்.

ஆகவே, 'மாடுகளைப் பிடிக்க தயவு செய்து சினிமா ஜல்லிக்கட்டு ஹீரோக்களைப் போடாதீர்கள்' என்றும் யோசனை கூற விரும்புகிறேன்.

இப்படிக்கு,
அபிராமபுரத்தான்

வட்டமேஜை

♦ மதவெறியைத் தூண்டி மக்களைக் கவர்ந்து விடலாம் என்பது பா.ஜ.கவின் தவறான கருத்து. பா.ஜ.கவின் ஆரம்ப கால வளர்ச்சியையும், தற்போதைய சரிவுகளையும் ஒப்புநோக்கும் போது மக்கள் எப்படி முற்போக்காகச் சிந்திக்கிறார்கள் என்பது புலனாகும். தமிழ் சினிமாவின் வக்கிரக் காட்சிகள் போல தனது நடவடிக்கைகளை பா.ஜ.க. இதே ரீதியில் தொடர்ந்தால், கழுதை தேய்ந்து கட்டெறும்புதான் மிஞ்சும்.

இராமேஸ்வரம்,
மு. முருகேசன்,

♦ பாரதிய ஜனதா கட்சி எதைச் செய்தாலும் மதவாத முத்திரை குத்துவது வாடிக்கையாகி விட்டது. உயிரைப் பணயம் வைத்து ஸ்ரீநகரில் தீவிரவாதிகளுக்கு சவால் விட்டு ஜோஷி தேசியக் கொடி ஏற்றியபோது எந்த மாநிலத்தில் தேர்தல் வந்தது? "நாட்டுக்காக" திரைப்பட விமரிசனத்தின் கடைசி பகுதியில் குறிப்பிட்டது போல தேசபக்தி அரை அவுன்ஸ் இருந்தால் சொந்த நாட்டில் சொந்த தேசியக் கொடியை ஏற்றுவதைக் குறைசொல்ல மாட்டீர்கள்.

சிதம்பரம்,
ஆர். பாலகிருஷ்ணன்.

♦ 'நாட்டுக்காக' விமரிசனம் படித்த பிறகும் அப்படத்தைப் பார்க்காதிருக்க முடியுமா? பார்த்தேன்! ஆகா!

மதுரை,
இரா. கல்யாணசுந்தரம்.

♦ ஃபாஷன் தலைநகரான திருப்பூர் - உழைக்கத் தயாராயிருக்கும் அனைவருக்கும் வாழ்க்கையில் ஒரு "திருப்பத்தை" ஏற்படுத்துகின்ற ஊர் என்பதை அறிந்தேன்... திருப்பூர் நகரின் பலவித சிறப்புக்களை, பிரச்னைகளை நேர்த்தியாகப் படம் பிடித்துக் காட்டியமைக்குப் பாராட்டுக்கள்.

திருவண்ணாமலை,
என். சண்முகம்.

சிந்துபாத் முடியும் வரை சிரிக்க வைத்து விட்டீரே...

♦ "குட்டி ஜப்பான்" என்று சொல்லும் அளவுக்கு தொழில் துறையில் முன்னேறி வரும் திருப்பூரைப் பற்றி கவர் ஸ்டோரியில் தெரியாத பல விஷயங்களைத் தெரியப்படுத்தி விட்டீர்கள். பலே!

கவுந்தப்பாடி,
த. குணசேகரன்.

♦ பானுகுமாரின் "தலைக்கு மேல் ஒரு கூரை" போட்டிக் கதை, மனசாட்சிக்கும் நடைமுறை வாழ்வுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தை அருமையாக விவரித்தது. ஏழ்மையைப் பிரதிபலிக்கும் கமலாவின் படத்தை தத்ரூபமாக வரைந்து கதைக்கு வலு சேர்த்திருக்கிறார் ஓவியர் மாருதி.

தஞ்சாவூர்,
வளர்மதி ஆசைத்தம்பி.

♦ அமெரிக்காவை அதிர வைத்த இரட்டைக் கொலை வழக்கு என்னையும் அதிர வைத்தது!

திருச்சி, எம். கணேசன்.

♦ 'ஜுனூன் முடிந்தவுடன் கடன்...' ஜோக்கைப் போட்டு, எங்களையெல்லாம், தமிழகத்தில் பஞ்சாயத்துத் தேர்தல் அல்லது வீரப்பனைப் பிடித்தல் அல்லது தினத்தந்தியில் சிந்துபாத் கதை முடியும் வரை சிரித்துக் கொண்டிருக்க வைத்து விட்டீர்களே!

அரக்கோணம்,
எல். கோபாலகிருஷ்ணன்.

♦ ஹூப்ளியில் நடந்தது என்ன என்பது பற்றி சுருக்கமாக அதே சமயம் புரியும்படி தெளிவாக எழுதியிருந்தீர்கள். ஈத்கா மைதானத்தின் நடைமுறை வரலாற்றை முதன் முதலாக எங்களுக்குப் படிக்கக் கொடுத்தது கல்கி மட்டுமே. வெல்டன்!

மொரட்டுப்பாளையம்,
க. நா. இராஜேஸ்வரன்.

♦ சக்கரவர்த்தித் திருமகனில் இந்திரனுடைய சாரதி பெயர் மாலதி என்று அச்சாகியுள்ளது. (கல்கி 28.8.94) அது மாதலி என்று இருக்க வேண்டும்.

ஸ்ரீரங்கம், ஜி. சத்தியமூர்த்தி.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

இவர் ஒரு மாமனிதர்



சுரேந்திர மேத்தா

இவர் உருவாக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க பெயர்

பாபாலால்

இவர் அந்தப் பெயருக்குப் பெருமை சேர்த்ததற்குக் காரணம்

இவர் இப்போது இருக்கும் இடம்:

Mehta

சுரேந்திர மேத்தா

வைரங்களின் உலகிலே இவரே ஒரு நிறுவனம். 50 ஆண்டுகளுக்கும் மேலாக, வைரங்களுக்கு மிகப்பிரபலமான இடமாக **பாபாலால்** திகழ்ந்ததற்கு இவரே காரணம். இவருடைய தேர்ச்சியும் தெளிவான அறிவும் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. இவர் தம் திறமைகளை எல்லாம் நம்பமான தம் குழுவினருக்கும் அளித்தார்.. சகோதரர் **நரேஷ்,** மற்றும் மகன்களாகிய **துஷார்** மற்றும் **அபய்** ஏதேனும் ஒரு தோஷம் இருந்தால் அதை முதல் பார்வையிலேயே கண்டு கொள்ளக்கூடிய வியக்க வைக்கும் திறன் இவர்களுக்கு உண்டு.

மேத்தா ஜுவல்லரி

இரண்டு வருடங்களுக்கு முன்பு இவர்கள் புதிதாக ஒரு முயற்சி மேற்கொண்டார்கள்--மேத்தா வைரங்கள் என்றாலே பாபாலால் என்று சொல்லும் அளவுக்குப் புகழ் பெற்ற அதே நேர்த்தியான வேலைப்பாடும் நுல்லியமும் இப்போது மேத்தா என்ற பெயருக்கும் பொருந்தும். எனவே இப்போது மேத்தா வைரம் மிகவும் புகழ்பெற்றுத் திகழ்வதில் வியப்பு என்ன இருக்கிறது !

Mehta
JEWELLERY

40, திருமலை பிள்ளை ரோடு
தி. நகர், சென்னை 600 017 தொலைபேசி: 828 3130
நேரம்: காலை 10.00 முதல் பிற்பகல் 1.30 வரை
பிற்பகல் 2.30 முதல் இரவு 7.00 வரை

ARTIGI/1534